கல்கி



KALKI செப்டம்பர் 23, 1951 4 அணா



எங்கள் வீட்டில் எப்பொழுதும்
டால்டாவையே சமையல் செய்ய
தேர்ந்தெடுக்கிறோம்—அது நாங்கள்
அன்றாடம் செலவு செய்யும் சக்தியை
ஈடுசெய்ய உதவுகிறது!
DALDA



சென்னை · பிரபாத்
ஸாகர்
ஸரஸ்வதி
மற்றும்
தமிழ் நாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ்
சர்வாதிகாரி
டைரக்ஷன் · T. R. சுந்தரம்.
வசனம் · ஆசைத்தம்பி....


7-CLOCK
SLOTTED
BLADE
7-CLOCK
SLOTTED BLADE
7 o'clock
ஸெவன் ஒ'கிளாக் பிளேடுகள்

"எனது கைகளை உபயோகிப்பதே மிக சிரமமாயிருந்தது" — பிறகு "க்ருஷன்" வழியைப் பின்பற்றியதால்

கீல்வாதத்தினின்றும் விடுபட்டேன்





ஒரு காலத்தில் இவர் கீல்வாதத்தினால் மிகவும் அவஸ்தைப் பட்டார். பிறகு அதைத் தடுக்கும் முறையை அறிந்ததிலிருந்து பல வருஷங்களாக அதிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். சுலபமானதும், அவசியம் தெரிந்திருக்க வேண்டியதுமான ஒரு சிகிச்சை அது; அவரது கடிதத்தைப் படியுங்கள் :—

"பிரதி குளிர்காலத்திலும் எனது தோள்களில் மிகுந்த வலிகாரணமாகக் கைகளை உபயோகிப்பதே சிரமமாயிருந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்னர், "க்ருஷன்" உப்புக்கள் உபயோகித்துப் பார்த்ததில் ஒரு வாரத்தில் நல்ல குணம் கண்டதுமன்றி மெத்த ஆறுதலும் அடைந்தேன். ஒரு மாதத்தில் வலி முழுவதும் மறைந்ததுமல்லாமல் நல்ல ஆரோக்கியமும், புத்துயிர் பெற்ற யௌவன உணர்ச்சியும் பெற்றிருப்பதாக உணர்ந்தேன். ஒருவர் சாதாரணமாக நினைப்பதுபோல், இந்த யௌவன உணர்ச்சி தற்காலிகமானதாக அல்லாமல் நிரந்தரமாகவே இருந்தது." —C. A., Poona

கீல் வாதத்தின் வலிகளும், விறைப்பும் சாதாரணமாக தேகத்திலுள்ள அபரிமிதமான மூத்திர அமிலங்களால் உண்டாக்கப்படுகின்றன. "க்ருஷனில்" உள்ள ஆறுவித உப்புக்கள் ஈரலையும், மூத்திரக்காய்களையும், நன்கு வேலை செய்யுமாறு தூண்டுவதுடன் உபத்திரவங்களுக்குக் காரணமான அதிகப்படி மூத்திர அமிலங்களை உடலிலிருந்து வெளியேற்றவும் உதவுகிறது. தினந்தோறும் உட்கொள்ளும் "சிறு அளவு" க்ருஷன், கழிவு பதார்த்தங்கள் உடலில் தங்கிப் புளித்துப் போகாதவாறு குடல்களை நன்கு இயங்குமாறு செய்வதனால் மூத்திர அமிலங்கள் ஒரு போதும் உடலில் தேங்கி நிற்க முடிவதில்லை. எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



Ad. KSID. 16.

Doric

டோரிக்

சிறந்த பிரயோசனமுள்ள

பேனைக்கள்

ரெகுலர் ரூ. 6-



லீவர் - பில்லர

ரூ. 6 8

1 இந்த அளவிலேயே உள்ள மற்றப்பேனைக்களைவிட அதிகமான மசியை கொள்கிறது.

2 மசிகசிந்து ஒழுகாமலிருக்க மாறுதலான உத்தரவாத முள்ளது.

3. தங்கமுலாம் பூசிய இரிடியம் தோய்த்த உறுதியான நிப்.

4 அநேகவித கவர்ச்சிகர அழகிய கலர்களில் உள்ளன.

5. இது ஒரு டோரிக் தயாரிப்பு



டோரிக் பேனை சரியாக எழுதாவிட்டால் எங்களுக்குத் திருப்பி அனுப்புங்கள். இலவசமாக நாங்கள் பதில் பேனை அனுப்புகிறோம்.

எல்லா டீலர்களிடமும் கிடைக்கும் அல்லது

டோரிக் ப்ராடக்ட்ஸ்

பம்பாய்: பம்பாய் மியூச்சுவல் பில்டிங், ஹார்ன்பி ரோடு — பம்பாய்.
கல்கத்தா: 10, சௌரிங்கி.
பெங்களூர்: 2, சவுத் பரேட்.





48 மணிநேரத்தில் 14 பாஷைகள்


14 பாஷைகளின் ஆசான் என்னும் எங்கள் புத்தகம் ஒன்றின் உதவியால் ஹிந்தி, ஆங்கிலம், குஜராத்தி, மராத்தி, பர்மிய பாஷை, சீன பாஷை, தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளை 48 மணி நேரத்தில் கற்றுக் கொள்ளுங்கள். வி. பி. பி. யில் அனுப்ப இன்றே எழுதுங்கள். ஒன்றின் விலை ரூ. 5. தபால் செலவு அணா 12 தனி.

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்

மின்சார சக்தியின்றியே ரூ. 15/-ல் ரேடியோ தயாரிக்கும் விதமும் மாதம் ரூ. 200/-வரை சுலபமாக சம்பாதிக்கும் அளவுக்கு மின்சாரத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். ஒன்றின் விலை ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12 தனி.

வீட்டில் சினிமா

நீங்கள் கவிைத்திருக்கும்பொழுது இந்த சின்ன யந்திரம் மூலமாக, வீட்டில் பலவித கலர் சித்திரங்களைப் பார்த்து, ஆனந்தத்தை அடையலாம். சினிமா சித்திரங்களுடன் விலை ரூ. 3-0-0, பாக்கிங் தபால் செலவு ரூ. 1-0-0 தனி.



அமெரிக்கன் மாடல் ரோல் பிலிம் பாக்ஸ்

காமிரா

திருஷ்டி உபகரணத்துடன் உயர்தலென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலையில் மலிவான மேன்மையான காமிரா. பிலிம் நெ. 120-ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் $2\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$ சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்தரவாதம். விலை ரூ. 9-8-0, ஸ்பெஷல் டி-லக்ஸ் ரகம் ரூ. 11-8-0. V.P.P. சார்ஜ் ரூ. 1-8-0 தனி. தோல் கேஸ் ரூ. 3.

பாக்கெட் ரப்பர் பிரஸ்



(பிரிண்டிங் மெஷின்)

எல்லா ஆங்கில எழுத்துக்களும் கொண்ட சிறிய அச்சடிக்கும் இயந்திரம். இதை ஒன்றைவாங்கி ஐந்தே நிமிஷங்களில் உங்களது லெட்டர் பாடுகள், பில்கள் பெயர்கள் இவைகளை அச்சடித்துக் கொள்ளுங்கள். அச்சடிக்கும் பாடு இங்க் முதலியவைகளுடன் விலை ரூ. 5-0-0. வி. பி. பி. சார்ஜ் ரூ. 1-4-0 தனி.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படல் வேண்டும்

BENGAL TRADERS, (2 K) KANWARIGANJ. ALIGARH. U. P. (INDIA)



SISTA'S-KM(5)36A-Tamil

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11 இதழ் 8 | 1951 செப்டம்பர் 23 | கர ஆ புரட்டாசி 7உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 11 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 8

கல்லை வயிரமாக்கலாமோ? புல்லை நெல்லாக்கலாமோ?

மகாகவி பாரதியார் வருகின்ற பாரதத்துக்கு வரவேற்பு விழா நடத்தியபோது,

"ஒற்றுமைக்குள் உய்யவே—நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய்!—வா! வா! வா!"

என்று பாடிப் பரிந்து அழைத்தார். வருகின்ற புதிய பாரதத்தின் இணையிலாப் பிரதிநிதியாக நாம் பண்டித ஜவாஹர்லால் நேருவையே கருதி வந்திருக்கிறோம். ஒளி படைத்த கண்ணுடையவரும் உறுதி கொண்ட நெஞ்சுடையவரும் அவரேயென்று நம்பி வந்திருக்கிறோம். நமது பழம்பெரும் நாடு ஒற்றுமைப்பட்டு உய்வதற்கு ஒரு பெருஞ் செயல் புரியப் போகிறவர் அவரே என்றும் எண்ணி வந்திருக்கிறோம். அந்த 'ஒரு பெருஞ் செயல்' இப்போது பண்டித நேரு செய்து முடித்தது தானா? காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினாமாச் செய்து, காங்கிரஸுக்கு ஒரு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து, பழைய காரியக் கமிட்டியைக் கலைத்து, புதிய காரியக் கமிட்டியை அமைத்தது தானா? நாடெல்லாம் ஒற்றுமைக்குள் உய்வதற்கு நேருஜி புரிந்த ஒரு பெரும் அருஞ்செயல் இதுதானா? நாம் சொல்ல முடியாது! யாரும் சொல்லமுடியாது! ஜோசியர்கள் நேருஜியின் ஜாதகம் பார்த்துச் சொல்கிறோம் என்று முன் வந்தால், நேருஜி அவர்களுக்குத் திருச் சாத்துச் சாத்தி அனுப்பிவிட்டே மறு காரியம் பார்ப்பார். ஆகையால் காலம் என்னும் தேவதைதான் அதைச் சொல்ல முடியும்.

புதிய காரியக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் பிரமுகர்களின் ஜாபிதாவைப் பத்திரிகைகளில் படித்தபோது பொது மக்களுக்கு அவ்வளவு உற்சாகம் ஏற்பட்டிருக்க முடியாது. காரியக் கமிட்டியிலிருந்து போனவர்களைக் காட்டிலும் வந்தவர்கள் எந்த விதத்தில் உயர்ந்தவர்கள் என்ற சந்தேகம் தோன்றும். புதிய அங்கத்தினர்களினாலே நேருவுக்கோ, காங்கிரஸுக்கோ, தேசத்துக்கோ எந்த விதத்தில் பலம் ஏற்பட்டுவிடப் போகிறது என்ற ஐயமும் ஏற்படும். ஆனால், இதற்குக் காரணம் புதிதாகக் காரியக் கமிட்டியில் வந்திருக்கும் அங்கத்தினர் அல்ல.

ஒரு பெரிய ஆலமரத்துக்குப் பக்கத்தில் வேப்ப மரம் ஒன்று இருந்தால், வேப்ப மரம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அது சிறிதாகவே நம் கண்களுக்குத் தோன்றுமல்லவா? அதே வேம்பு சிறிய குத்துச் செடிகள் முளைத்திருக்கும் பொட்டைக் காட்டின் மத்தியில் இருந்தால், அது பெரிய ராட்சத விருட்சமாகக் காட்சி அளிக்கும்.

காங்கிரஸ் மகாசபை ஆதி காலத்தில் தாதாபாய் நௌரோஜி, சுரேந்திர நாத பானர்ஜி, கோபாலகிருஷ்ண கோகலே, ஸர் பிரோஸிஷா மேத்தா, லோகமான்ய திலகர், லாலா லஜபதி ராய் முதலிய இமயமலை போன்ற மாபெருந் தலைவர்களால் நடத்தப்பட்டு வந்தது.

இடைக் காலத்தில்,—அதாவது இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால்,—காந்தி மகாத்மா, பண்டித மோதிலால் நேரு, தேசபந்து தாஸ், வி. ஜே. பட்டேல், வல்லபாய் பட்டேல், அலி சகோதரர்கள், அஜ்மல் கான், அன்சாரி, எஸ். சீனிவாச ஐயங்கார், கொண்ட வெங்கடப்பையா, சுபாஷ் சந்திர போஸ், ஸென் குப்தா, சத்தியமூர்த்தி முதலிய மாபெரும் தியாகத் தலைவர்கள் காங்கிரஸ் நிர்வாகப் பீடங்களில் வீற்றிருந்து தொண்டு செய்து வந்தார்கள். அவர்களெல்லாம் நம்மைக் கை விட்டுவிட்டு, வானுலகம் சென்று விட்டார்கள். அப்படிப்பட்ட தீர புருஷர்கள்,—அறிவாற்றலில் தலைசிறந்தவர்கள்,—ஆலவிருட்சம் போன்றவர்கள் போய்விட்ட படியால், இந்த நாளில் காரியக் கமிட்டியில் வரும் பெயர்களைப் பார்க்கும் போது நமக்கு அவ்வளவாக பிரமிப்பு உண்டாகவில்லை; பயபக்தியும் ஏற்படவில்லை.

இது நம்மைக் கைவிட்டுப் போய்விட்ட அந்த மகா புருஷர்களின் குற்றமே யன்றி, ஏதோ உயிரோடிருந்து இன்னும் தேசத் தொண்டு செய்து வருகிறார்களே, அவர்களுடைய குற்றம் ஆகாது. அத்தகையவர்களைப் புதிய காரியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்த ஜவாஹர்லால்ஜியை நாம் குற்றம் சொல்வதும் முறையாகாது.

"காரியக் கமிட்டியை மாற்றி அமைக்கப் போகிறேன்" என்று ஜவாஹர்லால்ஜி சொன்னார். சொன்னபடி நிறைவேற்றி விட்டார். பழைய அங்கத்தினர்களில் பலரை நீக்கிவிட்டுப் புதியவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். அந்த வரையில் நாம் திருப்தி அடைய வேண்டும்.

முக்கியமாக, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் கோஷ்டிப் பூசல்களுக்குப் பலம் கொடுத்துவந்த பொதுக் காரியதரிசிகள் இருவரையும் நீக்கிப் புதிய பொதுக் காரியதரிசிகளை நியமித்தது பெரியதொரு மாறுதல். காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு ஒரு நல்ல குலுக்கல். புதிய பொதுக் காரியதரிசிகளும் அங்கத்தினரும் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள் என்று யார் சொல்ல முடியும்! பழையவர்களின் வழியைப் புதியவர்கள் பின்பற்ற மாட்டார்கள் என்று யாரேனும் உறுதி கொடுக்க முடியுமா! முடியாது.

ஆனால் நாம் நம்பியிருப்பது புதிய கமிட்டியையும் அல்ல; புதிய பொதுக் காரியதரிசிகளையும் அல்ல. ஜவாஹர்லால் நேருவின் சிந்தைத் துணிவிலேயே நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

> "ஆலைப்பலாவாக்கலாமோ? அருக்கணங்கள்
> வாலை நிமிர்த்த வசமாமோ?"

என்று பழைய காலத்துப் புலவர்கள் பாடிப் போனார்கள். ஆனால் நம் புது யுகக் கவியான பாரதியார் சொன்னது என்ன!

> "கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
> கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
> புல்லைநெல் லெனப் புரிதல்—பன்றிப்
> போத்தைச் சிங்க ஏறுக்கல்"

முதலிய காரியங்களை எல்லாம் மகா சக்தியின் அருளால் சாதிக்கலாம் என்று கூறினார்.

> "—இவை
> நாடும்படிக்கு வினைசெய்து—இந்த
> நாட்டோர் கீர்த்தி எங்கும் ஓங்கக்—கலி
> சாடுந் திறன் எனக்குத் தருவாய்—அடி
> தாயே! உனக்கு அரியதுண்டோ?"

என்று பராசக்தியைப் பார்த்து வரம் கேட்டார். பாரதியார் கேட்ட வரத்தை இன்று ஜவாஹர்லால் நேருவுக்கு அருளும்படி ஜகன்மாதாவைப் பொதுமக்கள் வேண்டிக் கொள்ள வேண்டும். அத்துடன் நம்மால் இயன்ற வரையில் ஜவாஹர்லால்ஜியின் வீரத் தோள்களுக்குப் பலம் தந்து உதவுவதற்கும் சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

திருச்செந்தூர் முருகா! தேர்தல் கமிட்டியைக் காப்பாற்று!

தமிழ் நாட்டுத் தேர்தல் கமிட்டியார் தேசம் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கங்கே காங்கிரஸ் அபேட்சகராக மனுப்போட்டிருப்பவர்களைப் பார்த்து, தட்டிப் பார்த்து, செல்லுமா செல்லாதா என்று ஆராய்ந்து பார்த்து, சரியான அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதற்காகத் தான் அவர்கள் ஊர்வலம் வருகிறார்கள்.

இப்படி வலம் வருகிறவர்களுக்கு, திக்கெலாம் புகழும் திருநெல்வேலி ஜில்லா ஒரு பெரிய சோதனையாக ஏற்பட்டிருக்கிறது.

மற்ற எந்த ஜில்லாவைக் காட்டிலும் அந்த ஜில்லாவில் அதிகமான ஆட்கள் காங்கிரஸ் அபேட்சகர்களாக மனுப் போட்டிருக்கிறார்கள்.

எண்பத்து மூன்று பேரிடமிருந்து என்னூயிரத்து மூந்நூறு ரூபாய் ரொக்கமாகக் 'கைக்கு வந்துவிட்டது. இது குதூகலமான விஷயந்தான். ஆனால் அத்தனை பேரில் சரியான அபேட்சகர்களைப் பொறுக்குவது சுலபமான காரியமன்று.

இவ்வளவு அதிகமான அபேட்சகர்கள் அந்த ஜில்லாவில் மட்டும் முளைப்பதற்குக் காரணம் என்ன! காங்கிரஸ் அபிமானம் காரணமா! சட்ட சபையில் புகுந்து தேச சேவை செய்ய வேண்டும் என்னும் அடங்கா ஆர்வம் காரணமா!

அல்லது,—

அந்த ஜில்லாவின் இப்போதைய எம். எல். ஏ.க்களில் சிலர் தங்கள் பதவி காரணமாக நல்ல மிச்சம் பண்ணியிருக்கிறார்கள் என்ற வதந்தி ஒரு வேளை காரணமாயிருக்குமா!

ஆம்; இந்த வருந்தத் தக்க விஷயத்தை இச்சமயத்தில் குறிப்பிட்டே தீர வேண்டும். இல்லாவிடில் நியாயம் பிறப்பதற்கும் உண்மை வெல்வதற்கும் இடம் இல்லாமற் போகும்.

எந்த ஜில்லாவிலும் தற்போதுள்ள சட்டசபைப் பிரதிநிதிகள் பிரமாதமாக எதையும் சாதித்து விட்டார்கள் என்று பெயர் எடுத்து விடவில்லை. சில ஜில்லாக்களிலோ காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் காங்கிரஸுக்கு வேண்டிய அளவு அபகீர்த்தியைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

ஆனால், திருநெல்வேலி ஜில்லா எம். எல். ஏ.க்களில் பெரும்பாலோரைப் போல் வேறு எந்த ஜில்லா எம். எல். ஏ.க்களும் அவ்வளவு பிரமாதமான பெயர் எடுத்து விடவில்லை.


"வரும் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாய்ப் பொறுக்கி யெடுக்கப் படுகிறவர்களுக்குச் சில யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும்" என்று ஜவாஹர்லால் நேரு அடிக்கடி வற்புறுத்துகிறார், அந்த நிபந்தனையைக் கண்டிப்பாக நிறைவேற்றுவது என்றால், திருநெல்வேலி பழைய எம். எல். ஏ.க்கள் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

யோசனையும் ஆலோசனையும் புனராலோசனையும் செய்து மக்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒழுக்கம் படைத்த சரியான அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும்.

ஜவாஹர்லால் நேருவின் புதிய காரியக் கமிட்டியில் பல பெயர்கள் மாறியிருப்பதே மக்களுக்கு ஓரளவு உற்சாகம் உண்டாக்கியிருக்கிறதல்லவா! அதுபோல் பழைய மனிதர்களுக்குப் பதில் புதிய மனிதர்கள் வருவதினாலேயே மக்களுக்கு ஓரளவு திருப்தி உண்டாகும்.

பொது ஊழியத்தில் நேருஜியைப் போன்ற மாபெருந் தலைவர்கள் நீடித்திருக்க வேண்டும். அன்றி, சாதாரண மனிதர்களைக் கொண்டே காரியம்

கடும் பரிசோதனை!



" வரப் போகும் பொதுத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுப்பதில் யோக்கியப் பொறுப்பே முக்கியமாகக் கவனிக்கப்படும்." —ஜவாஹர்லால்ஜி

நடப்பதென்றால், ஒரு கூட்டம் போய் இன்னொரு கூட்டம் வருவதினாலேயே பொது ஜனங்கள் ஓரளவு திருப்தி அடைவார்கள்.

"நம்முடைய ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தினோம். நமக்குப் பிடிக்காதவர்களை அனுப்பிவிட்டுப் புதியவர்களை அமர்த்தினோம்" என்ற திருப்தி மக்களுடைய உள்ளத்தில் குடிகொள்ளும்.

நமது மாகாண தேர்தல் கமிட்டியாருக்குத் திருநெல்வேலி ஜில்லா ஒரு பெரிய சோதனை; அதில் வெற்றி பெற்றால் அவர்களுக்கு அது பெரும் சாதனை; வெற்றிபெறாவிடில் தலைவேதனைதான்!

ஒழுக்கமுள்ள சிறந்த அபேட்சகர்களை இம்முறை பொறுக்காவிட்டால் திருநெல்வேலி ஜில்லாவில் தனிப்பட்ட முறையில் பலர் காங்கிரசுடன் போட்டியிட்டே தீருவார்கள்.

சென்ற ஜில்லா போர்டு தேர்தலில் திருச்சியில் நடந்தது போன்று இந்தப் பொதுத் தேர்தலில் திருநெல்வேலியில் நடைபெறலாம்; அதாவது காங்கிரசின் நெற்றியில் பட்டைநாமம் தீட்டப்படலாம்! அத்தகைய விபரீதம் நேராதபடி திருச்செந்தூர் முருகப் பெருமான் நமது தேர்தல் கமிட்டியைக் காப்பாற்றி அருள்வாராக!

உயிர்ப் பிச்சை கிடைக்குமா?

தென்னாட்டில் கர்நாடக சங்கீதக் கலையைப் போற்றி வளர்த்துப் பாதுகாத்து வந்த சங்கீத சபைகள் பல மாண்டு போய்விட்டன. எஞ்சியுள்ள சங்கீத சபைகளும் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கின்றன.

உயிரை வைத்துக் கொண்டிருக்கும் சங்கீத சபைகளின் பிரதிநிதிகள் சென்ற வாரத்தில் ஒரு நாள் மயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலில் கூடினார்கள். (இது கற்பனையல்ல,—சத்தியமாக நடந்தது என்பதை இன்னொரு பக்கத்தில் பிரசுரமாகியிருக்கும் புகைப் படத்திலிருந்து அறியலாம்.) "கர்நாடக சங்கீதத்துக்கு உயிர்ப் பிச்சை தாருங்கள்" என்று நமது நிதி மந்திரியையும் மற்ற மந்திரிகளையும் வேண்டிக் கொண்டார்கள். சங்கீத சபைகளுக்கு இப்போது விதிக்கப்படும் தண்டவரியான தமாஷா வரியை நீக்கி உதவும்படி கேட்டுக் கொண்டார்கள். இந்தக் கோரிக்கைக்கு ஆதாரமான காரணங்களைச் சாங்கோபாங்கமாகக் கூறித் தீர்மானமும் நிறைவேற்றினார்கள்.

"சங்கீத சபைகள் வரியை எடுக்கும்படி கோரவில்லையே!" என்ற காரணத்தை இனி நம் அரசாங்க மந்திரிகள் சொல்ல இயலாது.

சமீபத்தில் நம் மந்திரிகள் மூன்று கோடி ரூபாய் வருமானம் தரக்கூடிய புது வரிகளைச் சட்டசபையில் பிரேரித்தார்கள். ஆனால் பொது ஜன அபிப்பிராயம் விரோதமாயிருந்தபடியால், சட்டசபை அங்கத்தினரும் ஆட்சேபித்தபடியால், இரண்டரைக் கோடி வருமானம் வரக்கூடிய வரிகளைக் கொண்டு வராமல் விட்டு விட்டார்கள்.

சங்கீத தண்ட வரியைத் தள்ளிவிடுவதால் சர்க்கார் அடையக்கூடிய நஷ்டம் பிரமாதம் ஒன்றுமில்லை. சில ஆயிரக் கணக்கிலேதான் இருக்கும். இந்தச் சில ஆயிரம் ரூபாயை விட்டுக் கொடுப்பதின் மூலம் கர்நாடக சங்கீதக் கலைக்குப் பெருதவி செய்ய முடியும் என்றால், அதை நம் மந்திரிகள் செய்வதற்கு ஏன் தயங்க வேண்டும்!

சாதாரணமாக "ஹிந்து" பத்திரிகை பல்லவிதக் கோரிக்கைகளை யெல்லாம் கவனிப்பதில்லை; கவனித்தாலும் தலையிட்டு அபிப்பிராயம் எழுதுவதில்லை. அப்படிப்பட்ட "ஹிந்து" பத்திரிகை சங்கீத சபைகளுக்குத் தமாஷா வரியை எடுக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஆதரித்து வற்புறுத்தியிருக்கிறதென்றால், விஷயம் எவ்வளவு முக்கியமானது என்று சொல்லவும் வேண்டுமா!

நம் மந்திரிகள் இம்மாகாணத்துக்குச் செய்யும் கடைசி கன்மையாக இது இருந்துவிட்டுப் போகட்டும். இந்த வருஷத்திலேயே, சங்கீத சபைகளுக்குப் போடும் வரியை ரத்து செய்து கலா ரஸிகர்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்களாக.

மகாத்மா இன்று இருந்தால்...?

காந்தி மகான் தம் வாழ்நாளில் பல முறை உண்ணாவிரதம் இருந்தார். வேறு விதத்தில் தீர்க்க முடியாதென்று தோன்றிய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக உண்ணாவிரதம் இருந்தார். தம்மைச் சேர்ந்தவர்களின் மனமாற்றத்துக்காக உண்ணாவிரதம் இருந்தார். தமது அந்தரங்க சீடர்கள் செய்த குற்றங்களுக்குப் பிராயச்சித்தமாக உண்ணாவிரதம் இருந்தார்.

காந்தி மகான் இன்று உயிரோடு இருந்தால், தமது சீடர்களில் ஒருவரான சுவாமி சீதாராம் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதத் தவறுக்காகத் தாமும் உண்ணாவிரதம் இருப்பார்.

காந்திஜியின் அந்தரங்க சீடர்கள் என்று தங்களைப் பாவித்துக் கொண்டவர்களில் பலர் மகாத்மாவின் கொள்கைகளை நன்கு அறிந்து கொள்ளவில்லையென்பதற்கு சுவாமி சீதாராம் அவர்களின் உண்ணாவிரதமே சாட்சியாகும்.


ஆந்திர மாகாணத்தைத் தனி மாகாணமாக்குவதற்கு யாரும் குறுக்கே நிற்கவில்லை. அது ஒரு நிர்வாகப் பிரச்னை. மன ஒற்றுமைப்பட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். மன ஒற்றுமை ஏற்படாவிட்டால் வோட் எடுத்துத் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

ஜனநாயக இந்தியாவில்,—வயது வந்தவர்களுக்கெல்லாம் வோட்டுரிமை கிடைத்திருக்கும் இந்தியாவில்,—மாகாணப் பிரிவினை செய்யும் பொருட்டு உண்ணாவிரதம் இருந்து உயிரைவிட வேண்டிய அவசியம் என்ன!

ஒரே ஒரு நோக்கத்துக்காகச் சுவாமி சீதாராம் உண்ணாவிரதம் இருந்தால், அதற்கு ஒருவாறு நியாயம் கற்பித்துச் சொல்லலாம்.

"மாகாணப் பிரிவினை விஷயமாக ஆந்திர சகோதரர்களிடம் ஒற்றுமை ஏற்படவில்லை. அந்த ஒற்றுமை ஏற்படும் பொருட்டு, உண்ணாவிரதம்

ஒற்றுமையில் ஒரு விதம்!



"சோஷலிஸ்டு கட்சியும் புதிய பிரஜா கட்சியும் பொதுத் தேர்தலில் ஒத்துழைப்பதென்று தீர்மானமாகி யிருக்கிறது." —செய்தி



"தமாஷா வரி முதலிய காரணங்களினால் சங்கீத சபைகள் ஜீவித்திருப்பது எவ்வளவு கஷ்டமாகி விட்டது என்பதை எடுத்துச் சொல்லச் சங்கீத சபைகளின் தூது கோஷ்டி மந்திரிகளைப் பேட்டி காணப் போகிறது."

—செய்தி

இருக்கிறேன்" என்று சொன்னால், அது காந்திய முறை என்று ஒருவாறு ஒப்புக் கொள்ளலாம்.

ஆனால் அத்தகைய காந்திய உண்ணாவிரதத்தைக் கொள்வதற்கு ஒருவருக்குப் பக்குவ நிலை வேண்டும்; தபோபலம் இருக்க வேண்டும்.

சுவாமி சீதாராம் அந்த அளவில் தபோபலம் பெறவில்லை யென்று தெரிவாகிறது.

தாழ்த்தப்பட்ட சகோதரர்களை ஹிந்து சமூகத்திலிருந்து பிரிக்க ஸர் ராம்ஸே மக்டானல்டு முயன்றபோது மகாத்மா காந்தி அதை எதிர்க்க வேறு வழியில்லை யென்று கண்டார். உண்ணாவிரதத்தை மேற் கொண்டார். அதன் பலன் என்ன! ஹிந்து சமூகத்தில் அதற்கு முன்பு என்றும் காணாத ஒற்றுமை தளிர்த்தது. டாக்டர் அம்பேத்கர், ஸ்ரீ எம். ஸி. ராஜா முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர்களும் மனமாறுதல் பெற்றார்கள். பண்டித மாளவியா முதலிய வைதிக ஹிந்துத் தலைவர்களும் மனமாறுதல் அடைந்தார்கள். ஒற்றுமைத் தீர்மானத்தில் அனைவரும் கையொப்பமிட்டார்கள். மகாத்மாவின் தவம் கைமேல் பலன் அளித்தது.

இப்போது சுவாமி சீதாராமின் உண்ணாவிரதத்தின் பலன் என்ன! ஆந்திர சகோதரர்களிடம் முன்னைக் காட்டிலும் அதிக வேற்றுமை ஏற்பட்டுச் சண்டை முற்றி வருகிறது. ஆந்திர மாகாணக் கமிட்டி உண்ணாவிரதத்தை அடியோடு கண்டித்திருக்கிறது. சென்னை நகரத்தை விட்டுக் கொடுப்பதா, இல்லையா என்பது பற்றி அபிப்பிராய பேதம் அதிகமாகி யிருக்கிறது. ஆந்திர நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் இரண்டு கட்சிகள் முளைத்து வருகின்றன. ஏற்கெனவே உள்ள கட்சிப் போராட்டங்களுக்கு மேல் இது ஒன்று புதிதாகச் சேர்ந்திருப்பதுதான் கண்ட பலன்.

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவாஹர்லால் நேருவின் 'ஆக்ஞை'யை முன்னிட்டு சுவாமி சீதாராம் தமது சீடர்களுடனே உண்ணாவிரதத்தை இதற்குள் கை விட்டிருப்பார் என்று நம்புகிறோம்.

காந்தி மஹாத்மாவின் புனிதமான சத்தியாக்கிரஹ ஆயுதத்தையும் உண்ணாவிரதத்தையும் அவருடைய சீடர்கள் இவ்விதம் தவறாக உபயோகித்து மக்களுக்குத் தப்பான வழி காட்டக் கூடாதென்று கேட்டுக் கொள்கிறோம்.

பஞ்சாங்கத்துக்கு ஆபத்து!

இருந்தாலும், இந்த ஜவாஹர்லால் நேரு மிகவும் பொல்லாதவர்! ராஜரிஷி டாண்டனைத்தான் அப்படிப் பாடுபடுத்தி வைத்தார் என்றால், பஞ்சாங்கத்தின் தலையிலுமா இப்படி ஒரே போடாய்ப் போட வேண்டும்! ஜோசியம், ஜாதகம், ராகு காலம், தியாஜ்யம், வாரசூலை — எல்லாவற்றையும் சேர்த்து இப்படி ஒரே தாக்கலாய்த் தாக்கியது தகுமா, முறையா, தர்மந்தானா!

செப்டம்பர் 9உ இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூளும் என்று வடநாட்டில் சில ஜோசியர்கள் சொன்னார்களாம். "அதன்படி நடக்கிறதா என்று பாருங்கள்; அப்படி நடக்காவிட்டால் ஜோசியத்தை நம்பாதீர்கள்!" என்று நேருஜி மக்களுக்குப் போதித்திருக்கிறார்.

அழகா யிருக்கிற தல்லவா! ஹிந்துக்களின் ஜோசிய சாஸ்திரத்தைப் பொய்யாக்குவதற்காகவே ஜனாப் லியாகத் அலிகான் வேண்டுமென்று 9உ யுத்தம் ஆரம்பிக்காமலிருந்து விட்டார்! அது ஜோசிய சாஸ்திரத்தின் குற்றமா! பாகிஸ்தான் சூழ்ச்சியை ஊகித்துத் தெரிந்து

கொண்டு, ஜோசிய சாஸ்திரத்தை மெய்யாக்கு வதற்காக, பண்டித ஜவாஹர்லால் நேருவேனும் 9-ந்தேதி யுத்தம் ஆரம்பித்திருக்கக் கூடாதா! அப்படிச் செய்யாமல், கீழே தள்ளிய குதிரை குழியும் பறித்தது போல், ஜோசியத்தை அவர் தாக்குவது எவ்வளவு பொல்லாத்தனம்! நமது பேராசிரியர் காரசார சர்மாவைப் போன்றவர்கள் நேருஜியைப் பதிலுக்குத் தாக்கத் தொடங்கி யிருப்பதில் வியப்பு என்ன!

ஏதோ போகட்டும்! ஜவாஹர்லால் நேரு பொல்லாத மனிதராகவே இருக்கட்டும்!

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்று தமிழ் மறை கூறுகிறது. ஆகையால் நேருஜி ஜோசியத்தைப் பற்றிச் சொல்வதில் ஏதேனும் பொருள் இருக்கிறதா என்று நேயர்கள் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாக.

வான சாஸ்திரம் என்பது உண்மை ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சாஸ்திரம். அதைப்பற்றிச் சந்தேகமில்லை.

வானத்தில் இயங்கும் நட்சத்திரங்களையும் கிரஹங்களையும் ஆராய்ந்து, அவற்றின் சஞ்சாரத்திற்கும் பூலோக நிகழ்ச்சிகளுக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கக் கூடுமா என்னும் விஷயமாக ஆதி காலத்திலிருந்து சில அறிவாளிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இதைத்தான் ஜோசிய சாஸ்திரம் என்கிறார்கள். இத்தகைய ஜோசிய சாஸ்திரமும் இருந்து விட்டுப் போகட்டும். ஆராய்ச்சி நடத்துகிறவர்களும் நடத்தட்டும். யாரும் குறுக்கே நிற்கவில்லை.

ஆனால் ஜோசிய சாஸ்திரத்தை மனிதர்களுடைய வாழ்க்கையுடன் சம்பந்தப்படுத்துவதில் ஏதேனும் பலன் உண்டா என்பது வேறு விஷயம். நல்ல பலன் இல்லையென்றாலும், தீமை விளையாமல் இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனிதர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றி நமது வேத சாஸ்திர புராணங்களில் மூன்றுவிதக் கொள்கைகள் கூறப்படுகின்றன:—

1. விதியின் பிரகாரமே எதுவும் நடைபெறும். விதியை மாற்ற எதனாலும் இயலாது.

2. கர்ம பலனை யொட்டித்தான் எல்லாம் நிகழும்; கர்ம பலனை எதனாலும் மாற்ற முடியாது.

3. கடவுளின் கருணை எல்லாவற்றிலும் பெரியது. பக்தியினால் கடவுளின் கருணையைப் பெறலாம். பக்தியினால் விதியையும் கர்ம பலனையுங் கூட வெற்றி கொள்ளலாம்.

இப்படி மூன்று கொள்கைகளை நம் முன்னோர்கள் அருளியிருக்கிறார்கள். இந்த மூன்றையும் சமரசப் படுத்த முடியும் என்பதையும் சில மகான்கள் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

ஆனால் இந்த மூன்றில் எதற்காவது ஜோசியம் பயன்படுமா என்று பார்க்க வேண்டும்.

1. ஜோசியம் பார்த்து விதியை மாற்றி அமைக்க முடியுமா?

2. ஜோசியத்தினால் கர்ம பலனை அநுபவியாமல் தப்ப முடியுமா?

3. ஜோசியத்தினால் கடவுளின் கருணையைப் பெற முடியுமா?

இந்த மூன்றில் ஒன்றும் முடியாது என்றால், மனித வாழ்க்கைக்கு வேறு எந்தவிதத்தில் ஜோசிய சாஸ்திரம் பயன்படக் கூடும்?

இவை சிந்தித்துப் பார்த்து முடிவு காண வேண்டிய விஷயங்கள். பண்டித ஜவாஹர்லால் நேருவின் மீது ஆத்திரப் படுவதினால் எந்தக் காரியமும் ஆகிவிடாது. பகுத்தறிவினால் ஒப்புக் கொள்ளக் கூடிய முறையில், ஜோசிய சாஸ்திரம் மனித வாழ்க்கைக்கு எந்த விதத்தில் பயன்படக் கூடும் என்பதை ஜவாஹர்லால்ஜிக்கு யாராவது எடுத்துச் சொல்ல முன் வரட்டுமே!

அட்டைப்பட விளக்கம்

எத்தனை விலையுயர்ந்த விளையாட்டுப் பொம்மைகள் வாங்கிக் கொடுத்தால்தான் என்ன? குழந்தைகளுக்கு என்னமோ அம்புலி மாமாவைக் காணும் போது ஏற்படும் மகிழ்ச்சியும் உல்லாசமும் வேறு எதிலும் உண்டாவதில்லை. இயற்கையன்னை அளித்திருக்கும் இவ் விளையாட்டுப் பொருளுக் கிணையாக உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை யாராலும் சிருஷ்டிக்க முடியவில்லை.

தாய்மாரும் குழந்தையின் இந்த உணர்ச்சியை நன்கு அறிந்தவர்களாதலால் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள். குழந்தை அழுதால், 'அதோ பார், அம்புலி மாமா!' என்று பிறைச் சந்திரனைச் சுட்டிக் காட்டுவார்கள். 'சாதம் சாப்பிட மாட்டேன்' என்று அடம் பண்ணினால் சந்திரனைச் சுட்டிக் காட்டி,

"நிலா நிலா வா! வா!
நில்லாமலே ஓடி வா!"

என்ற பாட்டைப் பாடி ஊட்டி விடுவார்கள்.

அப்படிப்பட்ட தாயையும் குழந்தையையும் சித்திரிக்கும் நமது அட்டைப் படத்தைப் பார்க்கும்போது பெரியாழ்வார் பாடல் ஒன்று நமக்கு நினைவு வருகிறது.

சக்கரைக் கையன்
தடங்கண்ணால் மலரவிழித்து
ஒக்கலை மேலிருந்து
உன்னையே சுட்டிக்காட்டும்காண்
தக்க(து) அறிதியேல்,
சந்திரா! சலம் செய்யாதே!
மக்கட் பெறாத
மலடனல்லையேல் வா, கண்டாய்!

பாரதி விழா அதிர்ச்சிகள்

ரா. கி.

பாரதியார் விழாவை முன்னிட்டு பாரதி பிறந்த எட்டயபுரத்துக்கு நான் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு தந்தி கிடைத்தது. அது அகில உலக நாதஸ்வர ஏக சக்ராதிபதியான திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களிடமிருந்து வந்தது. "பாரதியார் விழாவில் எட்டயபுரம் பாரதி மண்டபத்தில் யாம் விஜயம் செய்து கச்சேரி செய்வோம். கட்டாயம் வந்து கைங்கரியம் செய்தே தீருவோம்!" என்று அதில் குறிப்பிட்டிருந்தது. இது எனக்கு எவ்வளவு அதிர்ச்சி அளித்திருக்கும் என்று நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். "பாரதி பக்தி எனக்குத் தான் அதிகம்" "நான்தான் உண்மையான பாரதி பக்தன்" என்றெல்லாம் பலரும் உரிமை கொண்டாடுகிறார்களே? — கவிச் சக்கரவர்த்தியிடம் பக்தி கொண்டவர்களில் தலை சிறந்த பக்தர் நமது நாதஸ்வர சக்கரவர்த்தி என்றல்லவா இப்போது உறுதியாகிறது?—என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். மற்றொரு பக்கத்தில் "இது உண்மையான தந்தி தானா? யாரேனும் 'கலாட்டா'வுக்காக அடித்து விட்டார்களா? தந்தி உண்மையில் திரு ராஜரத்தினம் பிள்ளை கொடுத்திருந்தாலும் அவர் நிச்சயமாக வந்து சேர்வாரா?" என்றெல்லாம் ஐயப்பாடுகள் எழுந்தன. பதில் தந்தி கொடுத்து உறுதிப்படுத்திக் கொள்ள நேரமும் இல்லை. எனவே, நடக்கிறது நடக்கட்டும் என்று பிரயாணமானேன்.

பிரயாணத்தில் என்னுடன் வந்தவர் இலங்கை இந்தியக் காங்கிரஸ் அக்கிராசனரான ஸ்ரீ கே. ராஜலிங்கம். இலங்கையில் உள்ள ஏழு இலட்சம் தோட்டத் தொழிலாளி இந்தியரின் இணையிலாத் தலைவராகிய ஸ்ரீ ராஜலிங்கம் பல மாதங்களுக்கு முன்னமேயே இந்த ஆண்டு எட்டயபுரம் பாரதி விழாவுக்கு வருவதாகச் சொல்லியிருந்தார். ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்பு இவர் ஜினிவாவில் நடந்த அகில உலக தொழிலாளர் மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் சென்றார். பிறகு, திரும்பி வருவதைப் பற்றித் தகவலே தெரியவில்லை. திடீரென்று விழாவுக்கு முதல் நாள் ஆகாச விமானத்தில் வந்து குதித்தார். இலங்கைக்குத்



திரும்பி வந்து, அங்கே அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த உபசாரங்களை யெல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு, மறுநாளே இந்தியாவுக்குப் பிரயாணப்பட்டு வந்ததாக அறிந்தேன். கொடுத்த வாக்கை இவர் நிறைவேற்றிய விதத்தை நினைத்து வியப்பதா அல்லது இவருடைய பாரதி பக்தியைப் பற்றி ஆச்சரியப்படுவதா என்று தெரியாமல் திகைக்க வேண்டியதாயிற்று. பாரதி விழாவில் இது இரண்டாவது அதிர்ச்சி.

மூன்றாவது அதிர்ச்சி கோவில்பட்டி ரயில்வே நிலயத்தில் ஏற்பட்டது. ரயில் பிரயாணத்தின் போது ஸ்ரீ ராஜலிங்கம் அவர்களுக்குக் கொஞ்சம் எச்சரிக்கை செய்திருந்தேன். "எட்டயபுரத்தில் ஏதோ பிரமாதமாக நடக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். எட்டயபுரம் ராஜா அவர்கள் ஊரில் இல்லை. ஜமீன்தாரி விஷயமாக மன்றாடச் சென்றிருக்கிறார். மற்ற நண்பர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்த சிரத்தை குன்றி விட்டது. இந்தியாவின் இயற்கைப் பண்புக்கு ஏற்பப் பரஸ்பரப் பூசல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையால் ஏற்பாடுகள் ஒரு மாதிரியாகத்தான் இருக்கும்" என்று சொல்லித் தயார்ப்படுத்தியிருந்தேன். ஆனால் கோவில்பட்டி நிலயத்தில் ஸ்ரீ ராஜலிங்கம் முதலியவர்களை வரவேற்பதற்காக மாலையுங் கையுமாகக் காத்திருந்த கூட்டத்தைக் கண்டதும் என்னுடைய பேச்சில் எனக்கே அவநம்பிக்கை உண்டாகி விட்டது. ஸ்ரீ ராஜலிங்கம் அவநம்பிக்கைப் படக் கேட்பானேன்? எட்டயபுரத்துப் பாரதி அன்பர்கள் அத்தனைபேரும் அங்கே காத்திருந்தார்கள். ஸ்டேஷன் வாசலில் ஒரு போட்டி. "இந்தக் காருக்கு வரவேண்டும்!" "இந்தக் காரிலேதான் வந்து ஏற வேண்டும்!" என்று. ஸ்ரீ ராஜலிங்கத்தின் பாடு திண்டாட்டமாகி விட்டது. அப்போது எனக்கு என்ன தோன்றியது என்றால்:— இம்மாதிரியான போட்டி ஏற்படுவது நல்லதுதான். திருவையாற்றில் கூடச் சின்னக் கட்சி என்றும் பெரிய கட்சி என்றும் வித்வான்கள் பிரிந்து நின்று போட்டி போட்டு உற்சவம் நடத்தியபோது எவ்வளவு உற்சாகமாக நடந்தது? அதைப் போல்

எட்டயபுரத்திலும் நடந்தால் நல்லது தானே? ஆனால் ஒரு பிரிவினை மட்டும் செய்து விட்டால் மிக நலமாயிருக்கும். ஒரு கட்சியார் விழாவுக்கு வருகிறவர்களை வரவேற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது; இன்னொரு கட்சி விழாவுக்குப் பிறகு போகிறவர்களை வழியனுப்பும் பொறுப்பை ஒப்புக் கொள்ள வேண்டியது. இப்படி வேலையைப் பிரித்துக் கொண்டால் எவ்வளவோ நன்மை உண்டு. மகாநாடுகளுக்கும் விழாக்களுக்கும் வருகிறவர்களை உபசரிப்பது சாதாரணமாகப் பிரமாதமாயிருக்கும். ஆனால் போகும்போது யாரும் ஏனென்று கேட்க மாட்டார்கள். வண்டி வாகன வசதிகள் இல்லாமல் திண்டாடுவது சர்வ சாதாரணம் அல்லவா? * * *

சரி; எட்டயபுரம் போய்ச் சேர்ந்தோம். மண்டபத்தையும் மண்டப மைதானத்தில் பந்தல் அலங்காரங்களையும் ஸ்ரீ ராஜலிங்கம் கண்டு மகிழ்ந்தார். எட்டயபுரம் நண்பர்களின் சிரத்தைக் குறைவு பற்றி நான் கூறியதைக் கண்டிக்கவும் தலைப்பட்டார்.

மறுநாள் அதாவது 11-ந்தேதி காலையில் ஸ்ரீ சிவஞான கிராமணியார் தமது சீடகணங்களுடன் வந்து சேர்ந்தார். மண்டபத்தின் எதிரில் அவர் கொடி ஏற்றி வைத்ததும் விழா ஆரம்பமாகி விட்டது. ஆயினும் மத்தியானம் வர வேண்டியவர்கள் வந்து சேர்வார்களா என்ற கவலை குறையவில்லை.

விழாவை ஆரம்பித்து வைப்பதற்குக் கனம் பெருமாள்சாமி ரெட்டியார் புதுடில்லி அ. இ. கா. கமிட்டி கூட்டத்திலிருந்து நேராக வந்து சேர்ந்ததும் இன்னொரு அதிர்ச்சி ஏற்பட்டது. நாதஸ்வர ஏகசக்ராதிபதி சாக்ஷாத் ராஜரத்தினம் பிள்ளை வந்தே விட்டார் என்று அறிந்ததும் இன்னொரு பெரும் அதிர்ச்சி. மாஸ்கோவுக்குப் போவதற்காகப் பாஸ்போர்ட்டை எதிர்பார்த்துப் பரபரப்பினால் காலைத் தட்டிக் கொண்டிருந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் சென்னையிலிருந்து காரில் வந்து இறங்கியதும் மற்றொரு மகத்தான அதிர்ச்சி.

இப்படி அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சியாக அளித்த இவ்வாண்டு பாரதி விழா குறிப்பிட்ட சிறிது காலத்துக்கு முன்னதாகவே ஆரம்பமாயிற்று. பாரதி பக்தியில் திளைத்த நாடகக் கலைஞர் திரு டி. கே. சண்முகம் தெய்வ வணக்கமும் பாரதியார் புகழ் மாலையும் பாடினார். கனம் பெருமாள்சாமி ரெட்டியார் தாம் தெலுங்கர் என்றும் தமிழ் அதிகம் தெரியாது என்றும் அவையடக்கம் கூறிக் கொண்டு கச்சிதமான பிரசங்கம் ஒன்று செய்து விழாவைத் தொடங்கி வைத்தார். ஸ்ரீ கந்தசாமி செட்டியார் கனம் மந்திரி அவர்களுக்குப் பஞ்சாயத்து போர்டின் உபசாரத்தை வாசித்து அளித்தார். பாரதி மண்டப பராமரிப்பு சபையின் சார்பாக ஸ்ரீ சுப்பையா மூப்பனார் படித்தளித்த பத்திரங்கள் விருந்தினரைத் தலை குனிய அடித்து விட்டன! அபாரமான தமிழ் நடையில் பாராட்டுப் புகழ்ச்சிகளுடன் அவை திகழ்ந்தன.

இவ்வாண்டு பாரதி விழாவுக்குத் தலைமை வகித்து நடத்திய பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்கள் நீண்ட காலமாகத் தமிழ் அன்னைக்குப் புரிந்து வரும் தொண்டு அனைவரும் அறிந்ததே யாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீ சேதுப் பிள்ளை "குமரன்" பத்திரிகையில் பாரதியார் கவிதைச் சிறப்பைக் குறித்துப் பல கட்டுரைகள் தொடர்ந்து எழுதியவர். கம்பன் கவிதையில் திளைத்ததுபோல் பாரதி கவி இன்பத்திலும் மூழ்கியவர். அவருடைய தலைமைப் பிரசங்கம் எப்படியிருந்திருக்கும் என்று சொல்ல வேண்டுமா, என்ன? எனினும், அவர் கூறிய கருத்துக்களில் ஒன்று சில நண்பர்களுக்கு ஆத்திரம் ஊட்டி விட்டது. காவேரி முதலிய நதிகளைப் பற்றிப் பாரதியார் அடைமொழியின்றி அப்பட்டமாகக் கூறிவிட்டு, பாண்டிய நாட்டு நதிகளைக் குறித்து மட்டும், "தமிழ் — கண்டதோர் வையை பொருனை நதி!" என்று அடைமொழி சேர்த்துக் கூறியுள்ளதை அவர் குறிப்பிட்டார். இதைக் கேட்ட சோழநாட்டு அன்பர்கள், "ஆமாம்! ஆமாம்! 'வையையிலும் பொருனையிலும் தமிழ்தான் உண்டு; தண்ணீர் கிடையாது' என்பதைப் பாரதியார் அருமையாகத்தான் சொல்லியிருக்கிறார்!" என்று முணு முணுத்தார்கள்.

பின்னர், இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜலிங்கம் அவர்கள் தமிழ் மறை தந்த திருவள்ளுவரின் சிறந்த வர்ணப் படத்தைத் திறந்து வைத்தார். அவர் தம் சொற்பொழிவில் ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார். சமீபத்தில் ஜீனிவாவிலிருந்து திரும்புகாலையில் அவர் லண்டனுக்கும் சென்றார். அங்கே நடந்து வரும் Festival of Britain என்னும் மாபெரும் தேசிய விழாவைப் பற்றி ஸ்ரீ ராஜலிங்கம் கூறினார்:— "ஆங்கில தேச மக்களுக்கு நம்மை விட அதிகமான ரேஷன் தொல்லைகள் இருக்கின்றன. நாலாறு பேருக்கு ஒரு முட்டை வீதம் பகிர்ந்து தரப்படுகிறது. இன்னும் எவ்வளவோ பற்றாக் குறைகள்; கஷ்டங்கள். ஆயினும் அவர்கள் மூக்கால் அழுது புலம்பிக் கொண்டு உட்கார்ந்திருக்க வில்லை. பிரமாதமான முறையில் கலை விழாக்களும் இலக்கிய விழாக்களும் கொண்டாடுகிறார்கள். இவற்றின் மூலம் வாழ்க்கையில் உற்சாகமும் குதூகலமும் அடைகிறார்கள். இந்த உற்சாகமும் குதூகலமும் தேசிய முன்னேற்றத்துக்கான பெரு முயற்சிகளைச் செய்வதற்கு அவர்களுக்குப் பலம் தருகின்றன. அது போலவே நமது நாட்டிலும் பாரதி விழா போன்ற விழாக்களின் மூலம் மக்களின் சோர்வைப் போக்கி உற்சாகத்தை வளர்க்க வேண்டும். யாழ்ப்



இந்த மாத ஆரம்பத்தில் சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் தமிழ் நாட்டிலுள்ள பல சங்கீத சபைகளின் பிரதிநிதிகள் கூடி, சங்கீத சபைகள் நடத்தும் சங்கீத—நடனக் கச்சேரிகளுக்குத் தமாஷா வரியை எடுத்து உதவி புரியும்படி சர்க்காரைக் கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். மேற்படி கூட்டத்துக்கு விஜயம் செய்த சங்கீத சபைப் பிரதிநிதிகளை மேலே காணலாம்.

பாணத்தில் தமிழ் விழா கோலாகலமாக நடந்தது. அதில் மத்திய இலங்கையிலுள்ள ஏழுலட்சம்தோட்டத்தொழிலாளிகள்நேரில் கலந்து கொள்ள வில்லைதான். ஆயினும் தாய் நாட்டிலிருந்து தலைவர்கள் வந்து தமிழ் விழா சிறப்பாக நடத்தியது பற்றிய செய்திகளை அவர்கள் கேட்டு உற்சாகமும் பெருமிதமும் அடைந்தார்கள். இது எங்களுடைய உரிமைப் போராட்டத்துக்கு எவ்வளவோ ஆக்கம் அளித்தது!......"

இவ்வாறு கூறி, "சந்திரா "வினால் தீட்டப் பெற்ற திருவள்ளுவரின் வர்ண சித்திரத்தை ஸ்ரீ ராஜலிங்கம் திறந்து வைத்தார். படத்தின் பின்புலத்தில்,

" குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்."

என்ற பாடலின் கருத்து அழகிய ஓவியமாகச் சித்திரிக்கப்பட் டிருந்தது.

ஒரு விதத்திலே திருவள்ளுவர் அன்று பாக்கிய சாலியானார் என்று சொல்லலாம். ஏனெனில், இராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரப் பொழிவைக் கேட்கும் வாய்ப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று அவருக்குக் கிடைத்தது அல்லவா?

ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை தமது சீடரான காரைக்குறிச்சி அருணாசலம் அவர்களுடன் சேர்ந்து சுமார் ஒன்றரை மணி நேரம் நாதஸ்வரம் வாசித்தார். அப்போது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரியும் பூமாரியும் கலந்து பொழிவது போலவே இருந்தது.

திரு ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் இவ்வளவு ஆர்வத்துடன் பாரதி விழாவுக்கு விஜயம் செய்து கச்சேரி நடத்திவிட்டுத் திரும்பிப் போகும்போது வாகன வசதி கிடைக்காமல் சிறிது சிரமப்பட்டார் என்று அறிந்தேன். இச்சம்பவம், இவ்வருஷத்துப் பாரதி விழாவின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுத் திறமையுடன் நடத்திக் கொடுத்த ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குச் சிறிது வருத்தத்தை அளித்தது. ஆனால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அந்த சிரமத்தைக்கூடப் பொருட் படுத்தாமல் உற்சாகத்துடனேயே புறப்பட்டுச் சென்றார். கடைசியில் அவரை வண்டி ஏற்றி அனுப்பிய நண்பர்கள் என்னிடம் வந்து "பாருங்கள்! ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளைக்கு உண்மையில் கோபம் வந்திருந்தால் அவருடைய நாதஸ்வரத்தினால் எங்களைத் தீட்டாமல் விட்டிருப்பாரா? எங்கள் பேரில் காயமே இல்லை, பார்த்துக் கொள்ளுங்கள்" என்று நகைக் காட்டினார்கள்.

அதை நானும் ஒப்புக்கொண்டு, "ஆனாலும் அடுத்த வருஷத்திலிருந்து வழியனுப்புவதற்கென்று ஒரு தனி கோஷ்டியிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்!" என்று சொன்னேன்.

நமது இணையற்ற நாதஸ்வர சக்கரவர்த்தி நீடூழி காலம் வாழ்ந்து, பாரதி விழாவில் நமக்கு அளித்தது போன்ற பல அதிர்ச்சிகளை அளிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். (அடுத்த இதழில் முடியும்)



சிவசர்மா ஒரு பழைய புடவையின் கிழிந்த இடத்துக்கு ஒட்டுப் போட்டுக் கொண்டிருந்த ராதையைக் கூப்பிட்டு, "நான் பொன்வேலி வரைக்கும் போய் வரட்டுமா!" என்று கேட்டார்.

"எதற்கு!" என்று ஆச்சரியத்தோடு தகப்பனுரைப் பார்த்து ராதை கேட்கவே, "தேவராஜன் சொத்து உனக்கும்தான் சொந்தம். அவன் மாமாவைவிட அதை அனுபவிக்க உனக்கு உரிமை அதிகம்" என்ருர் சிவசர்மா.

ராதை தலை குனிந்து கொண்டு, "அது அவர்களுக்குத் தெரிந்திருந்தால் சொத்து எனக்கு வந்திருக்கும். ஆனல் தாம் வளர்த்து மூன்னுக்குக் கொண்டு வந்தவருடைய சொத்தில் தமக்கும் உரிமையுண்டு என்பதால்தானே அவர்கள் வைத்துக் கொண்டு விட்டார்கள்! என்னல் எல்லோருக்குமே கஷ்டம். நான் ஒருத்தி யில்லாவிட்டால்......" என்ருள். அப்பொழுது தகப்பனுரின் குரல் இடி முழக்கம் போல், "ராதை!" என்று வீடே அதிரும்படி எழுந்தது. மறுகணம் சிவசர்மா வாசல் திண்ணைக்கு வந்து விட்டார்.

திண்ணையில் வந்து நின்ற சிவசர்மாவுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. "பகவானே! இதற்காகவா என்னை இந்த உலகத்தில் படைத்தாய்! துன்பத்துக்கு மேல் துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தால் என்னல் எத்தனை காலம்தான் தாங்க முடியும்! என்னை நீ ஏன் அழைத்துக் கொள்ள மாட்டேன் என்கிருய்!" என்று தெய்வத்தை வேண்டினர். ஆனல் உன்னைத் தெய்வம் அழைத்துக்கொண்டு விட்டால் ராதை என்ன செய்வாள் என்று கேட்டது அவர் புத்தி.

'என்னல் ராதைக்கு என்ன வழி செய்ய முடியப் போகிறது! எவ்வளவோ நம்பிக்கையோடு நான் ராதையை டாக்டர் தேவராஜனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தேனே! ஆனல் ராதையை மீளாத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டல்லவா அவன் போய் விட்டான்!' என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே பார்த்தார்.

தகப்பனுர் தன்னையே கவனிப்பதைப் பார்த்த ராதை எழுந்து அவர் அருகில் வந்து, "அப்பா ஏதோ மனக் கிலேசத்திலே பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். மனம் பேதலித்து உங்கள் மனத்தைக் கசக்கி விட்டேன்" என்று சொல்வதற்குள் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது. மாலை மாலையாய்க் கண்ணீரைச் சொரியும் ராதையைப் பார்த்துச் சிவசர்மா உள்ளே வந்து, "ராதை, உன் நிலைமை எனக்குத் தெரியாதா! உன் வார்த்தைக்காக உன்னிடம் நான் கோபித்துக் கொள்வதா! அது என்னல் இயலவே இயலாது" என்று சொல்லித் தம் அருமை மகளைச் சமாதானப்படுத்தினர்.

தகப்பனுர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ராதை அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு யோசித்தாள். ஐம்பது வருஷ வாழ்க்கையில் அவள் அப்பா எத்தனை கஷ்டங்களை அனுபவித்திருக்க வேண்டும்! பாசம் வைத்த எத்தனை பேரை அவர் இழந்திருக்கிருர்! ஆறு வயதில் தாயிழந்த ராதைக்குத் தாயார் தகப்பனுர் இரண்டு பொறுப்பையும் அவர்தானே வகித்தார்! மூன்று ஏக்கரா நஞ்சை நிலத்தை வைத்துக் கொண்டு அவர் ராதையை ஒரு குறையும் அறியாதபடி வளர்த்து நான்காம் பாரம் வரையில் படிக்க வைத்தார். ராதை நன்ருக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு அவர் தம் நிலத்தையெல்லாம் விற்று ஒரு நல்ல இடத்தில் அவளை மணம் செய்து கொடுக்கக் கூடத் தயாராயிருந்தார். அப்பொழுது ஒரு பெரிய மனிதர் தாமாகவே முன் வந்து தம் மருமானுக்கு ராதையைக் கலியாணம் செய்து வைத்து விடும்படி கேட்டார். வரனே எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற டாக்டர். கண்ணுக்கும் லக்ஷணமாக இருந்தான். இதைவிட நல்ல வரனுக ஒரு பெண்ணுக்கு அவள் தகப்பனுர் தேடவா முடியும்! ஆனல் ராதையின் அதிர்ஷ்டம் கட்டை.

"சார், தபால்!" என்று வாசலில் குரல் கேட்டு ராதையின் சிந்தனைக்குத் தடை ஏற்பட்டது. முன்புற ரேழிக்கு வந்து தபால்காரன் போட்டுச் சென்றிருந்த கார்டை எடுத்துப் படித்தாள். அன்று மாலை சுமித்ரா வருவதாக எழுதியிருந்தாள் அந்தக் கார்டில். கூடத்தை அடைந்த ராதை கார்டைத் தகப்பனுரின் கையில் கொடுத்து விட்டு அவருக்கு மோர் பரிமாறினள்.

சாப்பிடும்போது பேசும் வழக்கமில்லாத சிவசர்மா சாப்பிட்டெழுந்த பிறகு, "உன் பள்ளித் தோழி என்பாயே ராதை, அவளா!" என்ருர். "ஆம்" என்று மட்டும் சொல்லிவிட்டு மனத்திலிருந்த கலவரத்தை முகத்தின் வழியாகத் தகப்பனுருக்குத் தெரியப்படுத்த இஷ்டப்படாமல் சமையலறைக்குச் சென்று விட்டாள் ராதை.

சுமித்ரா ஏன் வருகிருள்! இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை ராதைக்கு.

போன வருஷம் நடந்த விஷயம்:—

ராதை அன்றுதான் முதன்முதலாகக் கணவன் வீட்டுக்குப் போனள்.

அன்று மாலையில் அவள் தகப்பனுரை ரயிலேற்றி விட்டுத் திரும்பிவந்த கணவன், "ராதை! எவனே செய்கிற குற்றத்துக்கு எவனே தண்டனை அனுபவிக்கிருன். என்ன செய்யலாம்!" என்று கேட்கவே, ராதை ஒன்றும் புரியாமல் தலை குனிந்து நின்ருள். "இதனல் என் மாமாவுக்கு என்ன லாபம் கிடைத்து விட்டதோ, தெரியவில்லை!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து தேவராஜன் வாசற்புறம் போய் விட்டான்.

ராதைக்கு அவள் கணவன் சொன்னதன் தலை கால் புரியவில்லை. என்ன விஷயம் என்று கேட்கவும் தைரியமில்லை. அவள் பிரமித்து நின்ருள். ஆனல் அவள் அப்படி பிரமித்து அதிக நாள் நிற்கவில்லை. மறுநாள் காலையில் அவள் மனம் தெளிவுபடும்படி ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது.

காலையில் ஆறு மணிக்கு வாசற்புறத்து அறையில் ஒரு பெண் குரல் கேட்டது. சமையலறையில் காப்பி போட்டுக் கொண்டிருந்த ராதையின் காதுகளில் அந்தக் குரல் விழுந்தது. "டாக்டர் ஸார்! மன்னிக்க வேண்டும், இவ்வளவு சீக்கிரம் வந்ததற்கு. நான் தீர்க்க யோசனை செய்துவிட்டு வந்திருக்கிறேன். எனக்கு வேறு ஆஸ்பத்திரியில்

நர்ஸ் வேலை கிடைக்கும். உங்களுக்கு வேறு நர்ஸ் அகப்படுவாள். ஆனால் உங்கள் மனைவிக்கு நீங்கள் தான் புருஷர். ஆம், அவளேதான் உங்கள் மனைவி. அவளும் என்னைப்போல் ஒரு பெண். அவள் உள்ளத்திலும் எத்தனையோ ஆசைகள் நிறைந்திருக்கும். உங்களை இவ்வளவு தூரம் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்த உங்கள் மாமா உங்களுக்கு ஒரு பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைத்தார் என்றால் உங்கள் நலனை எதிர்பார்க்காமலா செய்திருப்பார்! என்னை மறந்து விடுங்கள். நான் வருகிறேன். ரயிலுக்கு நேரமாகிறது."

மூர்ச்சை அடைந்தது ராதைக்கு. அவள் கணவன் குரல் காதில் விழுந்தது. "எது நலன், எது தீங்கு என்பதை அந்த ஆண்டவன் அறிந்துகொள்வான், சுமித்ரா. எதையும் உன்னிடம் உரிமையுடன் கேட்க முடியாத நிலைமையில் என் கதியாகிவிட்டபொழுதிலும் உன்னிடம் நான் ஒன்று கேட்கிறேன். நீ எங்கே இருந்தாலும் எனக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிரு" என்றான்.

அந்தப் பெண் பதிலளித்தாள்: "கட்டாயம் தகவல் கொடுக்கிறேன். ஆனால் திடீரென்று புறப்பட்டு வந்து விடாதீர்கள். அப்புறம் உங்கள் சுமித்ராவாக முடியாததுடன் சுமித்ரா உலக வாசியாகவே கூட இருக்க முடியாது. நான் போய் எழுதுகிறேன். வரட்டுமா!"

அதற்குப் பதில் ஏதும் இல்லை. ஆனால் மறு கணம் செருப்போசை கேட்கவே அந்தப் பெண் விடை பெற்றுக்கொண்டு விட்டாள் என்று தெரிந்தது ராதைக்கு.

கணவன் மனத்தில் அந்த நர்ஸ் இடம் பெற்று விட்டாள் என்பதை ராதை ஊகித்துக் கொண்டாள். அதற்காக அவளிடம் ராதைக்குச் சற்றும் கோபமோ துவேஷமோ ஏற்படவில்லை. ராதையின் நன்மையை விரும்பி ஊரை விட்டே போகும் அந்தப் பெண் உண்மையிலேயே மரியாதைக்குரியவள் என்றுதான் தோன்றியது. தேவராஜன் அந்தப் பெண்ணை மணந்து கொள்ளாமல் ஏன் இப்படி மாமா இஷ்டப்படி நடந்து கொண்டார்! தன் மனத்தையும் பிறர் மனத்தையும் நோக வைக்கக் காரணம் என்ன! ராதைக்குத் தைரியமிருந்திருக்குமானால் இந்தக் கேள்விகளைத் தேவராஜனிடம் கேட்டிருப்பாள். ஆனால் அவள் கணவனை நிமிர்ந்து பார்க்கவே பயந்தாள். கணவனும் தன்னை நிமிர்ந்து பார்த்து ஏதும் பேசத் தைரியமில்லாமல் தவிப்பதையும் ஆரம்பத்திலேயே ராதை கவனித்துத் தெரிந்துகொண்டாள்.

ஒரு மாதம் இப்படியே ஓடியது. ஒரு நாள் ராதையிடம் தேவராஜன், "ராதை, நீ புத்திசாலி. என்னைப் பற்றி உனக்குத் தெரியும். என்னை ஒரு வார காலம் விட மாட்டாயா! நான் சுமித்ராவைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்" என்று கெஞ்சினான். ராதைக்கு அவமானம் ஒருபுறம்; கோபம் ஒரு புறம். கணவனிடம் இரக்கம் மறு புறம். தன்னிடம் காணாத பெண்மையின் உயர்வை அந்தப் பெண்ணிடம் காண முடியும் என்று இவர் நினைக்கிறாரா!—ராதையின் மனம் பொருமியது. ஆனால் அவனைத் தேவராஜன் விட்டபாடில்லை. "ராதை! நீ வேணுமானாலும் என்னுடன் வா. நான் உனக்குத் துரோகம் நினைக்கவில்லை. ஆனால் நான் என் மனத்தைத் திடப்படுத்த முடியாத கோழை" என்று தன் பலவீனத்தை ஒப்புக் கொண்ட கணவனை அவளால் கோபித்துக் கொள்ள முடியவில்லை. "நானும் ஒரு வாரம் என் தகப்பனாரிடம் இருந்து விட்டுவருகிறேன். திரும்பி வரும்பொழுது என்னைக் கூட்டி வாருங்கள்" என்றாள் ராதை. அவள் வார்த்தைகளைக் கேட்ட தேவராஜன், "ராதை, நான் முகஸ்துதி செய்யவில்லை. பெண்மையின் பெருமையை சுமித்ராவினிடத்தில் பார்ப்பது போலவே உன்னிடமும் பார்க்கிறேன். என் மாமா எனக்குத் தீங்கு செய்வதாக எண்ணி நல்லதுதான் செய்தார்" என்று கூறிக் கொண்டு ராதையை அணைத்துக் கொண்டான். அவன் கண்களில் அன்று கண்ட பிரகாசத்தை ராதை என்றும் மறக்க முடியாது. அணையும் விளக்குச் சுடர் விட்டுப் பிரகாசித்தது போலும்!


ஒரு வாரத்துக்குப் பிறகும் கணவன் வராமல் போகவே ராதை ஒரு கடிதம் எழுதினாள். பதில் இல்லை. சுமித்ரா தேவராஜனைத் தடுத்து நிறுத்தி விட்டாள் என்று ராதை நினைக்கவில்லை. ஆனால் அவள் விரட்டி அவர்தான் எங்கேயாவது போய் விட்டாரோ என்றுதான் எண்ணினாள். இன்னும் ஒரு வாரம் சென்று விட்டது.

தேவராஜனுக்குக் கவலைக்கிடமான நிலைமை. உடனே புறப்பட்டுச் செல்லவும் என்று சுமித்ராவிடமிருந்து தந்தி வரவே, ராதை தன் தகப்பனாருடன் கணவனிடம் புறப்பட்டு வந்தாள்.

தேவராஜன், "ராதை நான் போகிறேன். எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரியவில்லை. நான் செய்த பாபங்களுக்கு ஆண்டவனிடம் மன்னிப்புக் கேள்" என்று கூறிவிட்டு ராதையின் மடியில் உயிர் நீத்தார். இரண்டு மணி நேரம்தான் இம்முறை ராதை கணவனுடன் வாழ்ந்தாள்.

தேவராஜன் இறந்து போன மூன்றும் நாள் தான் ராதை சுமித்ராவைப் பார்த்தாள். ராதையைக் கட்டி அணைத்துக் கொண்டு சுமித்ரா பச்சைக் குழந்தைபோல் தேம்பினாள்.

அவள் சற்று நிதானமடைந்த பிறகு ராதையிடம் சொல்லலானாள்:—"ராதை! நான் சொல்வதை நீ நம்புவாயானால் தான் எனக்குச் சற்று மனச் சாந்தி கிடைக்கும். தேவராஜன் இறந்ததற்கும், எனக்கும் நேரடியான சம்பந்தம் ஏதுமில்லை. அவர் மாமாதான் காரணம்......" என்று




சொல்லி மௌனமாகி விட்டாள். பிறகு தன் மனவெழுச்சியை அடக்கிக்கொண்டு தொடர்ந்தாள்: "அவர் மாமாவேதான் அவருக்கு யமனாக வந்து வாய்த்தார். உன் புருஷர் என்னைப் பார்க்க வந்தபோது அவர் மாமா அவரைத் தேடிக்கொண்டு கிராமத்திலிருந்து இங்கே வந்தார். என்னிடமிருந்து தேவராஜனைக் காப்பாற்றி அவர் சம்பாதிப்பதைத் தமக்கென்று எடுக்க வசதியாக இருக்க வேண்டும் என்று தான் உலகமறியாத அப்பாவியான உன் அப்பாவிடம் வந்து உன்னைத் தேவராஜனுக்குக் கலியாணம் பண்ணி வைக்கும்படி கேட்டார். மாமா சொல் மீற முடியாத தேவராஜன் தன் இஷ்டத்துக்கெதிராக உன்னைக் கலியாணம் பண்ணிக் கொண்டார். அவர் பரம சாது. பாவம், என்னைத் தம்மால் கலியாணம் செய்து கொள்ள முடியவில்லை என்பதற்காக எனக்குத் தம் சொத்து முழுவதையும் கொடுத்துவிட எண்ணினார். அதை ஒரு கடிதத்தில் தம் மாமாவுக்கும் விவரமாக எழுதி விட்டார்.

"என்னைத் தேடி வந்த தேவராஜனைத் தேடிக் கொண்டுவந்த அவர் மாமா தம்முடன் அவரை அழைத்துக் கொண்டு போய்விட்டார். அதற்கு ஒரு வாரத்துக்கு அப்புறம் தேவராஜனுடைய கம்பவுண்டர் எழுதின கடிதத்தில் தேவராஜன் என்னைப் பார்க்க விரும்புவதாகவும் அவர் எழுத முடியாமல் படுத்துக் கிடப்பதாகவும் தகவல் கிடைத்து இங்கே வந்தேன். மாமா அதிகாரத்தில் இருந்த மருமானை நான் பார்க்க முடியவில்லை. தேவராஜனின் மனத்தைக் கலைக்க அவர் மாமா, காப்பியில் ஏதோ போட்டுக் கொடுத்ததாகவும் மூன்று நாள் சுய நினைவில்லாமலிருந்த பிறகு தேவராஜன் கண் திறந்து பார்த்து உன்னையும் என்னையும் பார்க்க ஆசைப்படுவதாகச் சொன்னதாகவும் அதற்கு அவர் மாமா பதிலே கொடுக்காமல் இருந்து விட்டதாகவும் கம்பவுண்டரிடமிருந்து தகவல் கிடைத்தது. உனக்குத் தந்தி கொடுத்தேன். கடைசியில் என்னைப் பார்க்க முடியவில்லையானாலும் உன்னையாவது பார்க்க முடிந்ததே என்பதுதான் திருப்தி. நான்கு வருஷமாக அவருக்கும் எனக்கும் பழக்கம். அவரை நான் நேசித்தது தவறோ சரியோ, தெரியாது. ஆனால் அந்தப் பரம சாதுவுக்காகக் கண்ணீர்விட எனக்கு உரிமையுண்டு அல்லவா!"

"ராதை, ஒருநாள் தேவராஜன் என்னிடம் என்ன சொன்னார், தெரியுமா! 'எனக்கு நீ வேறு, ராதை வேறு என்பதில்லை. நான் கற்பனையில் காண்பது என்ன தெரியுமா! உங்களிரண்டு பேரையும் சேர்ந்தாற் போல் அடைந்துவிட வேண்டும் என்பதுதான். அசட்டுத்தனமான ஆசைதானே!' என்று கேட்டார். அவர் கேள்வி ஒரு புறம் எனக்குக் கேலியாக இருந்தது. ஆனால் இன்னொரு புறம் அவர் இஷ்டத்துக்கு இணங்க முடியாதே என்று வேதனையாகவும் இருந்தது. நான், 'நீங்கள் முயன்றால் ராதையிடமே உங்கள் சுமித்ராவையும் பார்க்க முடியும்' என்று அவருக்குப் பதில் சொன்னேன். ஆனால் அந்தப் பதில் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை என்று அவர் முகம் சொல்லிற்று. அவர் உயிருடனிருக்கிற போதுதான் அவர் ஆசை நிறைவேறவில்லை. என்றைக்காவது, நானும் நீயும் சேர்ந்து இருப்பதை அவர் ஆத்மா பார்க்காதா! அந்த நாள் வந்தால் நீ வரவேற்பாயா, ராதை!" என்று மிகுந்த ஆர்வத்துடன் கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டாள்.

சென்ற ஒரு வருஷ காலத்தில் ராதைக்கு மாதத்துக்கு இரண்டு கடிதங்களாவது வருவதுண்டு. அவற்றில் ராதைக்குத் தைரியம் கொடுக்க வேண்டி சுமித்ரா எழுதும் வாக்கியங்கள்தான் அதிகமாக இருக்கும். ராதை அந்தக் கடிதங்கள் எழுதுகிறவளைப்பற்றித் தன் தாயிடம் பள்ளித் தோழி என்று சொல்லியிருந்தாள். உண்மையில் சுமித்ராவுக்கும் தனக்கும் இருந்த பிணைப்பைச் சொன்னால் தகப்பனார் என்ன நினைத்துக் கொள்வாரோ! சுமித்ராவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதை அவர் விரும்புவாரோ மாட்டாரோ என்று பயந்துதான் அப்படிச் சொல்லியிருந்தாள்.



ராயபாளையம் தேசபூஷண ஆர். கே. பிரஸன்ன வெங்கடேசராவ் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி ரங்கநாயகிக்கும் ஸ்ரீ எம். ஆர். வெங்கட்டராவ் அவர்களின் குமாரர் ஸ்ரீ எம். வி. கிருஷ்ணமூர்த்திக்கும் சென்ற 6-ந் தேதி திருச்சி ஜில்லாவிலுள்ள பெரவூரில் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின்போது ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் பிரமுகர்களும் நேராக விஜயம் செய்து சிறப்பித்தனர். மணமக்களுக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. வாழ்க, மணமக்கள்!

ஆற்றங் கரைக்குச் சென்று மாலை ஜப தபங்களை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த சிவ சர்மா கூடத்தில் சுமித்ராவுடன் ராதை பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். அவரைப் பார்த்து எழுந்து நின்ற சுமித்ராவிடம், "வா, குழந்தாய்!" என்று சொல்லிவிட்டுப் பாராயணம் செய்யச் சென்றார். அவர் பாராயணத்தை முடித்துவிட்டு வர மணி எட்டு அடித்துவிட்டது.

சாப்பிட உட்கார்ந்தவர் ராதையை மட்டும்தான் பார்த்தார். ஆகவே, "சுமித்ரா எங்கே குழந்தாய்!" என்று கேட்டார். "பின் உள்ளில் இருக்கிறாள்" என்றாள் ராதை. "அவளையும் கூப்பிடு. மூன்று பேரும் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்தால் அப்

புறம் பேசப் பொழுதிருக்கும்" என்றார். அதைக் கேட்கச் சுமித்ராவுக்கு ஆச்சரியமா யிருந்தது. தேவராஜனுடைய மாமா அவனைப் பற்றி என்னற்ற அவதூறுகளைப் பரப்பியிருந்தார். அவற்றில் எவையாவது ராதையின் தந்தையின் காதில் விழுந்திருக்கலாம். ராதை நம்பி யிருப்பதுபோல் அவள் தகப்பனார் தன்னைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார் என்று சுமித்ரா ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. ஆகவே சாப்பிடும்போது சிவசர்மாவின் முன் போக இஷ்டப் படாமல் சுமித்ரா ஒதுங்கினான். ஆனால் அவர் சுமித்ராவையும் தம் அருகில் சாப்பிட உட்காரச் சொல்வதென்ன, உபசார வார்த்தையா!

சுமித்ரா யோசனையை முடிப்பதற்குள் ராதை அவனைத் தகப்பனார் பக்கம் இலை முன் சாப்பிட உட்கார வைத்து விட்டாள்.

மூவரும் சாப்பிட்டு முடிந்த பின் சிவசர்மா சுமித்ராவையும் ராதையையும் அழைத்து அருகில் உட்கார வைத்துக்கொண்டு சுமித்ராவின் வேலையைப் பற்றி விசாரித்தார். அதைக் கேட்ட ராதை திடுக்கிட்டாள். அவள் தகப்பனாரிடம், "அப்பா சுமித்ராவைப் பற்றி முன்னாலேயே தெரியுமா!" என்று கேட்டாள். சிவசர்மா, "தெரியும், ராதை! ஆனால் நான் தெரிந்து கொண்டிருக்கிற சுமித்ராதானா உண்மையான சுமித்ரா என்று நிச்சயம் சொல்ல முடியாது. எனக்குத் தகவல் கொடுத்தவர் கண்ட சுமித்ராவை நான் காண முடியாது என்று மட்டும் தெரியும்" என்று புதிர்போல் சொல்லவே ராதை திகைத்தாள். சில நிமிஷம் மௌனமாக இருந்த பிறகு சிவசர்மா தொடர்ந்தார். "ஆனால் சுமித்ரா, ராதை! யாரும் யாரையும் சரிவரப் புரிந்துகொள்வதென்பது இந்த உலகில் இயலாத காரியம். அப்படி அறிந்து கொள்ள முடியுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உள்ளத்தில் உள்ள அந்தர்யாமியை அறிந்து கொண்டவனாகி விடலாம். தெய்வத்தை நேரில் காண மனிதனால் முடிகிறதா!" என்று கூறிவிட்டு மறுபடியும் மௌனமாகி விட்டார் அவர்.

சில நிமிஷம் வரை யாரும் ஒன்றும் பேசவில்லை. பிறகு சுமித்ராதான் பேச ஆரம்பித்தான். "மாமா! நான் இங்கே எவ்வளவோ பயத்தோடு தான் வந்தேன். ஆனால் பயத்தைவிட ஆசைக்குப் பலம் அதிகம். ராதையைப் பார்த்தாக வேண்டும் என்ற தீர்மானத்தோடு புறப்பட்டு வந்தேன். தவிர வந்ததற்கு ஒரு முக்கிய காரணமும் இருந்தது. ராதை நான்காம் படிவம் படித்திருக்கிறாள் அல்லவா! அவளைச் சேவா சதனத்திலே சேர்த்துப் படிக்க வைக்கலாமா என்ற ஒரு யோசனை தோன்றிற்று. உங்களுக்குத் தெரியாததல்ல, நான் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்ல" என்று நிறுத்திவிட்டு அவர் பதிலை எதிர்பார்த்தான்.

ராதை தன் தந்தையின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்த போது அவர், "ராதைக்கு எது சரியென்று படுகிறதோ, அதைச் செய்யட்டும் சுமித்ரா. நான் அவளுக்கு நல்லதென்று செய்த காரியம்......" என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தி விட்டார்.

ராதையை நினைத்துத் தவிக்கும் தகப்பனாரின் மனத்தை அறிந்துகொள்ளவா சுமித்ராவுக்கு முடியாது! அவன், "ராதையிடம் யோசனையைச் சொன்னேன். அவள் உங்கள் சம்மதமிருந்தால் சரி என்று சொல்லுகிறாள்" என்று கூறிவிட்டுச் சில நிமிஷம் மௌனமாக யோசித்தான். பிறகு



அம்மா:—கிட்டு, சும்மா பக்ஷணம், பக்ஷணம் என்று தொந்தரவு செய்கிறாயே! அதோ அந்த எறும்புகளைப் பார்! அவை எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கின்றன!

கிட்டு:—அது சரிதான், அம்மா! அவைகளும் ஆகாரம் தேடுவதில் தானே சுறுசுறுப்பாக இருக்கின்றன! அதைக் கவனித்துப் பார்!

"மாமா, இன்னும் ஒரு யோசனை. என் ஆசை என்று வைத்துக் கொள்ளுங்களேன். என் மூன்றும் வயதில் தாயாரும் தகப்பனாரும் ஒரே நாளில் பிளேகில் போனார்களாம். என்னைப் பாட்டி தான் பத்து வயது வரையில் வளர்த்தாள். அப்புறம் அவளும் போகவே அநாதாலயம் தான் என்னைக் காப்பாற்றியது. அங்கே படித்துத்தான் நர்ஸானேன். இத்தனை காலமாக நான் என்னுடையவர் என்று உரிமை கொண்டாட உலகத்தில் ஒருவரையும் அடையவில்லை. ராதையை என் உடன் பிறந்தவளாக மாற்றிக் கொள்கிறேனே, மாமா! நீங்களும் என்னை உங்கள் இரண்டு பெண்களில் ஒருத்தி என்று ஏற்றுக் கொண்டு என் கூட வந்து விடுங்களேன். சுமித்ராவும் மற்ற பேர்களைப் போல மனுஷிதான் என்று என்னை நானே திடப் படுத்திக் கொண்டால்தான் என்னால் உயிரோடிருக்க முடியும் போலிருக்கிறது. தனியாய் அறையில் படுத்திருக்கும் போது யாரோ என் காதில் 'உனக்கு உலகத்தில் யாருமே இல்லை. நீ ஏன் இருக்கிறாய்!' என்று கேட்பது போல் தோன்றி என்னைப் பைத்தியம் பிடிக்க வைக்கிறது. என்னையும் உங்கள் பெண்ணாக எண்ணி எனக்கு உயிர்ப் பிச்சை கொடுங்களேன், மாமா!" என்று கேட்டபோது சுமித்ராவின் தொண்டையை அடைத்துக் கொண்டது.

தகப்பனாரின் கண்களில் நீர்நிறைவதைக் கவனித்தாள் ராதை அவர், "சுமித்ரா! ஜகத்திலே பங்காளிகளாவதற்கு எத்தனையோ பேர் காத்திருப்பார்கள். ஆனால் துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளும் உன் போன்ற உயர் பிறவிகள்தான் பரமனுடைய உண்மையான பக்தர்கள். உத்தமியான உன்னை என் பெண் என்று சொல்வதிலே எனக்குப் பெருமைதான், குழந்தாய்! ராதை மாதிரியே நீயும் என் பெண்தான். உங்கள் இரண்டு பேர் முகங்களையும் பார்த்துக் கொண்டு என் துயரத்தை மறக்கப் பார்க்கிறேன்" என்று தழுதழுத்த குரலில் சொல்வதை ராதை கேட்டாள்.

"உங்கள் மனத்தில் என்னையும் என்னைப் போன்ற எத்தனை எத்தனையோ சுமித்ராக்களையும் குழந்தைகளாக ஏற்றுக் கொள்ளும் திறமையிருக்கிறது" என்று கண்ணீருக்கிடையே கூறிச் சுமித்ரா சிவசர்மாவை நமஸ்கரித்தாள்.



அத்தியாயம் 34

அநுராதபுரம்

சூரியன் அஸ்தமனமாகும் சமயத்தில் அவர்கள் அநுராதபுரத்தை அணுகினார்கள். இலங்கைத் தீவின் தொன்மை மிக்க அந் நகரத்தைச் சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தபோதே வந்தியத்தேவன் அதிசயக் கடலில் மூழ்கிப் பேசும் சக்தியை இழந்தான். அநுராதபுரத்தைப் பற்றி அவன் பலர் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. அந் நகரைப் பற்றி அவர்கள் செய்த வர்ணனைகளிலிருந்து அதன் தோற்றம் இப்படி இருக்குமென்று அவன் கற்பனை செய்து பார்த்ததும் உண்டு. ஆனால் அவனுடைய கற்பனைகளையெல்லாம் அந்த மாநகரம் மிஞ்சியதாயிருந்தது. அம்மம்மா! இதன் மதிள் சுவர்தான் எத்தனை பெரியது? எப்படி இருபுறமும் நீண்டு கொண்டே செல்கிறது? எந்த இடத்திலே அச்சுவர் வளைந்து திரும்புகிறது என்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லையே? மதிள் சுவருக்கு உள்ளே எத்தனை எத்தனை கோபுரங்களும் ஸ்தூபங்களும் மண்டப சிகரங்களும் தலை தூக்கிக் கம்பீரமாக நிற்கின்றன? ஒன்றுக்கொன்று அவை எவ்வளவு தூரத்தில் நிற்கின்றன? இவ்வளவும் ஒரே நகரத்துக்குள்ளே, ஒரே மதிள் சுவருக்குள்ளே, அடங்கியிருக்க முடியுமா? காஞ்சி, பழையாறை, தஞ்சை முதலிய நகரங்களெல்லாம் இந்த மாநகரத்தின் முன்னே எம்மாத்திரம்? அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பாடலிபுத்திரமும் விக்ரமாதித்தனின் ஆட்சியில் உஜ்ஜயினி நகரமும் கரிகால் வளவன் காலத்தில் காவேரிப்பட்டினமும் ஒருகால் இந்த நகரத்தைப் போல் இருந்திருக்கலாம்! தற்காலத்தில் உள்ள வேறு எந்தப் பட்டணத்தையும் இதற்கு இணை சொல்ல முடியாது!......

மதிள்சுவரும் அதன் பிரதான வாசலும் நெருங்க நெருங்க, நகரை நோக்கிச் செல்வோரின் கூட்டம் அதிகமாகி வந்தது. தமிழர்களும் சிங்களவர்களும் பிக்ஷுக்களும் இல்லறத்தாரும் ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும் பெருங் கூட்டமாகச் சென்றார்கள். எல்லாரும் தேர் திருவிழாவுக்குச் செல்கிறவர்களைப்போல் குதூகலமாகச் சென்றார்கள். அவர்களில் ஒரு சிலர் நமது பிரயாணிகள் மூவரையும் கவனிக்கவும் சுட்டிக் காட்டவும் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் பொன்னியின் செல்வர் மற்ற இருவருக்கும் சமிக்ஞை செய்துவிட்டு, இராஜபாட்டையிலிருந்து விலகிக் குறுக்கு வழியில் சென்றார். மரங்களால் மறைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய செய் குன்றத்தின் அடிவாரத்தில் வந்து குதிரையை நிறுத்தினார். பின் தொடர்ந்து வந்த இருவரையும் பார்த்து, "குதிரைகள் வெகுதூரம் வந்திருக்கின்றன. சற்று நேரம் இளைப்பாறட்டும். நன்றாக இருட்டிய பிறகு நகருக்குள் போவோம்!" என்றார்.

குதிரைகள் மீதிருந்து மூவரும் இறங்கி ஒரு கற்பாறைமீது உட்கார்ந்தார்கள்.

"இவ்வளவு கூட்டமாக ஜனங்கள் போகிறார்களே? இன்றைக்கு இந்த நகரத்திலும் ஏதாவது உற்சவமோ?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"இந்த நாட்டில் நடக்கும் திருவிழாக்களுக்குள்ளே பெரிய திருவிழா இன்றைக்குத்தான்!" என்றார் இளவரசர்.

"ஈழ நாட்டில் ஏதோ யுத்தம் நடக்கிறது என்று கேள்விப்பட்டேன். இங்கே வந்து பார்த்தால் ஒரே உற்சவமாயிருக்கிறதே!" என்றான் வந்தியத் தேவன்.

"பழையாறையில் ஸ்ரீ ஜயந்தி உற்சவம் நடந்தது என்று நீர் சொல்லவில்லையா?"

"ஆமாம்; ஆனால் பழையாறை சோழ நாட்டில் இருக்கிறது......"

"அநுராதபுரம் ஈழ நாட்டில் இருக்கிறது. அதனால் என்ன? சோழ நாட்டிலும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆட்சிதான்; ஈழ நாட்டிலும் அவருடைய செங்கோல் ஆட்சிதான்......!"

"ஆனால் இந்த நாட்டில் இன்னும் பகைவர்கள் இருக்கிறார்களாமே?..."

"பகைவர்கள் எங்கேயோ இருக்கிறார்கள். அதற்கு, இங்குள்ள ஜனங்கள் என்ன செய்வார்கள்? போர்க்களத்தில் போர் நடக்க வேண்டியதுதான்; ஊர்ப்புறத்தில் உற்சவமும் நடக்க வேண்டியதுதான்!......திருமலை! நீ என்ன சொல்கிறாய்?" என்றார் இளவரசர்.

"இங்கே வெளிப் பகைவர்கள் இருந்தால் அங்கே உட்பகைவர்கள் இருக்கிறார்கள். வெளிப் பகைவர்களைக் காட்டிலும் உட்பகைவர்களே அபாயமானவர்கள். ஆகையால் இளவரசர் இந்த நாட்டிலேயே உற்சவமும் யுத்தமும் நடத்திக் கொண்டிருப்பதே நல்லது என்று அடியேன் சொல்லுகிறேன்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அழகாய்த்தானிருக்கிறது. வெளிப் பகைவர்களை விட உட் பகைவர்களே அபாயகரமானவர்கள் என்றால், அங்கே தானே நம் இளவரசர் இருக்க வேண்டும்? அபாயம் அதிகம் உள்ள இடமே வீர புருஷர்கள் இருக்க வேண்டிய இடம் அல்லவா?" என்றான் வந்தியத்தேவன்.

"வீரம் என்றால், அசட்டுத்தனமாகச் சதிகாரர்களிடமும் கொலைகாரர்களிடமும் போய் அகப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? வீராதி வீரனாகிய நீ அங்கே போய் அப்படி அகப்பட்டுக் கொள்வதுதானே? எதற்காகத் தப்பி ஓடி வந்தாய்?" என்றான் திருமலை.

"போதும்! போதும்! நீங்கள் ஒரு யுத்தம் இங்கே ஆரம்பித்து விட வேண்டாம்!" என்று அருள்மொழி வர்மர் சமாதானம் செய்வித்தார்.

இருட்டிய பிறகு மூன்று பேரும் அந்நகருக்குள் பிரவேசித்தார்கள். அன்று யாத்திரிகர்கள் யாரையுமே கோட்டை வாசலில் தடுத்து நிறுத்தவில்லை. எல்லாரையும் தங்கு தடையின்றி விட்டுக் கொண்டிருந்தார்கள். காவலர்கள் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக நம் கதா புருஷர்கள் மூவரும் நகருக்குள் பிரவேசித்துச் சென்றார்கள்.

அநுராதபுரத்தின் வீதிகளிலும் ஜனக் கூட்டம் அளவில்லாமலிருந்தது. "சாது! சாது!" என்ற கோஷம் வானை அளாவியது. ஆங்காங்கு பல மாட மாளிகைகளும் விஹாரங்களும் இடிந்து கிடப்பதை வந்தியத்தேவன் கண்டான். இடிந்துபோன பல கட்டிடங்கள் புதுப்பிக்கப் பட்டிருப்பதையும் பார்த்தான். புதுப்பிக்கும் திருப்பணி இளவரசர் கட்டளையின் பேரிலேதான் நடந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இப்படியெல்லாம் இவர் செய்து வருவதின் நோக்கம்தான் என்ன? ஜயிக்கப் பட்ட நாட்டின் மக்களுக்கு இவர் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகிறார்? ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்துடன் அடிக்கடி சண்டை போட்டு வருகிறார்கள் இந்தச் சிங்கள அரசர்கள். இத்தகைய நெடுங்காலப் பகைவர்களின் தலைநகரத்தை அழித்துக் கொளுத்தித் தரை மட்டமாக்குவதற்கு மாறாக, இடிந்து போன கட்டிடங்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்த இவர் அநுமதித்து வருகிறாரே? இது என்ன அதிசயம்! இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும். அது என்னவாயிருக்கும்? வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு விந்தையான எண்ணம் உதித்தது. ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். சோழ நாட்டில் இவருக்கு உரிமை எதுவும் இல்லை. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் இருக்கிறார். அவருடன் போட்டியிட மதுராந்தகத் தேவர் இருக்கிறார். ஆகையால் இந்த மா இலங்கைத் தீவில் இவர் ஒரு தனி ராஜ்யத்தை ஸ்தாபித்துச் சுதந்திர மன்னராக விரும்புகிறார் போலும்!—யார் கண்டது? இவருடைய விருப்பம் நிறைவேறினாலும் நிறைவேறலாம்! குடந்தை ஜோசியர் சொன்னார் அல்லவா? "அருள்மொழிவர்மர் துருவ நட்சத்திரம் போன்றவர்! அவரை நம்பினவர்களுக்கு ஒரு குறைவும் இல்லை!" என்று. அத்தகைய வீர புருஷரிடம் தான் வந்து சேர்ந்து விட்டதை நினைத்து அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது.

வெளிப்புறங்கள் இடிந்து இருளடைந்திருந்த ஒரு பழைய மாளிகையின் வாசலில் வந்து அவர்கள் நின்றார்கள். குதிரைகளின் மீதிருந்து இறங்கினார்கள். அந்த இடம் முக்கியமான வீதிகளிலிருந்து சற்று ஒதுப்புறமாக இருந்தது. ஆகையால் அங்கே ஜனக் கூட்டம் இல்லை. இளவரசர் மூன்று தடவை கையைத் தட்டினார். உடனே இந்திர ஜாலத்தினால் நடந்ததுபோல் அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் கதவு திறந்து வழி உண்டாயிற்று. ஆட்கள் யாருமே இருந்ததாகத் தெரியவில்லை. இளவரசர் இருட்டிலேயே நுழைந்து மேலே சென்றார். வந்தியத்தேவன் பின்னால் திரும்பிக் குதிரைகளின் கதி என்னவென்று ஆவலுடன் பார்த்தான். இளவரசர், "குதிரைகளுக்கு வழி தெரியும்!" என்று கூறி வந்தியத் தேவனைக் கையைப் பிடித்து இழுத்துச் சென்றார். சற்றுத் தூரம் இருளிலேயே நடந்தார்கள். பிறகு 'மினுக் மினுக்' என்று வெளிச்சம் தெரிந்தது. பின்னர், பிரகாசமான ஒளி தென்பட்டது. அது ஒரு பழைய காலத்து அரண்மனையின் உட்புறம் என்று வந்தியத்தேவன் கண்டான்.

"இங்கே கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். மகா சேன சக்கரவர்த்தியின் அந்தப்புரம் இது. திடீரென்று சக்கரவர்த்தி விஜயம் செய்து நம்மைத் துரத்தப் பார்த்தாலும் பார்ப்பார்!" என்றார் இளவரசர்.

"மகாசேனர் என்பவர் யார்?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"மகாசேனர் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த இலங்கா ராஜ்யத்தை ஆண்ட சக்கரவர்த்தி. அவர் பொது ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். ஆகையால் அவருடைய ஆவி இந்த நகரத்தில் இன்னமும் உலாவிக் கொண்டிருப்பதாக ஜனங்கள் நினைக்கிறார்கள். அவருடைய ஆவியானது துணியில்லாமல் குளிரில் கஷ்டப்படப் போகிறதே என்று மரக்கிளைகளில் துணிகளைக் கட்டித் தொங்க விடுகிறார்கள்! இந்த அரண்மனையிலும் அவருக்குப் பிறகு யாரும் வசிப்பதில்லை. வெறுமனே தான் விட்டு வைத்திருக்கிறார்கள்!" என்றார் இளவரசர்.



இளவரசருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் பணிவிடை செய்ய அங்கு ஏவலாளர் இருந்தார்கள். குளித்து உணவருந்திய பிறகு மூவரும் அந்த அரண்மனையின் உச்சி மாடத்துக்குச் சென்றார்கள். அவர்கள் இருந்த இடத்திலிருந்து சுற்றுப் புறமெங்கும் பார்க்கலாம். ஆனால் அவர்களைக் கீழே யுள்ளவர்கள் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

"ஐயா! பன்னிரண்டு நாழிகைக்கு எங்கேயோ வரும்படி புத்தர் சிலை செய்தி சொன்னதாகக் கூறினீர்களே?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இன்னும் நேரமிருக்கிறது. சந்திரன் இப்போதுதானே உதயமாகியிருக்கிறான்? அதோ அந்தத் 'தாகபா'வின் உச்சிக்கு நேரே சந்திரன் வந்ததும் புறப்பட்டு விடுவோம்!" என்றார் இளவரசர்.

அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு பெரிய குன்று போன்ற தாகபா ஸ்தூபம் நின்றது. புத்தர் பெருமானுடைய திருமேனியின் துகளை அடியில் வைத்து எழுப்பிய ஸ்தூபங்களாதலால் அவை 'தாது கர்ப்பம்' என்று அழைக்கப்பட்டன. தாது கர்ப்பம் என்னும் பெயர்தான் பின்னர் 'தாகபா' ஆயிற்று.



பேரிரைச்சல் ஒன்று கேட்டது. வந்தியத் தேவன் இரைச்சல் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் ஒரு பெரிய சேனா சமுத்திரத்தைப் போன்ற பெருங் கூட்டம், — வீதிகளில் முடிவில்லாது நீண்டு போய்க் கொண்டிருந்த ஜனக் கூட்டம், — வருவது தெரிந்தது. அந்த ஜனசமுத்திரத்தின் நடுவே கரிய பெரிய திமிங்கலங்கள் போல் நூற்றுக் கணக்கில் யானைகள் காணப்பட்டன. கடல் நீரில் பிரதி பலிக்கும் விண் மீன்களைப் போல் ஆயிரம் ஆயிரம் தீவர்த்திகள் ஒளி வீசின. ஜனங்களோ லட்சக் கணக்கில் இருந்தார்கள்.

வந்தியத்தேவன் "இது என்ன? பகைவர்களின் படை எடுப்பைப் போல அல்லவா இருக்கிறது?" என்றான்.

"எதற்காக இவ்வளவு பெரிய கட்டிடங்களைக் கட்டினார்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"முதன் முதலில், புத்தர் எவ்வளவு பெரியவர் என்பதை ஜனங்களுக்கு உணர்த்துவதற்காக இவ்வளவு பெரிய சின்னங்களை நிர்மாணித்தார்கள். பின்னால் வந்த அரசர்களோ தாங்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைக் காட்டுவதற்காக, முன்னால் கட்டியிருந்த ஸ்தூபங்களைக் காட்டிலும் பெரிதாகக் கட்டினார்கள்!" என்றார் இளவரசர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சமுத்திரத்தின் கொந்தளிப்பைப் போன்ற

"இல்லை, இல்லை! இதுதான் இந்த இலங்கை நாட்டிலேயே மிகப் பெரிய உற்சவமாகிய பெரஹராத் திருவிழா!" என்றார் இளவரசர்.

ஊர்வலம் நெருங்கி வர வர வந்தியத்தேவனுடைய வியப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அந்தமாதிரி காட்சியை அவன் தன் வாழ்நாளில் பார்த்ததில்லை.

முதலில் சுமார் முப்பது யானைகள் அணிவகுத்து வந்தன. அவ்வளவும் தங்கமுக படாங்களினால் அலங்கரிக்கப்பட்ட யானைகள். அவற்றின் நடுநாயகமாக வந்த யானை எல்லாவற்றிலும் கம்பீரமாக இருந்ததுடன், அலங்காரத்திலும்

சிறந்து விளங்கியது. அதன் முதுகில் நவரத்தினங்கள் இழைத்த தங்கப்பெட்டி ஒன்று இருந்தது. அதன்மேல் ஒரு தங்கக் குடை கவிந்திருந்தது. நடுநாயகமான இந்த யானையைச் சுற்றியிருந்த யானைகளின் மீது புத்த பிக்ஷுக்கள் பலர் அமர்ந்து வெள்ளிப் பிடிபோட்ட வெண் சாமரங்களை வீசிக் கொண்டிருந்தார்கள். யானைகளுக்கு இடையிடையே குத்து விளக்குகளையும் தீவர்த்திகளையும் இன்னும் பலவித வேலைப்பாடமைந்த தீபங்களையும் ஏந்திக்கொண்டு பலர் வந்தார்கள். கரிய குன்றுகளை யொத்த யானைகளின் தங்கமுக படாங்களும் மற்ற ஆபரணங்களும் பிக்ஷுக்களின் கைகளில் அசைந்த வெண் சாமரங்களும் பல தீபங்களின் ஒளியில் தகதக வென்று பிரகாசித்துக் கண்ணைப் பறித்தன.

யானைகளுக்குப் பின்னால் ஒரு பெரும் ஜனக் கூட்டம். அந்தக் கூட்டத்தின் மத்தியில் சுமார் நூறு பேர் விசித்திரமான உடைகளையும் ஆபரணங்களையும் தரித்து நடனமாடிக் கொண்டு வந்தார்கள். அவர்களில் பலர் உடுக்கை போன்ற வாத்தியங்களைத் தட்டிக் கொண்டு ஆடினார்கள். இன்னும் பல வகை வாத்தியங்களும் முழங்கின. அப்பப்பா! ஆட்டமாவது ஆட்டம்! கடம்பூர் அரண்மனையில் தேவராளனும் தேவராட்டியும் ஆடிய வெறியாட்டமெல்லாம் இதற்கு முன்னால் எங்கே நிற்கும்! சிற்சில சமயம் அந்த ஆட்டக்காரர்கள் விர்ரென்று வானில் எழும்பிச் சக்கராகாரமாக இரண்டு மூன்று தடவை சுழன்று விட்டுத் தரையில் வந்தார்கள். அப்படி அவர்கள் சுழன்ற போது அவர்கள் இடையில் குஞ்சம் குஞ்சமாகத் தொங்கிக் கொண்டிருந்த துணி மடிப்புக்கள் பூச்சக்கரக் குடைகளைப் போலச் சுழன்றன. இவ்விதம் நூறுபேர் சேர்ந்தாற்போல் எழும்பிச் சுழன்று விட்டுக் கீழே குதித்த காட்சியைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதவில்லைதான்! இரண்டாயிரம் கண்களாவது குறைந்த பட்சம் வேண்டும்! ஆனால் அத்தகைய சமயங்களில் எழுந்த வாத்திய முழக்கங்களைக் கேட்பதற்கோ இரண்டாயிரம் செவிகள் போதமாட்டா! நிச்சயமாக இரண்டு லட்சம் காதுகளேனும் வேண்டும். அப்படியாக உடுக்கைகள், துந்துபிகள், மத்தளங்கள், செப்புத்தாளங்கள், பறைகள், கொம்புகள் எல்லாம் சேர்ந்து முழங்கிக் கேட்போர் காதுகள் செவிடுபடச் செய்தன.

இந்த ஆட்டக்காரர்களும் அவர்களைச் சுற்றி நின்ற கூட்டமும் நகர்ந்ததும் மற்றும் முப்பது யானைகள் முன் போலவே ஜாஜ்வல்யமான ஆபரணங்களுடன் வந்தன. அவற்றில் நடுநாயகமான யானையின் மேலும் ஒரு அழகிய வேலைப்பாடு அமைந்த பெட்டி இருந்தது. அதன் மேல் தங்கக் குடை கவிந்திருந்தது. சுற்றி நின்ற யானைமீதிருந்தவர்கள் வெண் சாமரங்களை வீசினார்கள். இந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னாலும் ஆட்டக்காரர்கள் வந்தார்கள். இந்த ஆட்டக்காரர்களுக்கு நடுவில் ரதி, மன்மதன், முக்கண்ணையுடைய சிவபெருமான் வேடம் தரித்தவர்கள் நின்றார்கள். சுற்றி நின்றவர்கள் ஆடிக் குதித்தார்கள்.

"இது என்ன? சிவபெருமான் இங்கு எப்படி வந்தார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"கஜபாகு என்னும் இலங்கை அரசன் சிவபெருமானை அழைத்து வந்தான். அதற்குப் பிறகு இங்கேயே அவர் பிடிவாதமாக இருக்கிறார்!" என்றார் இளவரசர்.

"ஓ வீர வைஷ்ணவரே! பார்த்தீரா! யார் பெரிய தெய்வம் என்று இப்போது தெரிந்ததா?" என்று வந்தியத்தேவன் கேட்டு முடிவதற்குள் மற்றும் சில யானைகள் அதேமாதிரி அலங்காரங்களுடன் வந்து விட்டன. அந்த யானைகளுக்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களுக்கு மத்தியில் கருடாழ்வாரைப் போல் மூக்கும் இறக்கைகளும் வைத்துக் கட்டிக் கொண்டிருந்த நடனக்காரர்கள் சுழன்றும், பறந்தும், குதித்தும், மூக்கை ஆட்டியும் ஆர்ப்பாட்டமாக ஆடினார்கள்.

"அப்பனே! பார்த்தாயா? இங்கே கருட வாகனத்தில் எங்கள் திருமாலும் எழுந்தருளி யிருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

மீண்டும் ஒரு யானைக்கூட்டம் வந்தது. அதற்குப் பின்னால் வந்த ஆட்டக்காரர்களோ கைகளில் வாள்களும் வேல்களும் ஏந்திப் பயங்கரமான யுத்த நடனம் செய்து கொண்டு வந்தார்கள். தாளத்துக்கும் ஆட்டத்துக்கும் இசைய அவர்கள் கையில் பிடித்த வாள்களும் வேல்களும் ஒன்றோடொன்று டணார் டணார் என்று மோதிச் சப்தித்தன.

இவ்வளவுக்கும் கடைசியாக வந்த யானைக் கூட்டத்துக்குப் பின்னால் ஆட்டக்காரர்கள் அவ்வளவு பேரும் இரண்டு கையிலும் இரண்டு சிலம்புகளை வைத்துக்கொண்டு ஆடினார்கள். அவர்கள் ஆடும்போது அத்தனை சிலம்பு

களும் சேர்ந்து கலீர் கலீர் என்று சப்தித்தன. ஒரு சமயம் அவர்களுடைய நடனம் வெகு உக்கிரமாயிருந்தது. இன்னொரு சமயம் அமைதி பொருந்திய லலித நடனக் கலையாக மாறியது.

இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டும் பலவித சப்த சித்திரங்களைக் கேட்டும் பிரமித்து நின்ற வந்தியத் தேவனுக்கு இளவரசர் இந்த ஊர்வலத் திருவிழாவின் வரலாற்றையும் கருத்தையும் கூறினார்.

தமிழகத்து அரசர்களும் இலங்கை அரசர்களும் நட்புரிமை பாராட்டிய காலங்களும் உண்டு. கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னனும் சேரன் செங்குட்டுவனும் அவ்விதம் சிநேகமாயிருந்தார்கள். சேரன் செங்குட்டுவன் கண்ணகி என்னும் பத்தினித் தெய்வத்துக்கு விழா நடத்தியபோது கஜபாகு அங்கே சென்றிருந்தான். அந்நாட்டில் நடந்த மற்ற திருவிழாக்களையும் கண்டு களித்தான். பின்னர் ஒரு சமயம் சேரன் செங்குட்டுவன் இலங்கைக்கு வந்திருந்த போது கஜபாகு மன்னன் விழா நடத்தினான். தமிழகத்தின் தெய்வங்களாகிய சிவபெருமான், திருமால், கார்த்திகேயர், பத்தினித் தெய்வம் ஆகிய நாலு தெய்வங்களுக்கும் ஒரே சமயத்தில் திருவிழா நடத்தினான். இந்த விழாக்களில் மக்கள் அடைந்த குதூகலத்தைக் கண்டு பின்னர் ஆண்டு தோறும் அந்த விழாக்களை நடத்தத் தீர்மானித்தான். புத்தர் பெருமானுக்கு அவ்விழாவில் முதல் இடம் கொடுத்து மற்ற நாலு தெய்வங்களையும் பின்னால் வரச் செய்து விழா நடத்தினான். அன்று முதல் அந்த விழா இலங்கையில் நிலைத்து நின்று மிகப் பெரிய திருவிழாவாக ஆண்டு தோறும் விடாமல் நடந்து வருகிறது.

"ஆனால் தெய்வங்களை எங்கும் காணவில்லையே?" என்றான் வல்லவரையன்.

"ஒவ்வொரு யானைக் கூட்டத்திலும் நடு நாயகமாக வந்த யானை மீது வைத்திருந்த பெட்டியைப் பார்த்தீரா?"

"பார்த்தேன்! அந்தப் பெட்டிக்குள் தெய்வங்களைப் பூட்டி வைத்திருக்கிறார்களா? தப்பித்துக் கொண்டு தமிழகத்துக்குப் போய்விடக் கூடாது என்று?"

இதைக் கேட்ட பொன்னியின் செல்வர் நகைத்து விட்டு, "அப்படியில்லை; முதலில் வந்த யானை மீதிருந்த பெட்டிக்குள்ளே புத்த பெருமானுடைய பல் ஒன்றைப் பத்திரமாய்ப் பூட்டி வைத்திருக்கிறார்கள். புத்த சமயத்தார் இந்நாட்டில பபோற்றிக் காப்பாற்றும் செல்வங்களுக்குள்ளே விலை மதிப்பற்ற செல்வம் அது. ஆகையால் அந்தப் புனிதப் பொருளை அழகிய பெட்டியில் வைத்து யானை மீது ஏற்றி ஊர்வலமாய் எடுத்துச் சென்றார்கள்!" என்றார்.

"பின்னால் வரும் பெட்டிக்குள்ளே என்ன இருக்கிறது?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"சிவன், விஷ்ணு, முருகன், கண்ணகி ஆகியவர்களின் பற்கள் கிடைக்கவில்லை! ஆகையால் அவற்றுக்குப் பதிலாக அந்தந்தத் தேவாலயத்தின் தெய்வங்களுக்கு அணியும் திரு ஆபரணங்களை அந்தப் பெட்டிகளில் பத்திரமாய் வைத்துக் கொண்டு போகிறார்கள்" என்று இளவரசர் கூறினார்.

வந்தியத்தேவன் சிறிது சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "ஆகா! தங்களுக்குப் பதிலாக பெரிய பழுவேட்டரையர் மட்டும் இங்கே படையெடுத்து வந்திருந்தால்?......" என்றான்.

அச் சமயத்தில் திருவிழா ஊர்வலத்தின் கடைசிப் பகுதி அந்த வீதி முடுக்கில் திரும்பிச் சென்றது. வாத்திய முழக்கம், ஜனங்களின் ஆரவாரம்,—இவற்றின் ஓசை குறையத் தொடங்கியது.

"குறிப்பிட்ட நேரத்துக்கு இன்னும் ஒரு நாழிகைதான் மிச்சமிருக்கிறது. வாருங்கள், போகலாம்!" என்று இளவரசர் மேடையிலிருந்து இறங்கினார். மூவரும் கீழே வீதிக்கு வந்தார்கள். ஊர்வலம் சென்றதற்கு நேர் எதிர்ப்பக்கம் நோக்கி நடந்தார்கள். நகர மக்கள் அனைவரும் பெரஹராத் திருவிழாவில் ஈடுபட்டிருந்தபடியால் இவர்கள் போன வீதிகளில் ஜன நடமாட்டமே இல்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு விஸ்தாரமான ஏரியின் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த ஏரியில் தண்ணீர் ததும்பிக் கரையில் அலைமோதிக் கொண்டிருந்தது. சந்திர கிரணங்கள் அந்த அலைகளில் தவழ்ந்து விளையாடி வெள்ளி அலைகளாகச் செய்து கொண்டிருந்தன.

ஏரிக் கரையிலிருந்து கீழே இறங்கிச் சென்றார்கள். அவ்விடத்தில் செண்பக மலர்களின் நறுமணம் பரவியிருந்தது. இன்னும் பலவகைப் புஷ்பச் செடிகளில் வெள்ளை மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துத் திகழ்ந்தன. ஆங்காங்கே சிறிய சிறிய செய் குன்றுகளும் படித்துறைத் தடாகங்களும் காணப்பட்டன.

தடாகம் ஒன்றின்மேலே அமைத்திருந்த அத்தகைய சிங்க முகத்துவாரத்திலிருந்து நீர் அருவி பொழிந்து கொண்டிருந்தது. அந்தத் தடாகக் கரை அருகில் நெருங்கிச் சென்று மூவரும் நின்றார்கள்.

அநுராதபுரத்துக்கு வெளியே சாலை ஓரத்தில் நின்ற புத்தர் சிலையின் தோற்றம் வந்தியத் தேவனுடைய மனக்கண் முன்னால் வந்தது. சிலையின் அடிப் பீடத்தில் வரிசையாக வைத்திருந்த தாமரை மொட்டுக்களை இளவரசர் எண்ணிப் பார்த்துப் பன்னிரண்டு என்று சொன்னார். அவை பன்னிரண்டு நாழிகையைக் குறித்தன போலும். தாமரை மலர்களாயிராமல் மொட்டுக்களாயிருந்தபடியால் இரவைக் குறித்தன போலும். அந்த மொட்டுக்களுக்கு அருகில் இருந்த சிங்க முகத்துக் கிண்டியும் வந்தியத் தேவனுடைய நினைவில் இருந்தது. அந்தப் பாத்திரம் இந்தச் சிங்க முக அருவி விழும் தடாகத்தைக் குறிப்பிட்டது போலும்!

இதெல்லாம் சரிதான்! ஆனால் இங்கு எதற்காக யார் இளவரசரை வரச் செய்திருக்கிறார்கள்? இதில் என்னென்ன அபாயங்கள் நேரிடுமோ என்னமோ தெரியவில்லையே? ஆயுதம் ஒன்றும் கொண்டு வரக்கூடாது என்று இளவரசர் தடுத்ததின் கருத்து என்ன? ஒரு வேளை இங்கு ஏதேனும் காதல் நிகழ்ச்சி நடைபெறப் போகிறதோ?

இந்த நினைவு வந்ததும் வந்தியத் தேவனுடைய உள்ளம் கொந்தளித்தது. அவனுடைய மனம் கடல் கடந்து பழையாறைக்குப் பாய்ந்து சென்றது. இளைய பிராட்டியும் வானதி தேவியும் அவன் மனக் கண்முன் வந்தார்கள்.

இளவரசரின் வாயைப் பிடுங்கிப் பார்க்கலாம் என்று வந்தியத் தேவன் எண்ணினான். "ஐயா! இந்த இடத்தைப் பார்த்தால் பழையகாலத்து அரண்மனை நந்தவனம் மாதிரி அல்லவா தோன்றுகிறது!" என்றான்.

"ஆம்; இது அரண்மனை நந்தவனம் இருந்த இடந்தான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நந்தவனத்தையொட்டித் துஷ்டகமனுவின் அரண்மனை இருந்தது. அதோ பார்! இன்னமும் அந்த அரண்மனையின் சில பகுதிகள் அழியாமல் இருக்கின்றன!" என்றார்.

வந்தியத் தேவன் அங்கே சற்றுத் தூரத்தில் தெரிந்த பழைய அரண்மனை மாடங்களைப் பார்த்து விட்டு, "அந்தக் கட்டிடங்கள் அரண்மனை அந்தப்புரமாயிருந்திருக்கலாம். இந்தத் தடாகத்தில் அரசிளங்குமரிகள் இறங்கி ஜலக்கிரீடை செய்து மகிழ்ந்திருப்பார்கள்!" என்றான்.

"இந்த நந்தவனத்திலே நடந்த அதிசயமான சம்பவம் வேறு ஒன்று உண்டு. ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் நடந்தது. துஷ்டகமனு மன்னனின் புதல்வன் ஸாலி என்பவன் இங்கே ஒருநாள் உலாவிக் கொண்டிருந்தான். ஒரு பெண் இந்தத் தடாகத்தில் தண்ணீர் மொண்டு புஷ்பச் செடிகளுக்கு ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டான். அவள் ஒரு சண்டாளப் பெண் என்றும், அவள் பெயர் அசோகமாலா என்றும் அறிந்தான். சண்டாளப் பெண்ணாயிருந்தாலும் அவளையே மணந்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தான். 'அப்படியானால் நீ சிம்மாசனம் ஏற முடியாது!' என்று தந்தை கூறினார். 'சிம்மாசனம் வேண்டாம்; எனக்கு அசோக மாலாதான் வேண்டும்' என்று ஸாலிவாஹனன் பிடிவாதமாகக் கூறி விட்டான். இந்த உலகத்தில் இன்னொரு ராஜகுமாரனால் இப்படிக் கூற முடியும் என்று தோன்றுகிறதா?"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறிய போது, கோடிக் கரைக்கடலில் படகு செலுத்திய 'சமுத்திர குமாரி'யின் நினைவு வந்தியத் தேவனுக்கு வந்தது. ஆகா! ஒரு வேளை இவரும் அந்தப் பெண்ணை நினைத்துக் கொண்டுதான் இந்தக் கதையைச் சொல்லுகிறாரா, என்ன?

பூங்குழலியின் பேச்சை எப்படி எடுக்கலாம் என்று அவன் எண்ணிக் கொண்டிருந்தபோது, அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. சிங்கதாரைத் தடாகத்தின் பின்புறச் சுவரில், உட்பக்கம் குழிவாக அமைந்து, அதற்குள்ளே இருவர் அமரும்படியான ஒரு கல் ஆசனம் இருந்தது. அப்படி அமைந்திருந்த அறையின் ஓர் ஓரத்தில் திடீரென்று விளக்கு வெளிச்சம் காணப்பட்டது. விளக்கைப் பிடித்துக் கொண்டிருந்தவரின் கரம் முதலில் வெளிவந்தது. பிறகு புத்த பிக்ஷு ஒருவரின் திருமுகமும் காணப் பட்டது.

வந்தியத்தேவன் அந்த இந்திரஜாலக் காட்சியை அடங்கா வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான். மேலே என்ன நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தினால் அவன் மூச்சும் சிறிது நேரம் நின்றிருந்தது. (தொடரும்)

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

52. எல்லா வாதங்களுக்கும்

வாத ரோகத்தில் பலவிதம் உண்டு. கீல் வாதம், முகவாதம், கண் வாதம், இருதய வாதம், திமிர் வாதம், விரைவாதம் என்று. அது தவிர இன்னும் பல வாதங்களும் இருக்கின்றன. இந்த வாதங்களுக்கெல்லாம் பிடிவாதம் ஒன்று தான் மருந்து. இது இருந்து விட்டால் மற்ற வாதங்கள் எல்லாம் ஓடி மறைந்துவிடும். அதாவது 'சர்வாங்காசனத்தை விடாமல் செய்வேன்' என்ற பிடிவாதத்தை கைக்கொண்டால் போதும்.

சிலருக்கு எலும்புப் பூட்டுகளில், முக்கியமாக மூட்டுகளில் முதலில் சிறு பில்லை அகலத்தில் வலிக்கும். பிறகு நாளுக்கு நாள் வலி அதிகமாகிக் கீழே உட்காரவும், எழுந்திருக்கவும் முடியாது. தலைக்குமேல் விட்டத்திலிருந்து ஒரு கயிறு தொங்க விடப்பட்டிருக்கும். அதைப் பிடித்துக் கொண்டு சிலர் எழுந்திருப்பார்கள். சிலரால் தரையில் உட்காரவே முடியாது. பெஞ்ச், நாற்காலிகளில்தான் உட்காருவார்கள். மேஜைமேல் தான் சாப்பிடுவார்கள். மல ஜலம் கழிப்பதும் ஐரோப்பியரைப் போல்தான். இதைக் கீல் வாதம் என்று சொல்லுவார்கள்.

முகவாதம் வந்தவர்களுக்கு முகத்தில் பாதி ஒரு பக்கமாய் இழுத்துக் கொண்டிருக்கும். ஆனால் எல்லோருக்கும் அப்படி ஆவதில்லை. ஒரு சிலருக்கு மட்டும் அப்படி ஆகும். சிலர் பேச ஆரம்பித்தால் வாய்-ஒரு மாதிரியாய் இழுக்கும். பேச்சு குழறி வரும். சிலருக்குத் தாடை இலேசாய் அதிர்ச்சி தரும். சிலருக்குச் சரியாய் வாய் திறக்க முடியாது. வாயி எலும்பு சேரும் இடத்தில் வலிக்கும். சிலர் கண்ணை அவர்களையு மறியாமல் எப்பொழுதும் சிமிட்டிக் கொண்டே யிருப்பார்கள். அவைகள் கட்டுக்கு அடங்காது. சிலருக்குக் கண் இலேசாய் அவ்வப்போது அதிரும். இருதய வாதமுள்ளவர்களுக்குச் சற்று அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்தால் மார்பு வலிக்கும். திமிர் வாதமென்பது, கால்களில் ரத்த ஓட்டம் சரியாக இல்லாமல் திமிர் பிடித்தாற்போல் இருக்கும். உணர்ச்சியும் அவ்வளவாகத் தெரியாது. இது கீழ்ப்பாகத்தில் அதிகமிருக்கும்; மேலுக்கு வரவர சிறிது குறைந்திருக்கும். விரைவாதம் இருந்தால் சிலருக்கு வீங்கும். சிலருக்கு அளவுக்கு மிஞ்சி வீங்கும். சிலருக்கு இருக்காது.


இம்மாதிரி வாதங்கள் எல்லாம் இன்ன காரணத்தினால்தான் வருகிறதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. பரம்பரையாகவும் உண்டாகலாம். நரம்பு பலவீனத்தினால் உண்டாகலாம். ஆகாரக் கோளாறினாலும் உண்டாகலாம். அதிக உழைப்பும் போதுமான சத்துள்ள ஆகாரமில்லாமையினாலும் உண்டாகலாம். சாதாரணமாய் வாதங்கள் எல்லாம் 50, 60 வயதுக்குமேல் உள்ளவர்களுக்குத்தான் ஏற்படும் என்று சொல்லுவார்கள். ஆனால் இந்தக் காலத்தில் எல்லா வயதினர்களுக்கும், முக்கியமாக வாலிபர்களுக்கும் உண்டாகிறது. நல்ல சரீர உழைப்பு, சுத்தமான பிராணவாயு, ஆரோக்கிய விதிப்படி ஆகாரங்கள் உட்கொள்ளும் வரை ரத்தம் ஒரு தடையும் இன்றித் தாராளமாய் எல்லா பாகங்களுக்கும் பரவுகிறது. தைராய்ட் ரஸமும் ரத்தத்திற்குத் துணை புரிகிறது. தேய்ந்த நாளங்களையும், கழிவுகளையும் சரி செய்கிறது. அதன் காரியம் குறையும்போது, இரத்த ஓட்டம் மந்தப்பட்டு, சாப்பிட்ட ஆகாரத்திலுள்ள வாயு பதார்த்தங்கள் சரியாய் ஜீரணமாகாமல் வாயு சேஷ்டைகள் அதிகமாகிறது.

ஆகையால் நோயின் காரணமறிந்து அதைப் போக்கச் சரியான முயற்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் சோம்பேறியாக இருந்து கொண்டு தட்டுத் தட்டாக சாம்பாரையும், பஜ்ஜியையும், சாப்பிட்டுக்கொண்டு அதோடு மருந்துகளையும் விழுங்குவதினால் என்ன லாபம்!

முதலில் ஆகார சீர்திருத்தம் வேண்டும். உருளைக் கிழங்கு, கடலைப் பருப்பு, முத்தின வாழைக்காய், துவரம்பருப்பு மற்றும் வாயுவை உண்டாக்கும் வஸ்துக்களை யெல்லாம் விலக்க வேண்டும். இரத்தம் சுத்தமாக, நாடி சுத்தியில் தீர்க்கமான மூச்சு விடவும் வாங்கவும் செய்யவேண்டும். நரம்புகள் உறுதியாகப் பலம் பெறச் சர்வாங்காசனம் செய்ய வேண்டும். மருந்துகள் எல்லாம் நிரந்தர பலனைத் தராது. அவைகளை உபயோகிக்கும் வரை குணம் தெரியும். விட்டு விட்டால், பழைய படி வியாதி திரும்பிவிடும். ஆங்கில அரசாங்கம் வளர்த்துவிட்ட அடிமைப் புத்தி, நமக்குச் சுதந்திரம் கிடைத்த பின்பும் நம்மை விடவில்லை யல்லவா! அதுபோல் மருந்தில் இருக்கும் மோகமும் நம்மை மயக்குகிறது. அடிமை கொள்கிறது. சுதந்திரம் அடைந்தோமே தவிர சுய தேக ஞானத்தை அடைந்தோமில்லை. உலகத்தில் இருக்கும் நதிகள், ஏரிகள், வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் விழுந்து விழுந்து படிப்போம். நமது சரீரத்தில் நரம்புகள் எப்படி இருக்கின்றன, இருதயம் எப்படி அமைந்திருக்கிறது, கோளங்கள் என்றால் என்ன! என்பதைப் பற்றி யெல்லாம் சிறிதும் அக்கறை கொள்ள மாட்டோம். டாக்டர்கள் இதற்கென்று இருக்கவே இருக்கிறார்கள். நமக்கென்னத்திற்கு இந்தக் கவலை யெல்லாம் என்ற அசட்டை போதும்! இப்பேர்ப்பட்டவர்களால் அவர்களுக்கும் நிரந்தர வருமானம் உண்டு. மருந்துக் கடைகளின் கமிஷனும் கிடைக்கும்.

ஒரு பெரிய மனிதர் வயது ஐம்பத்தைந்து இருக்கும். நல்ல உயரம். வாட்ட சாட்டமான ஆள். ஆனால் அவ்வளவும் ஊளைச் சதை. நல்ல தொப்பையும் உண்டு. நல்ல படிப்பாளி. உயர்தர கலாசாலைக்குப் பிரின்ஸிபால். அவரை இரண்டு பேர் கக்கத்தில் கை கொடுத்துக் காரிலிருந்து தாங்கிக் கொண்டு வந்தார்கள். அவர் நடக்க முடியாமல், கால் ஊன்ற முடியாமல் கஷ்டப்பட்டு நடந்து வந்தார். ஒரு ஆசனத்தில் அமரச் சொன்னேன். அவருக்குப் பெருமூச்சு நிற்கச் சிறிது நேரமாயிற்று. பிறகு அவர் தன் சோகக் கதையைச் சொல்லத் தொடங்கினார்:

"பல வருடங்களாக இந்த வியாதியால் கஷ்டப்படுகிறேன். பார்க்காத டாக்டரில்லை; பார்த்து விட்டேன். அருந்தாத மருந்தில்லை; அருந்தி முடித்தேன். பண்ணாத வைத்தியமில்லை; பண்ணிப் பார்த்தேன். குத்தாத ஊசியில்லை; குத்திக் கொண்டேன். பணம் பணமாய்ப் பாழும் வைத்



நியத்திற்குத் தொலைத்து விட்டேன். ஒரு வேளை உணவு தவறிவிட்டாலும், மருந்தை விட்டதில்லை. அப்படியிருந்தும் என் வியாதி சிறிதுகூடக் குணமாகவில்லை. கடைசியில் யோகாசன மகிமையைக் கேள்விப்பட்டு நம்பி வந்தேன்'' என்றார். அவர் எடை 180, 190 பவுண்டு இருக்கலாம். கீழே உட்கார்ந்தால் எழுந்திருக்க முடியாது; இரண்டு பேர் அவரைப் பிடித்துத் தூக்க வேண்டும். ''இந்த நிலைமையில் அவருக்கு ஆசனம் பழகுவது கஷ்டமாய் இருக்குமே! அவர் தொடர்ந்து செய்து வருவாரா!'' என்று எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ''சிறிது கஷ்டமாய் இருக்கும். இருந்தாலும் செய்ய வேண்டும்'' என்றேன். ''என்ன கஷ்டமானாலும் பரவாயில்லை. நான் ஏற்றுக் கொள்ளத் தயார்'' என்றார் அவர். அவரை விரிப்பில் மெதுவாய்ப் படுக்கச் செய்து நானும் கூட வந்தவரும் சேர்ந்து, அவருடைய கால்களைத் தூக்கிச் சர்வாங்காசன நிலைக்குச் சரியாய் வரா விட்டாலும் முடிந்தவரை தூக்கிப் பிடித்துக் கொண்டோம். பிறகு அவரைப் பார்த்து, ''ஐயா! இம்மாதிரியே தினமும் காலை மாலை முடிந்தவரை செய்யுங்கள். சிறிது சிறிதாக நேரத்தை அதிகமாக்கிக் கொண்டு வர வேண்டும்'' என்று சொல்லி அனுப்பினேன். இந்தச் சம்பவம் நடந்து சுமார் மூன்று வருடங்கள் இருக்கும்.

சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். ஒரு கனவான் கன வேகமாய் நடந்து என்னிடம் வந்தார். ''என்னைத் தெரிகிறதா!'' என்று கேட்டார். ''எங்கேயோ பார்த்த முகமாய் இருக்கிறதே'' என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அவரே மூன்று வருடங்களுக்கு முன் நடந்த மேற்படி சம்பவத்தை எனக்கு ஞாபகப்படுத்தினார். பிறகு தெரிந்து கொண்டேன். முகம் அதே முகம். ஆனால் உடலே மாறி விட்டிருந்தது. இரண்டு பேர் கைலாகு கொடுத்து, பெருஞ் சதையுடன் கஷ்டப்பட்டு நடந்து வந்தவர் எங்கே! இவர் எங்கே! ஊளைச் சதைகள், தொந்தியெல்லாம் இருந்த இடம் தெரியவில்லை. உடலில் தெம்பு, சுறு சுறுப்பு, பேச்சில் ஒரு வேகம் எல்லாம் சேர்ந்து அவர் புது ஆளாய் மாறி விட்டிருந்தார். பிறகு என் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டேன். இவருடைய சர்வாங்காசனப் படம்தான் இந்தப் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது.

சமீபத்தில் ஸிட்டி காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ கே. ஏ. ஆர். ஆச்சார்யா பி. ஏ. எல். டி., எப். ஆர். ஈ. எஸ். (லண்டன்) எழுதியிருக்கும் கடிதத்தையும் கீழே காணலாம்:

'ஆர்த்ரைடிஸ்' (Artheritis) என்ற வாத நோயால் பிடிக்கப் பட்டு, அந்த வியாதியிலிருந்து மீளலாம் என்ற நம்பிக்கையை இழந்திருந்தேன்.

ஜெனரல் ஆஸ்பத்திரியின் கைதேர்ந்த டாக்டர்கள் எனது வியாதியைத் தீர்க்கச் சகல விதமான எக்ஸ்ரே சிகிச்சைகளையும் செய்து பார்த்தார்கள். ஒரு பலனும் ஏற்படவில்லை. ஆயுர்வேத, அலோபதி மருந்துகளையும், இன்செக்ஷன்களையும் கைக்கொண்டு பார்த்தேன். அதிலும் வியாதி குணமாகவில்லை. கடைசியில் எல்லா டாக்டர்களும் 'இந்த வியாதியைக் குணமாக்க முடியாது; வாழ்நாள் முழுதும் அவதிப்பட வேண்டியதுதான்' என்று முடிவு கட்டி விட்டார்கள்.

எனது நண்பர் ஒருவர் 1947-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் என்னை ஆசன நிபுணர் ஸ்ரீ வி. என். குமாரசாமியிடம் அழைத்துச் சென்றார்.

எனது கார் போர்டிகோவில் போய் நின்றது. என்னைக் காரிலிருந்து தூக்கிச் சென்றார்கள்.

வி. என். குமாரசாமி எனக்குத் தைரிய வார்த்தைகள் கூறினார். அவர் என்னுடன் வந்த நண்பரின் உதவியோடு என்னைச் சர்வாங்காசன நிலையில் நிறுத்தினார். அதுமட்டுமல்ல; சர்வாங்காசனம் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும் அவர் எனக்குச் செய்து காட்டினார்.

அன்று முதல் நான் விடாமல் சர்வாங்காசனம் செய்து வந்தேன். உதய சூரியனைக்கண்டு மறையும் பனித்துளி போல 'ஆர்த்ரைடிஸ்' வியாதி 1948-ம் வருஷ மத்தியில் என்னிடமிருந்து விலகி விட்டது. ஒரு வருஷ காலத்துக்குள் நான் பூரண குணமடைந்து விட்டேன்.

இப்பொழுதும் நான் சர்வாங்காசனத்தை விடாமல் பழகி வருகிறேன். ஒவ்வொரு நாளும் என் தேகத்தில் புதுவித குணம் தென்படுவதையும் சுறுசுறுப்பு ஏற்படுவதையும் காண்கிறேன்.


சென்னை 14
3—9—51

கே. ஏ. ஆர். ஆச்சார்யா

மகோன்னத சிறப்புள்ள இணையற்ற ரேடியோக்கள்


TESLA

இதோ காணப்படும் டெஸ்லா ரேடியோ நிறுவுகளில் உங்கள் விருப்பத்திற்கும் சக்திக்கும் உகந்த மாடலைத் தேர்ந்தெடுங்கள். சிறிய **டாலிஸ்மான்,** கம்பீரமான **ஸிம்போனி** மற்றும் எந்த மாடலை தேர்ந்தெடுத்தாலும் அவை எல்லாம் நல்ல ரேடியோக்களே யாகும். தொனி சுத்தத்திற்கும், அழகிய காபினட் வேலைப்பாடுக்கும் உறுதியான அமைப்புக்கும் பெயர் பெற்றவை.




டெஸ்லா டாலிஸ்மான்: விலை நயமான 4 வால்வ் செட். இணையற்ற சேவை. 3 வேவ் பாண்டுகள் நாலுக இயங்கும் தொனிக் கட்டுப்பாடு ஏ. ஸி., டி.ஸி. கரண்டில் இயங்கும். விலை ரூ. 250/-


எந்த மாடலையும் தேர்ந்தெடுங்கள்-ஒவ்வொன்றும் அதன் விலையில் சிறந்தது



டெஸ்லா ஸிம்போனி: உன்னத AC செட். 6 வால்வ் வைய பாண்ட் ஸ்ப்ரெட் ட்யூனிங். 3 படி தொனி கட்டுப்பாடு. பளிச்சென்று தெரியும் ஸ்டேஷன் பெயர்களுடன் கூடிய டயல் விலை ரூ. 575/-



டெஸ்லா ஏஸ்: சக்தி வாய்ந்த 5 வால்வு ஏ. ஸி. ரிஸீவர் பளபளப்பான வால்நட் பெட்டி. விசேஷ இந்திய டயல். மேகா ஸைக்கிள், மீட்டர்கள் குறித்தது. ஏ. ஸி. விலை ரூ. 450/-



டெஸ்லா பயனீர்: 5 இரட்டை உபயோக வால்வு செட். அழகிய பெட்டி. ஏ.ஸி. டி.ஸி. கரண்டில் இயங்குவது. விலை ரூ. 375/-

ANY TIME — ANYWHERE WITH TESLA

டெஸ்லா (இந்தியா) ரேடியோ மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
11/13, ஹார்னிமான் சர்க்கிள், பம்பாய்-1



★ ★ ★ ★ [அகில உலகச் சிறுகதைப் போட்டிக்காக "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை நடத்திய அகில இந்தியச் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்ட குஜராத்திக் கதை—1] ★ ★ ★ ★

ஆசிரியை: **ஸ்ரீமதி குந்தினிகா கபாடியா]** [மொழிபெயர்ப்பு: **வாஞ்சி**

சடுதியாகச் சரயூவின் விவாகம் நிச்சயமாயிற்று. டாக்டர் அனந்துக்கே அவளை விவாகம் செய்து கொடுப்பதென்று தீர்மானித்தார்கள்.

மாப்பிள்ளையைப் பற்றியும் அவருடைய குடும்பத்தைப் பற்றியும் எல்லோருக்கும் திருப்திதான். சரயூகூட அதிகமாக ஆட்சேபிப்பதற்குக் காரணம் எதுவும் இல்லை.

டாக்டர் அனந்துக்கு சரயூ இரண்டாம் தாரம் என்பது உண்மையே. இருந்தாலும் அவன் இளைஞன் தான்; ஒற்றை நாடியான தேகம்; வாட்டசாட்டமாக இருந்தான். வெய்யில் காரணமாகச் சிறிது கறுத்திருந்தாலும், வனப்பு வாய்ந்த அவனது சரீரமும் முகமும் தனி வசீகரத்துடன் விளங்கின. அவனுடைய குடும்பமும் நல்ல அந்தஸ்து வாய்ந்தது. இதைத் தவிர அனந்த் அந் நகரிலே வைத்தியத் தொழிலில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தான்.

எனவே இதைப் போன்ற ஒரு வரனைச் சரயூ நிராகரிப்பதற்கு என்ன காரணம் இருக்கிறது! ஆனால் அவளுக்கு ஒரே ஒரு விஷயம் திருப்தியைக் கொடுக்கவில்லை. அனந்தின் முதல் மனைவிக்குப் பிறந்த ஐந்து வயதான பையன் இருக்கிறான் என்பதுதான் அதிருப்திக்குக் காரணம்.

கல்யாணம் ஆனதும் ஆகாததுமாக அந்தப் பையனுக்குத் தான் தாயாராக இருக்க வேண்டுமே என்ற எண்ணம் அவளுடைய சந்தோஷத்தைக் குலைத்தது; யௌவனப் பருவத்தின் கனவுகளுக்கு முட்டுக் கட்டையாக இருந்தது. ஆகாயத்தில் சுயேச்சையாகச் சஞ்சரிக்கும் தன்னுடைய ஹிருதயமாகிற பட்சியை விருப்பமற்ற பொறுப்பாகிற கூண்டில் அடைப்பது போலிருந்தது!

அதில் இன்னும் மோசமான விஷயம் என்னவெனில், அந்தப் பையன் உடல் சுவாதீனமற்ற முடம் என்பதுதான். அந்தக் குழந்தைக்கு அவள் தான் சிசுருஷைகள் செய்ய வேண்டும். காலையிலிருந்து இராத்திரி வரையில் அவனுக்கு வேண்டியவைகளை யெல்லாம் செய்து கொண்டிருக்க வேண்டும். வேடிக்கைதான்! அவள் அனந்தின் வீட்டுக்கு எதற்காகப் போகிறாள்! அந்த வீட்டிலுள்ள குழந்தைக்குப் பணிவிடை செய்யும் ஆயாவாகவா போகிறாள்!

அனந்தின் குடும்பம் பாகமாகாத பெரிய குடும்பம். தாய் ஸ்தானத்தில் தான் செய்ய வேண்டிய கடமைகளைத் தட்டிக் கழித்துக் கொள்ள சரயூ விரும்பவில்லை. அவ்விதம் தட்டிக் கழிப்பது அவளுடைய குணத்துக்கும் அவளது குடும்பத்தின் பண்பாட்டுக்கும் விரோதமாகும். அத்தகைய தர்ம வழியில் வந்த அவளுடைய மனோ நிலைக்கு முரணாக ஒரு காரியத்தைச் செய்வது என்பதை அவளால் நினைக்கவும் முடியவில்லை.

சரயூ அடக்கமும் மட்டு மரியாதையும் உள்ளவள். எனவே, அனந்தின் முதல் தாரத்துக்கு ஒரு முடமான பையன் இருக்கிறான் என்பதைப் பிரமாத ஆட்சேபணையாக எழுப்ப விரும்பவில்லை. தவிர, கல்யாணத் தேதியும் நிச்சயமாகி விட்டது!

* * *

அனந்தின் குழந்தை பிறவியில் முடம் அல்ல. அவன் பிறந்தபோது வசீகரமான அழகுடனும் ஆரோக்கியத்துடனும் விளங்கினான். அந்தக் குழந்தையிடம் காணப்பட்ட ஒரு விசேஷ குணம் என்னவெனில், அவன் தன் தாயிடம் காட்டிய அன்புதான். அன்பு என்றால் சாதாரணமான, உலக இயல்பை யொட்டிய அன்பு அல்ல, விவரிக்க முடியாத எல்லையற்ற தெய்வீக அன்பு!

அவன் பிடிபடாமல் அழுது கொண்டிருப்பான். யாராலும் அவனைச் சமாதானப்படுத்த முடியாது. அந்தச் சமயத்தில் அவன் தாய் அவனது கண்களில் தென்பட்டால் போதும். அவனுடைய அழுகையும் கண்ணீரும் இனிய புன்முறுவலாக மாறிவிடும். உடனே அவள் தன் குழந்தையை வாரி யணைத்து மடிமீது வைத்து அவனுக்கு முத்தம் கொடுப்பாள். அப்போது அவனுக்குத் தான் ஏதோ ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றும்; சுவர்க்க லோக சுகத்தை அனுபவிப்பதாகத் தோன்றும்!

கிரணுக்கு இரண்டு அல்லது மூன்று வயது இருக்கலாம். மற்றக் குழந்தைகள் எல்லாம் தெருவில் ஓடி விளையாடிக் கூத்தடித்துக் கொண்டிருப்பார்கள். கிரண் மாத்திரம் அவனது தாயின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு சமையற் கட்டிலேயே இருப்பான். அவளுக்குத் தெரியாமல் திடீரென்று பின்புறமாக வந்து, அவள் காரியம் செய்ய முடியாமல் ஏதாவது விஷமம் செய்வான். பிறகு அவளுக்கு எதிரில் வந்து இடி இடியென்று சிரிப்பான். சிரித்துக் கொண்டே தன்னுடைய வசீகரமான சிறு கண்களால் அன்பு ததும்பத் தாயாரைப் பார்ப்பான்.

குழந்தைக்கு இவ்விதம் எல்லை மீறிச் செல்லம் கொடுப்பதைக் குறித்து எல்லோரும் சுசீலாவைக் கடிந்து கொள்வார்கள். "நன்றாக இருக்கிறது! உலகத்திலே எல்லோருக்கும் குழந்தைகள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தாலும், ஊஹும்! இப்படியா!" என்பார்கள்.

அவ்வாறு கூறுவோரைப் பார்த்துச் சுசீலா சாந்தமாகப் புன்முறுவல் செய்வாளே யன்றி, பதில் எதுவும் சொல்லமாட்டாள். தன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அந்தக் குழந்தை தெய்வத்தின் வரப்பிரசாதம் என்று எண்ணி அவனைப் பாசத்துடன் பார்ப்பாள். அவனது விஷமங்கள் பல சமயங்களிலும் அவளைத் திக்கு முக்காடச் செய்துவிடும். அப்படி யிருந்தும் ஒரு விநாடி கூட அவனைப் பிரிந்திருக்கமாட்டாள். எனவே, கிரண் நிழலைப்போல் எப்போதும் தன் தாயாரின் பக்கத்திலேயே இருக்கலானான்.

அப்படியிருக்க, ஒருநாள் அவர்களுடைய இடைவிடாத சந்தோஷத்துக்குத் தடை ஏற்பட்டது. கிரண் திடீரென்று கடுமையான நோய்வாய்ப் பட்டான். முதல் நாலு நாட்கள் வரையில் அவனுக்குப் பிரமாத ஜுரம் அடித்தது. ஐந்தாவது நாள் வலிப்பு ஏற்பட்டு விட்டது. அடிக்கடி கையையும் காலையும் இழுத்தது. வாயில் நுரை வழிந்தது. கண்கள் பிதுங்கின.

வலிப்பு நின்றபின் கிரணின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. இறக்குந் தறுவாயில் இருப்பதுபோல் முகம் வெளுத்தது. சுயப்



பிரக்ஞை வந்தபின் கிரண் அருகில் இருந்த தன் தாயைப் பார்த்தான். அந்தப் பார்வையில் நிறைந்திருந்த வேதனையை விவரிக்க முடியாது.

தன் அருமை மகனுக்கு ஏற்பட்ட நோயைக் கண்டு சுசீலா பதை பதைத்துப் பிரலாபித்தாள். அந்நகரில் மிகுந்த அநுபவம் வாய்ந்த சிறந்த டாக்டரை அனந்த் அழைத்து வந்தான். எனினும் நோய் என்ன என்பதே தெரியாததால் டாக்டரால் திட்டமான சிகிச்சை எதுவும் செய்ய முடியவில்லை.

நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாகத் தோன்றியது. எனினும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லையென்றும், எல்லாம் சரியாகப் போய்விடும் என்றும் டாக்டர் கூறினார்.

அவர் விடைபெற்றுக் கொண்டு செல்லும் போது அனந்தைக் கூப்பிட்டார். "குழந்தையின் உயிருக்கு ஆபத்து இல்லை. ஆனால் அவனுடைய உறுப்புகள் ஏதாவது முடமாகிவிடும். அதற்குள் எதுவும் சொல்ல முடியாது. முடிந்த வரையில் சிகிச்சை செய்து பார்க்கலாம்" என்று இரகசியமாக அனந்திடம் கூறினார்.

கிரண் இரண்டு நாட்கள் வரையில் தாங்க முடியாத வேதனையால் தவித்தான். நாள் முழுதும் சுசீலா அவன் அருகில் உட்கார்ந்து கொண்டு அவன் தலையை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள். அது, பிரக்ஞை ஏற்பட்டபோது கிரணுக்கு மிகவும் இதமாக இருந்தது. ஆனால் வலிப்பு வந்து அவன் பிரக்ஞை இழந்தபோது, அவன் தேகம் முழுதும் பட்ட அவஸ்தை கொஞ்சமன்று. அவ்விதம் தேகம் தூக்கித் தூக்கிப் போட்டதில் அவன் பலமெல்லாம் போய் விட்டது.

மூன்றாவது நாள் வலிப்பு நின்றது. யாதொரு சப்தமுமின்றி மௌனமாகப் படுத்திருந்தான். அவன் கைகளையோ கால்களையோ அங்குமிங்கும் தூக்கிப் போடவில்லை. வாயையும் திறக்கவில்லை. அதைக் கண்டு, "அப்பா! இனிக் கவலையில்லை!" என்று எல்லாரும் பெருமூச்சு விட்டனர்.

ஆனால் மிகக் கவலையுடனும் கலக்கத்துடனும் கண் கொட்டாமல் அவனைக் கவனித்து வந்த சுசீலாவுக்கு மாத்திரம் ஓர் உண்மை தெரிந்தது. அதாவது கிரணின் கால்கள் அசையவில்லை என்பதுதான். ஏனெனில் அவனால் தன் கால்களை அசைக்க முடியவில்லை. அவன் கால்கள் அசைவற்றுத் துவண்டு கிடந்தன. கால்களில் உயிரே இராதது போல் தோன்றியது.

அதை நிச்சயமாகத் தெரிந்து கொள்வதற்காக அவள் அவனுடைய ஒரு காலைத் தூக்கி அப்படியே விட்டுவிட்டாள். அந்தக் கால் ஒரு மரக் கட்டையைப் போல் பொத்தென்று கீழே விழுந்தது.

படுக்கையில் கிடக்கும் பாரிஜாத மலர் போன்ற அந்தப் பச்சிளங் குழந்தையின் நிலைமையைத் தெரிந்து கொண்ட சுசீலாவின் மனம் உடைந்தது. 'ஐயோ' என்று கதறிய வண்ணம் கீழே விழுந்து மூர்ச்சையானாள்.

* * *

சுசீலாவுக்குத் தன் வாழ்க்கையே ஒளியிழந்து விட்டது போல் தோன்றியது. அவளுடைய ஹிருதய வானில் துக்க மண்டலம் கருமேகங்களைப் போல் காட்சி யளித்தது. அவளது ஹிருதயம் சிதைந்து சின்னாபின்ன மாயிற்று. தன்னுடைய அழகிய அருமைக் குழந்தை இனி இஷ்டப்படி நடக்கவோ, விளையாடவோ முடியாதென்ற எண்ணம் அவளைச் சித்திரவதைக்கு உள்ளாக்கியது.

அவள் நாள் கணக்கில் கண்ணீர் விட்டுக் கதறினாள். கடவுளை வேண்டிக் கொண்டாள். உலகத்திலுள்ள பொக்கிஷங்களை யெல்லாம் கொண்டு போய்க் காலடியில் கொட்டினாலும் கடவுளின் கல் நெஞ்சம் ஒரு போதும் கரையாதல்லவா! வருவது வந்தே தீரும். உலகத்திலே அதைத் தடுக்கவல்லார் யார்!

கிரண் கொஞ்சம் கொஞ்சமாகக் குணமடைந்து வந்தான். எனினும் சில நாட்களாக அவன் பட்ட சகிக்க முடியாத வேதனை, அவனது இளம் நரம்புகள் பலவீனம் அடையும்படி செய்து விட்டது. இரண்டொரு நாள் கழித்து இனி அவனால் பேச முடியாது என்பதும் தெரிந்தது.

தன் குழந்தை ஊமையாகி விட்டான் என்பதை அறிந்த சுசிலா நாள் கணக்கில் அழுதாள், அடித்துக் கொண்டாள். குடும்பத்திலுள்ள எல்லோரும் வருந்தினர். ஆனால் சுசிலா சம்பந்தப்பட்ட வரையில் அவளது வாழ்க்கையின் அஸ்திவாரமே நிலை குலைந்து விட்டது.

கிரணைச் சொஸ்தப் படுத்துவதற்காக அனந்த் எத்தனையோ சிகிச்சைகளை செய்து பார்த்தான். ஆனால் எல்லாம் வீணாயின. கடைசியில் கிரண் கால்களை நீட்டிய வண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக் கொண்டு நகரத்தான் முடிந்தது. எனினும், பாவம்! அவன் ஊமையானது ஊமையானதுதான்.

* * *

கிரண் குணமடைந்தபின், அவனுக்கு அவன் தாய் மீதிருந்த பாசம் இன்னும் பன்மடங்கு அதிகமாயிற்று. அவனால் ஒன்றும் பேச முடியவில்லை யென்றாலும், சின்னஞ் சிறிய செய்கைகளால் அவன் நாள் முழுதும் 'அம்மா' 'அம்மா' என்று உளறிக் கொண்டிருப்பான்.

அவன் மெதுவாக நகர ஆரம்பித்ததிலிருந்து சமையல் அறைக்குச்சென்று தாயாரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பான். அவனுடைய பார்வையில் முன்னரைக் காட்டிலும் அதிக அன்பும் பாசமும் ததும்பின.

மழலைச் சொல் மாறாத மலரைப் போன்ற மிருதுவான தன் குழந்தையின் அத்தகைய நிலையைச் சுசிலாவினால் சகிக்க முடியவில்லை. நாளுக்கு நாள் அவளுடைய துக்கம் எல்லை கடந்தது. மாலை வேளையில் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து விளையாடும் போது, கிரண் மாத்திரம் தாழ்வாரையின் மூலையில் உட்கார்ந்து கொண்டு வானத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பான். மேகங்களுக்கிடையே நக்ஷத்திரம் ஏதாவது தென்பட்டால் அவனது முகம் சந்தோஷத்தால் பிரகாசமடையும். 'அம்மா' என்பது போன்ற ஒரு வித சப்தம் அவன் வாயிலிருந்து வெளி வரும்.

அதைப் பார்த்த சுசிலாவின் கண்களில் கண்ணீர் ததும்பும். 'இது என்ன பாழும் வாழ்வு!' என்று அங்கலாய்த்துக் கொள்வாள்.

பேசத் தெரியாத அந்தப் பையனின் பேச்சு ஆயிரம் மர்மங்கள் அடங்கிய பொக்கிஷம்போல் தோன்றியது! சில சமயங்களில் அவன் வேதனை தோய்ந்த கண்களால் தன் தாயாரை உற்றுப் பார்ப்பான். அப்போது அவன் ஹிருதயத்திலுள்ள வேதனை பீறிட்டுக்கொண்டு பேச்சாக வெளி வருவதுபோல் தோன்றும். சுசிலா அன்பு ததும்ப அவனையே பார்ப்பாள்; அவன் ஒரு வார்த்தையாவது பேசமாட்டானா என்று ஏங்குவாள். ஆனால், அவன் எதுவும் பேசமாட்டான்.

அவன் அடிக்கடி தாழ்வாரையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய கற்பனையை இஷ்டப்படி ஓடவிடுவான். அப்போது ஆயிரம் மலர் மாலைகள் உருவாகி அவனுக்கு எதிரில் உள்ள பூமியை அலங்கரிக்கும். சில சமயங்களில் நீலோத்பலம் போன்ற அவனது கண்களில் மர்ம ஒளி சுடர்விட்டுக் கொண்டிருக்கும். அந்த ஒளியினால் அவன் முகம் முழுதும் பிரகாசிக்கும். அப்போது இனந்தெரியாத ஆனந்தம் அவன் தேகம் முழுதும் பரவி நிற்கும்.

வெட்ட வெளியில் சுயேச்சையாக அங்குமிங்கும் ஓடியாட வேண்டும்; பூமியின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில்,—பூமி எவ்விடத்தில் ஆகாயத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறதோ அதுவரையில்—செல்ல வேண்டும் என்று அவன் ஏங்குவான். சில சமயங்களில், வெள்ளிக் குன்றுகள்போல் தோன்றும் மேகங்களுக்கு மேலே இறக்கைகளுடன் பறக்க வேண்டும் என்று அவன் ஆசைப்படுவான்.

அவனது ஹிருதய தாபங்களைச் சுசிலாவினால் மாத்திரம் தான் அறிந்து கொள்ள முடிந்தது. அவன் பேசாத பேச்சுக்கள் அவளுடைய செவிகளில் நன்கு விழுவதுபோல் தோன்றியது. அவள் ஒருத்தியால் மாத்திரமே அந்தக் குழந்தையின் மனதை ஊடுருவிப் பார்க்க முடிந்தது. பேச்சற்ற அவன் மனத்தில் எழும் ஆயிரம் எண்ணங்களை அவளால் மாத்திரமே உணர்ந்து கொள்வது சாத்தியமாயிற்று.

இதன் காரணமாக சுசிலாவின் துன்பம் இன்னும் பன்மடங்கு அதிகமாயிற்று. இடைவிடாத ஹிருதய தாபங்கள்! நிறைவேற முடியாத, முடிவற்ற ஆசைகள்! நிரந்தரமான ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எல்லையற்ற ஆர்வம்! இதெல்லாம் அவன் வாய் திறந்து சொல்லாமலே நிறைவேறாமலே, பூர்த்தியாகாமலே போய் விடு



வதா! அவன் என்றென்றும், ஆயுள் முடியும் வரையில், இவ்வாறு கனவு கண்டு வருவதைத் தவிர அது நிறைவேற வழி யில்லையா!

சுசீலாவின் ஹிருதயத்தில் ஏற்பட்ட புண் ஆறும் வழியின்றி நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. அவள் வாடி வதங்கினாள்; சோர்ந்து மெலிந்தாள்; சிறிது சிறிதாக மரணப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

அவள் துரும்பாகி வருவதற்கு, கிரணின் பேசாத பேச்சினாலும், பரிதாபகரமான பார்வையினாலும் ஏற்பட்ட வேதனைதான் காரணம் என்பதை யாரும் அறிந்து கொள்ளவில்லை. எனினும் அனந்துக்கு மாத்திரம் அந்த உண்மை தெரியும். ஆனால் அதற்கு அவன் என்ன பரிகாரம் செய்ய முடியும்!

நாளுக்கு நாள் சுசீலாவின் உடல் உருகி நலிந்து கொண்டிருந்தது. "நல்ல காற்றுக்காகச் சுசீலாவை எங்கேயாவது ஊருக்கு அழைத்துச் செல்" என்று ஒருவர் யோசனை சொன்னார். ஆனால் அவ்வாறு செய்வதால் மன நோய்க்கு என்ன பரிகாரம் ஏற்படும்! வீணாகப் பணத்தைச் செலவு செய்ய வேண்டாம் என்று சுசீலா தன் கணவனிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

சுசீலாவின் ஹிருதயத்துக்கு ஏற்பட்ட கடுமையான அதிர்ச்சி, அவளது ஆரோக்கியத்தின் அஸ்திவாரத்தையே கலகலத்துப் போகும்படி செய்து விட்டது. தன்னுடைய உயிரைக் காட்டிலும் அதிக அருமையான தன் குழந்தையின் வேதனையைப் பொறுக்க முடியாமல் அவளது மனமும் சரீரமும் நொறுங்கி விட்டன. அவள் ஹிருதய தீபம் அணைந்தது: தன் குழந்தையையும் உலகத்தையும் விட்டுவிட்டுக் கண்ணை மூடினாள்.



"குடையை வெளியிலே வைத்துவிட்டு உள்ளே சாப்பிடப் போயிருந்தேன். குடையை யாராவது திருடிக் கொண்டு போய்விடப் போகிறானே என்று சீக்கிரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொள்ளும்படியாக ஆகி விட்டது."

"உங்கள் கேஸ் தேவலை, ஸார்! நான் அரை குறையாகச் சாப்பிட்டு விட்டு வெளியே வந்து பார்த்தால் என் குடையை எவனோ அடித்துக் கொண்டுபோய் விட்டான். கடைசியிலே சாப்பாடும் போச்சு, குடையும் போச்சு ஸார்!"

சுசீலா, கடைசி மூச்சு போகு முன் கிரணைத் தனக்கு அருகில் அழைத்து வரும்படி கூறினாள். அருகில் கொண்டு வரப்பட்ட தன் குழந்தையின் பட்டுப் போன்ற மிருதுவான கூந்தலைத் தடவிக் கொடுத்தாள்; விரல்களால் கோதினாள். ஆஹா! அந்த ஒன்றிரண்டு விநாடியில் அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தம் அளவிட முடியாது. அந்த ஆனந்தம் நழுவி விடாமல் அதைத் தழுவிக் கொண்டு ஹிருதயத்தில் கற்ப கோடி காலத்துக்குத் தன் வாழ்க்கையுடன் பின்னிவிட வேண்டும், பிணைத்து விடவேண்டும், என்ற அடக்க முடியாத ஆசை அவனுக்கு ஏற்பட்டது. அப்போது கிரணும் பரவச மடைந்தான்.

கனவைப் போல் இனிய, ரோஜா இதழைப் போல் கனிவான அந்தக் குழந்தையையோ, சுசீலாவையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் கால தேவன் தன் கடமையை நிறைவேற்றினான்! வீட்டில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. வைத்ததெல்லாம் வைத்த இடத்திலேயே இருந்தன. ஆனால், சித்திரவதைக்கு உள்ளான, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சுசீலாவின் ஆத்மாவை மரண தேவன் எடுத்துச் சென்றான். அவனது வெற்றி அந்த வீட்டுக்குத் துக்கமாகவும் ஆபத்தாகவும் முடிந்தது.

* * *

சுசீலாவின் அடக்கமும் அறிவும் இனிய சுபாவமும் எல்லோருடைய ஹிருதயத்தையும் கவர்ந்திருந்ததால், அவளது மரணம் அவர்கள் யாவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது. மற்றெவரையும் காட்டிலும் கிரணுக்குத் தான் அது பெரிய அடியாகும்.

ஏராளமான நபர்கள் உள்ள அந்தப் பெரிய குடும்பத்தில் கிரண் திக்கற்றவனுன். தன்னந் தனியனானான். எனினும் என்ன நேர்ந்தது என்பதை அவன் அறிந்து கொண்டானு, இல்லையா என்பது யாருக்குத் தெரியும்!

கிரண் அங்கு மிங்கும் நகர்ந்து சென்றான். தன் தாயார் வழக்கமாகச் சமையல் செய்யும் அறைக்கும் படுத்துக்கொள்ளும் அறைக்குமாக நகர்ந்து சென்ற வண்ணமாய் இருந்தான். அவனது முகத்தில் சாந்தமான, வேதனை தோய்ந்த புன்முறுவல் தோன்றியது.

ஆனால் அவனது புன்முறுவலின் ஆழ்ந்த அர்த்தத்தை அறிந்து, அதற்குப் பதிலாக ஆயிரம் மடங்கு அதிக அன்புடன் புன்முறுவல் செய்வதற்கு அங்கு யாரும் இல்லை! முதலில் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எந்த முகம் தன்னை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்துமோ, அந்த முகத்தைச் சில நாட்களாக ஏன் காணவில்லை என்று அவன் மனம் ஏங்கியது.

நாளாக ஆக அவன் துக்கத்தில் ஆழ்ந்தான். 'அம்மா' என்று அவன் அரைகுறையாக உளறிக் கொண்டிருந்ததும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் அறவே நின்றுவிட்டது. ஏற்கெனவே இருந்ததுபோல் அவன் மனதில் இப்போது சாந்தியும் சந்தோஷமும் ஏற்படவில்லை.

எனினும், அவன் தாழ்வாரையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதை மாத்திரம் நிறுத்தவில்லை. முன்னரைக் காட்டிலும் அதிக நேரம் உட்கார்ந்திருந்தான். ஆகாயத்தில் யாரும் அறியாத, யாருக்கும் தெரியாத ஏதோ ஒன்றை மௌனமாக உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்தப் பையனின் பரிதாப நிலை எல்லோருடைய மனதையும் உருக்கியது. அவன் ஊமையாதலால், பேச்சினாலோ கதைகளினாலோ அவனை உற்சாகப் படுத்தவும் முடியவில்லை. அவனைச் சந்தோஷப் படுத்துவதற்காக அனந்த் ஒரு நர்ஸை நியமித்தான். ஆனால் கிரணுக்கு அவளைக் கண்டாலே பிடிக்கவில்லை. அனந்த் ஏராளமான பொம்மைகளும் விளையாட்டுச் சாமான்களும் வாங்கி வந்தான். கிரணோ அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

அவன் தாயாருடைய மரணத்துக்குப் பின் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாருமே இல்லையென்று தோன்றியது. அவன் தனக்காக நியமிக்கப்பட்ட நர்ஸைத் துக்கம் படர்ந்த கண்களால் பார்த்தான். மனிதர்கள், பொருள்கள் எல்லாவற்றிலும் அவன் தன் தாயாரையே ஊடுருவிப் பார்க்க முயற்சிப்பதுபோல் தோன்றியது. தன் தாயாரை எங்கும் காணாததால் அவன் உற்சாகம் இழந்து ஏக்கம் கொண்டான்.

* * *

சிறிது காலத்துக்குப் பின் அனந்த் மறு விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற பிரஸ்தாபம் இயற்கையாக எழுந்தது. அனந்த் சுசீலாவை ஹிருதய பூர்வமாகக் காதலித்தான். எனினும் அவளது மரணம், அனந்தை எல்லாவற்றையும் துறந்து விடும்படியோ, சந்நியாசியாகி விடும்படியோ செய்யவில்லை. தவிர, அவன் மிகவும் இளைஞன் ஆனதால், அவனுக்கு இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற விஷயம் யாருக்கும் வேடிக்கையாகவோ, இயற்கைக்கு விரோதமாகவோ தோன்றவில்லை. ஆனால் அனந்துக்குக் கவலையைக் கொடுத்த ஒரே விஷயம் கிரண்தான்.

அந்தப் பையன் தன் மௌன உலகில் நிர்க்கதியாக இருந்தான். இறந்த தன் தாயாரின் இனிய ஞாபகம் அவன் மனதை விட்டுக் கொஞ்சமும் அகலவில்லை. எனவே கனவு உலகில் உள்ள அவனைக் கலக்கவோ, அவனது வேதனை தோய்ந்த கற்பனையைச் சிதைக்கவோ அனந்த் தயங்கினான்.

நிலைமையை எவ்வளவு தூரம் கிரண் உணர்ந்து கொண்டிருக்கிறான் என்பது அனந்துக்குத் தெரியாது. ஆனால், தன் அருமைத் தாயாரின் ஸ்தானத்தில் வேறொருத்தி வந்து விட்டாள் என்பதை அறிந்தால், கிரணின் இளம் ஹிருதயம் அதிர்ச்சியடையலாம். அவ்வாறு குழந்தை அதிர்ச்சியடைவதை அனந்த் கற்பனைக் கண்ணால்காணமுடிந்தது!

அனந்துவுக்குத் தன் அருமைக் குழந்தை மீதிருந்த அன்பும் பாசமும் கொஞ்சமல்ல. கிரண் தன்னுடைய மகன் என்பதைக் காட்டிலும் இறந்த தன் மனைவியினுடைய காதலின் சின்னம் என்பதையே அவன் முக்கியமாகக் கருதினான். எனினும் கிரண் விஷயத்தில் அனந்த் தன் இஷ்டம் போல் அக்கறை எடுத்துக் கொள்ள முடியவில்லை.

கிரணுக்குப் பேச முடியாததால் அவன் விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. கிரணின் முகத்தில் எப்போதும் விவரிக்க முடியாத சோகம் படர்ந்திருந்ததால், அந்தச் சோகத்தை மாற்றுவதற்கு வழி என்ன என்பதும் தெரியவில்லை. கிரணை அனந்த் எப்போதும் கவனிக்க முடியாததற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அதாவது டாக்டர் தொழிலில் அவனுக்கு ஓய்வு கிடைக்காததுதான். (அடுத்த இதழில் முடியும்)

இது எப்படி?

ஸோமாஸ்

டாக்டர் கிருஷ்ணன் நல்ல கைராசிக்காரர். இவர் வீடும் டிஸ்பென்ஸரியும் ஒரே இடத்தில் இருந்தன. தமது பங்களாவின் முன் புறத்திலேயே டிஸ்பென்ஸரியை வைத்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டு வாசல் முன்புறத்தில் சதா காலமும் கூட்டமாக இருக்கும். டாக்டருடைய பிரக்யாதி காரணமாக அந்தத் தெருவே ஜன நெருக்கம் அதிகமாக இருந்தது. அந்த நெருக்கம் காரணமாக டாக்டரின் தொழில் மிகவும் வெற்றிகரமாக நடந்து வந்தது. ஆமாம், அவர் வீட்டு வாசலில் உள்ள நெருக்கடி காரணமாக மோட்டார், ரிக்ஷா முதலிய வண்டிகளில் விபத்துக்கு உள்ளாகிறவர்கள் டாக்டர் கிருஷ்ணனிடம் தானே வந்தாக வேண்டும்!

டாக்டர் கிருஷ்ணனால் இன்னொருவர் கூடத் தம் தொழிலை மிகவும் வெற்றிகரமாக நடத்தி வந்தார். டாக்டர் வீட்டுக்குச் சமீபமாக அந்த மனிதர் ஒரு ஹோட்டல் வைத்திருந்தார். டாக்டரிடம் வருபவர்கள், காப்பி சாப்பிடுவதற்கு அந்த ஹோட்டலுக்கு ஏராளமாகப் போவார்கள்.


டாக்டர் கிருஷ்ணனுக்கும் அந்த ஹோட்டலினால் அமோகமான தொழில் அபிவிருத்தி இருந்தது. அது எப்படி என்று கேட்கிறீர்களா! அந்த ஹோட்டலில் சாப்பிடுகிறவர்கள் தங்கள் வயிற்றுக் கோளாறைத் தீர்த்துக் கொள்ள டாக்டர் கிருஷ்ணனிடம் ஏராளமாக வந்தார்கள். அது அவருக்கு லாபம்தானே! பிறகு அந்த ஹோட்டலையும் அவரே வாங்கி நடத்த ஆரம்பித்து விட்டதாகக் கேள்வி.

டாக்டர் கிருஷ்ணனின் பிரக்யாதியைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்த வெளியூர்க்காரர் ஒருவர் அவரிடம் தம்மைப் பரிசோதித்துக் கொள்ளும் நோக்கத்துடன் வந்தார். டாக்டர் வீட்டு வாசலில் 'க்யூ' வரிசையில் ஏராளமான பேர்கள் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். இன்னொரு 'க்யூ' வாசற் புறத்தை நோக்கியபடி டாக்டர் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த வண்ணமாக இருந்தது. அவர் மிகவும் சிரமப்பட்டு உள்ளே நுழைந்து விட்டார்.

உடனே நர்ஸ் ஒருத்தி வந்து அவரை இன்னொரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே பெரிய பெரிய பெஞ்சிகள் போடப்பட்டிருந்தன. அந்தப் பெஞ்சிகளிலெல்லாம் ரொம்பப் பேர் உட்கார்ந்திருந்தனர்.

அந்த அறைக்குச் சென்றதும், நர்ஸ் அந்த வெளியூர்க் காரரைப் பார்த்து, "ஸார், தயவு செய்து உங்கள் கோட்டு, ஷர்ட், பனியன் எல்லாவற்றையும் கழற்றி, கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டுத் தயாராயிருங்கள்!" என்றாள்.

வந்தவர் சுற்று முற்றும் பார்த்தார். அந்த அறையில் ஏற்கெனவே இருந்தவர்கள் எல்லோரும் சட்டை, துணி இல்லாமல் வெறும் உடம்போடு பெஞ்சிமீது உட்கார்ந்திருந்தார்கள்.



"என்ன சொன்னீர்கள்! கோட்டு, ஷர்ட், பனியன் எல்லாவற்றையும் கழற்றிவிட வேண்டுமா!" என்று கேட்டார் அந்த வெளியூர்க்காரர்.

நர்ஸ், கோபத்துடன், "டாக்டரிடம் நீங்கள் போன பிறகு இதை யெல்லாம் நீங்கள் செய்து கொண்டிருக்க முடியாது!" என்றாள்.

வெளியூர்க்காரர் "இல்லை......எனக்கு......" என்று என்னென்னவோ சொல்லுவதற்குப் பெரு முயற்சி செய்தார்.


"உங்கள் புராணங்களையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் சட்டையைக் கழற்றிவிட்டுத் தயாராக இல்லையென்றால் டாக்டர் உங்களைப் பார்க்க மாட்டார்!" என்று நர்ஸ் சத்தம் போடவே வெளியூர்க்காரர் தம் கோட்டு, ஷர்ட், பனியன் முதலியவைகளைக் கழற்றி மாட்டி விட்டார்.

வெளியூர்க்காரர் மிகவும் அலுப்போடு, அங்கிருந்த ஒருவரைப் பார்த்து, "என்ன ஐயா, இது! அக்கிரமமா யிருக்கிறதே! எனக்கு உடம்புக்கு ஜுரம், கிரம் ஒன்றுமில்லை. தொண்டையில் கொஞ்ச நாட்களாக விழுங்க முடியாமல் வலிக்கிறது. இந்த டாக்டர் ரொம்பப் பிரசித்திபெற்றவராயிருப்பதனால் இவரை இந்த நோய் சம்பந்தமாக யோசனை கேட்கலாம் என்று வந்தேன். நாம் எதற்காக வந்திருக்கிறோம் என்பதைக் கேட்டுக் கொள்ளாமலே சட்டை, பனியன் எல்லாவற்றையும் கழற்றி விடும்படி அதிகாரம் பறக்கிறதே!" என்றார்.

இதைக் கேட்ட மற்றவர், "ஸார், நீங்கள் பரவாயில்லை. உங்களுக்குத் தொண்டைக் கோளாறாவது இருக்கிறது! எனக்கு ஒரு நோயும் இல்லை. நான் பக்கத்துக் கிராமத்திலிருந்து வந்திருக்கிறேன். அங்கே என் பெண்ணுக்கு ஏதோ கொடிய ஜுரம் பற்றிக் கொண்டு பாடாய்ப் படுத்துகிறது. இரண்டு மூன்று டாக்டர்கள் பார்த்து ஒன்றும் புரியாமல் கை விட்டு விட்டார்கள். யாரைக் கேட்டாலும் ஒரேமாதிரி 'டாக்டர் கிருஷ்ணனைப் போய்ப் பாருங்கள். அவரிடம் விஷயத்தைச் சொல்லி, உங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கச் சொல்லுங்கள். நிச்சயம் குணம் ஏற்படும்!' என்று சொல்லுகிறார்களே என்று இங்கே வந்தேன். இங்கே என்னடா என்றால், நோய் இருக்கிறதோ இல்லையோ, டாக்டர் பரிசோதனைக்குத் தயாராய் இருக்க வேண்டியிருக்கிறது. இது எப்படி!" என்று பரிதாபமாகக் கேட்டார்.

இதுவரையில் இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இன்னொரு இளைஞர், "நீங்கள் சொல்லுவதெல்லாம் ரொம்ப ரொம்பத் தேவலை. என் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கது. எனக்குச் சொல்லுவதற்கே வெட்கமா யிருக்கிறது. டாக்டர் பெண்ணைப் பார்க்கிறதற்காக நான் சென்னையிலிருந்து வந்திருக்கிறேன். என் நண்பர், டாக்டருக்கு ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். பெண் பார்க்க வந்த நான் இருக்கும் அலங்கோலம் ரொம்ப மோசமாயில்லையா! பெண் பார்த்தது போதும் என்று, சொல்லாமல் வெளியேறி விடலாம் என்று பார்த்தால், டாக்டர் பரிசோதனை முடிந்த பிறகுதான் வெளியே போக முடியுமாம்! இது எப்படி!" என்று கேட்டார்.

வெளியூர்க்காரர் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.



நகரத்தை யடுத்த காடு. அந்தக் காட்டில் ஒரு ஆமை வசித்து வந்தது. எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்கிற ஆசை அதற்கு நிறைய உண்டு. ஆனால் அது யாருக்கு எந்த உதவியைச் செய்தாலும் அது தவறுதலாகப் போய் விபரீதத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். அதைக் கண்டு மற்ற ஆமைகளும் முயல்களும் கேலி செய்து வந்தன.

அன்று அந்த ஆமை காட்டிலுள்ள ஆமைகள் முயல்களிடமெல்லாம் சென்று "வாருங்கள், மலைக் காட்டில் புதிய சர்க்கஸ் வந்திருக்கிறது. போய்ப் பார்த்து விட்டு வரலாம்" என்று கூறியது. மற்ற ஆமைகளும், முயல்களும் சர்க்கஸ் என்றதும் ஆசைப்பட்டு அதனுடன் புறப்பட்டன.

சர்க்கஸ் நடக்கும் இடத்துக்குச் சென்ற போது வெறும் வெட்ட வெளிப் பிரதேசமே காட்சியளித்தது. "அடாடா! இங்கேதான் நான் மூந்தின நாள் சர்க்கஸ் பார்த்தேன். இன்று இல்லையே?" என்றது ஆமையார். ஏமாற்றமும் வெகு தூரம் நடந்து வந்த களைப்பும் மற்ற மிருகங்களுக்கு மிகுந்த கோபத்தை யளித்தது. "அட! உதவாக்கரை ஆமையே! உன் பேச்சைக் கேட்டு நாங்கள் வந்தோமே? வேண்டுமென்றே எங்களை அலைக்கழிக்கத்தானே இவ்வாறு தந்திரம் செய்தாய்?" என்று கூறி அவை ஆமையைப் பொத்துப் பொத்தென்று அடித்தன. ஆமை அடிபடாமல் இருப்பதற்காகத் தன் தலையைச் சுருக்கிக் கொண்டது. அதற்குப் பிறகு அந்த ஆமை என்ன சொன்னாலும் எந்த மிருகமும் நம்புவதில்லை. அதற்கு உதவாக்கரை ஆமை என்ற பட்டமும் தானாகவே வந்தடைந்தது.

ஒரு நாள் இரண்டு மனிதர்கள் அந்தக் காட்டுக்கு வந்தார்கள். காட்டைச் சுற்றிப் பார்த்து விட்டு, "என்ன! இந்தக் காடு நகரத்தை யடுத்திருக்கிறது. இங்கே நாம் வீடு கட்டிக் கொண்டால் என்ன?" என்று கேட்டான் ஒருவன்.

"ஆமாம்! அது நல்ல யோசனைதான். இங்கேயுள்ள மரங்களை வெட்டி விட்டு அதையே நம் வீடு கட்டுவதற்கு உபயோகப் படுத்திக் கொள்ளலாம்" என்றான் மற்றவன்.

"அப்படியானால் நாம் நாளைக்கே நாலைந்துபேரை அழைத்துக் கொண்டு வந்து மரத்தை வெட்டி வீடு கட்ட ஆரம்பித்து விடலாம்" என்றான் முதல் மனிதன்.

மரப் புதர்களில் ஒளிந்து கொண்டிருந்த ஆமை, முயல் போன்ற மிருகங்களுக்கு இதைக் கேட்ட போது பகீரென்றது. "என்ன! வெகு காலமாக வாழ்ந்த இடத்திலிருந்து ஓட வேண்டி வந்து விட்டதே? இதற்கு நாம் என்ன செய்யலாம்" என்று அவைகள் வருத்தப்பட்டுக் கொண்டன.

அன்றிரவு உதவாக்கரை ஆமை மிகத் தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்தது. தன் மண்டை வெடித்து விடும் அளவு யோசனை செய்தது. கடைசியில் அதன் மூளையில் ஒரு யோசனை உதித்தது.

'ஆமாம்! நாம் இந்தக் காட்டை விட்டுப் போகப் போகிறோமல்லவா? போவதற்கு முன் ஒரு பெரிய விருந்து வைத்தால் என்ன?"



"என்ன ஸார் எனக்கு 'ஸைபர்' மார்க்குக் கொடுத்திருக்கிறீர்கள்?"

"நான் என்னடா பண்ணட்டும்? அதற்குக் கீழே எனக்கு மார்க்குக் கொடுக்கத் தெரியவில்லையேடா!"

என்று அதற்குத் தோன்றியது. ஆமாம்! ஆனால் ஆமை விருந்துக்குக் கூப்பிட்டால் மற்ற மிருகங்கள் வருமா? மிருகங்கள் வரா விட்டால் வேண்டாம். காட்டை யடுத்துள்ள குளத்தில் நிறையத் தவளைகளும் நண்டுகளுமிருக்கின்றன. அவைகளைக் கூப்பிட்டு வந்து ஒரு பெரிய விருந்து நடத்தலாம் என்று முடிவு செய்தது.

மறுநாள் காலையில் எழுந்ததும் எழாததுமாக உதவாக்கரை ஆமை விருந்தினர்களை அழைக்கச் சென்றது. பிறகு வந்து விருந்து தயாரிக்க வேண்டுமல்லவா?

ஆமை சிறிது தூரத்திலிருந்த பெரிய குளத்துக்குச் சென்றது. அந்தக் குளத்தில் நிறையத் தவளைகளும் நண்டுகளும் வசித்து வந்தன.

உதவாக்கரை ஆமை அந்தக் குளத்தருகே சென்று, "ஐயா, தவளையாரே! நான் காட்டில் இன்று ஒரு பெரிய விருந்து வைக்கப் போகிறேன். அதற்குத் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

"ஆஹா! கட்டாயம் என் குடும்பத்தோடு விருந்துக்கு வந்து விடுகிறேன்" என்று பதிலளித்தது பெரிய தவளையார்.

பிறகு அக்குளத்திலுள்ள நண்டாரைக் கூப்பிட்டு, "நண்டாரே! தாங்களும் தங்கள் குடும்பத்தோடு விருந்துக்கு வர வேண்டும்" என்றது. நண்டாரும் "ஆகட்டும்" என்றது.

அன்று அந்தக் காட்டிலுள்ள மற்ற ஆமைகளும் முயல்களும் ஆச்சரியப்படும்படியாகத் தவளைகளும், நண்டாரும் குடும்ப சகிதமாக விருந்துக்கு விஜயம் செய்தனர்.

விருந்து அமர்க்களமாக நடந்தது. எல்லோரும் வயிறாரச் சாப்பிட்டபின் இளைப்பாற ஆரம்பித்தனர். அச்சமயம் பார்த்து முந்தின நாள் வந்த மனிதர்களிருவரும் தங்கள் கூட்டத்தோடு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய கையில் மரத்தை வெட்டுவதற்கு வேண்டிய கோடாலி, ரம்பம் முதலியவை இருந்தன.

மனிதர்கள் வருவதைக் கண்டு அங்குள்ள ஒவ்வொரு ஆமையும் முயலும் புதருக்குள் ஒளிய ஆரம்பித்தன. தவளைகள் அவர்களைக் கண்டு பயந்து அங்கேயே தத்தித் தத்திக் குதித்தன.



கோடாலியுடன் வந்த மனிதர்கள் மரத்தை வெட்டத் தொடங்கினார்கள். ஒருவன் மரத்தை வெட்டுவதற்காகக் கையை ஓங்கும் போது காலில் ஏதோ வழுக்குவதைக் கண்டு ஒரு குதி குதித்தான். அவன் கையிலிருந்த கோடாலி நழுவியது.

"பாருங்கள். இந்த இடங்களில் பூராவும் தவளைகளும் நண்டுகளும் நிறைய இருக்கின்றன. தவளைகளும் நண்டுகளும் இங்கே நிறைய இருப்பதால் இந்த இடம் ஈரப்பசையுள்ளது. ஆகையால் இங்கே வீடு கட்டினால் வெகு நாள் நிலைத்திருக்காது" என்றான் அந்த மனிதன்.

"அப்படியானால் இந்தக் காட்டில் வீடு கட்டவேண்டாம்" என்று கூறி மற்றவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

புதர்களில் ஒளிந்து கொண்டிருந்த ஆமைகளும் முயல்களும் வெளி வந்தன. "பார்த்தீர்களா? இந்த இடம் ஈரப் பசையுள்ளது என்று ஓடி விட்டார்கள். இதை எப்படிக் கண்டு பிடித்தார்கள்? தவளைகளையும் நண்டுகளையும் பார்த்ததினால்தான்" என்று கூறி அவைகள் சந்தோஷப்பட்டுக் கொண்டன.

இச் சமயத்தில் உதவாக்கரை ஆமை "நான்தான் நண்டுகளையும், தவளைகளையும் விருந்துக்கு அழைத்து வந்தேன்" என்று கூறியது. அதைக் கேட்டதும் உதவாக்கரை ஆமையை அவைகள் அப்படியே தூக்கிக்கொண்டு கூத்தாடின. அந்த தினத்திலிருந்து ஆமைக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாகிவிட்டன.

அந்த இடத்தை விட்டுத் தாங்கள் யாருமே போக வேண்டியதில்லையென்று அறிந்தபோது அவைகளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. அந்த ஆனந்தத்தில் தவளைகளுக்கும், நண்டுகளுக்கும் விருந்து வைப்பதில் முனைந்தன.

அன்றைய விருந்தில் உதவாக்கரை ஆமையார்தான் பிரதானமாக விளங்கியது. தன் நண்பர்களுக்குதவி செய்ய வேண்டும் என்ற ஆசை நிறைவேறியதில் அதற்கு ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லவும் வேண்டுமா?



குப்பன் ஏழையாய் இருந்தாலும் அவன் ஆசைகளுக்கு ஒரு எல்லையே கிடையாது. அவன் தாயார், நம்முடைய சக்திக்குத் தகுந்தாற்போல்தான் ஆசைப்பட வேண்டும் என்று பல தடவைகள் சொல்லி யிருக்கிறாள்.

ஒரு நாள் குப்பனின் தாயார், தோசை வார்த்தாள். சுடச்சுட வார்த்துக் குப்பனுக்குப் போட்டாள். குப்பன் ருசி பார்த்துச் சப்புக்கொட்டித் தின்றுகொண்டே, "அம்மா! தோசை இன்றைக்கு ரொம்பப் பிரமாதம். எனக்கு ஒரு ஆசை. இந்தத் தோசையை நாம் மட்டும் தின்று என்ன பிரயோஜனம்? நம்ம மகாராஜாவுக்குக் கொண்டு போய்க் கொடுத்தால் என்ன?" என்றான்.

அதற்கு அம்மா, "குப்பா, உன் ஆசைக்கு ஒரு அளவு வைத்துக் கொள்ள வேண்டும்! மகாராஜா இந்தத் தோசைக்குத்தான் காத்துக் கிடக்கிறாரா? அவர் எங்கே? ஏழைகளாகிய நாம் எங்கே? இது என்ன அசட்டு ஆசை? அதை விட்டு விடு. இந்த ஆசையினால் உன் உயிருக்கே ஆபத்து வரும். இது மகாராஜாவின் காதில் விழுந்தால் பெரிய அவமதிப்பாக அல்லவா நினைப்பார்!" என்று பயந்து கொண்டே சொன்னாள்.

இதே சமயத்தில் தூரத்தில் பறையடிக்கும் சப்தம் கேட்டது. "எவன் ஒருவன் அரசனுக்குப் பிடிக்கும் பக்ஷணங்களையும் பணியாரங்களையும் கொண்டு தருகிறானோ அவனுக்குச் சிறந்த பரிசு வழங்கப்படும்; இந்தப் போட்டியில் தனவந்தர்கள் தான் கலந்து கொள்ளலாம்!" என்று பறையடிப்பவன் சொன்னது தெளிவாகக் கேட்டது.

உடனே குப்பன் 'சபாஷ்! இதோ போய் நான் என் தோசையை அரசருக்குக் கொடுத்து விடுகிறேன்!' என்று சொல்லி விட்டுத் தாயார் என்ன சொல்லியும் கேளாமல் தன்னுடைய இரண்டு தோசைகளையும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு பறந்தோடி அரண்மனை வாசலை அணுகினான்.

அதே சமயத்தில் தனவந்தர்கள் பெரிய கூடைகளில் உயர்ந்த பக்ஷணங்களை தங்க ரேக்குகளிலும், வெள்ளி ரேக்குகளிலும் வைத்துக் கூடையைப் பட்டுப் பீதாம்பரங்களினால் மூடிக் கொண்டு வந்தார்கள். எங்கும் நெய் வாசனை மூக்கைத் துளைத்தது. அரண்மனை வாசலில் கீழே பல பக்ஷணக் கூடைகள் இறக்கப்பட்டன. ஒவ்வொன்றாக உள்ளே போயிற்று. அப்பொழுது ஒருவருக்கும் தெரியாமல் குப்பன் ஒரு கூடையில் ஏறி உட்கார்ந்து பீதாம்பரங்களினால் தன்னைப் போர்த்திக்கொண்டு விட்டான்.

ஒவ்வொருவராக அரசனிடம் தாம் கொண்டு வந்த பக்ஷணக் கூடைகளைத் திறந்து காண்பித்தார்கள். அரசன் பக்ஷணங்களைப் பார்த்த போதெல்லாம், "குலோப் ஜானா? வேண்டாம். டில்லி பாதுஷாவா? வேண்டவே வேண்டாம்!" என்று சொல்லிய வண்ணமே மறுத்துக் கொண்டிருந்தான். குப்பன் ஒளிந்து கொண்டிருந்த கூடையும் திறக்கப்பட்டது. எல்லோரும் ஆச்சரியப் படும்படியாக அவன் வெளியே குதித்து "மகாராஜா, இதோ என் தாயார் வார்த்துக் கொடுத்த தோசை! சூடாக இருக்கிறது! நீங்கள் தின்ன வேண்டும். ரொம்ப ருசி!" என்றான். அரசன் சிறுவனின் அன்பையும் தைரியத்தையும் கண்டு வியந்து, தோசையை வாயில் போட்டுக் கொண்டு "அடாடா! என்ன ருசி! எவ்வளவோ உயர்ந்த பக்ஷணங்கள் தின்றிருக்கிறேன். ஆனால் தோசை தான் நான் தின்றதே இல்லை. அதற்கு இவ்வளவு ருசியா? இந்தப் போட்டியில் ஜயித்தவன் இந்த ஏழைச்சிறுவனே" என்று கூறினார்.

வீட்டுக்குத் திரும்பினான். அவன் தாயார் ஓடிவந்து பார்த்துப் பிரமித்துப் போனான். "அம்மா என் ஆசை பூர்த்தியாகி விட்டது" என்று சொன்னான் குப்பன்.

"அப்பா! உன் அன்புக்கு அரசர் பரிசு கொடுத்து விட்டார்!" என்றாள் தாயார்.

அவள் விரும்பியது

அம்புஜம்

பல நாட்களாகச் சேர்ந்திருந்த குப்பையை அப்புறப் படுத்துவதில் முனைந்திருந்தாள் கோமதி. ஆனால் அவள் மனம் மட்டும் வேலையில் லயிக்காமல் எதிலோ சென்று கொண்டிருந்தது.

அந்த வீட்டுக்குக் குடி வந்த புதிதில் அந்த மொட்டை மாடியை மனமார விரும்பி அதைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொண்டிருப்பாள். தொட்டிகளில் மருக்கொழுந்துச் செடிகளையும், ரோஜா, மல்லிகைச் செடிகளையும் வளர்த்து மாடியில் வைத்திருந்தாள். இளந் தம்பதிகளான அவளும் அவள் கணவனும் மாலை நேரத்தில் மாடியில் பொழுதைக் கழிக்க விரும்பி வந்தால் மல்லிகையின் மணம் அவர்களை வரவேற்கும். அதற்காகவே மல்லிகை மலர்களைப் பறிக்காமல் விட்டிருப்பாள் கோமதி.

ஆனால் இன்று? செடிகள் தண்ணீரின்மையால் காய்ந்து கிடந்தன. சில செடிகள் ‘இவள் தண்ணீர் விடவில்லை என்பதற்காக உயிரை விடுவதா’ என்ற வைராக்யத்தின் காரணமாகத்தான் போலும், அரை குறையாக உயிர் வாழ்ந்தன! மாடியே குப்பையும் கூளமுமாகக் கிடந்தது. இன்றுதான் அவற்றை அகற்றப் புறப்பட்டிருக்கிறாள் கோமதி.

ஆம்; இன்று ஒரு விசேஷ தினம்தான், அவள் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கும் தினம். அதனால் அவள் மனம் இன்று ஒரே குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

இன்று காலை படுக்கையை விட்டு எழுந்திருக்கும் பொழுது அவள் மனம் ஒரேயடியாகச் சோர்ந்திருந்தது. வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொழுது காரணம் இல்லாமல் அழுகை அழுகையாக வந்தது. காரணம் இல்லாமல் என்ன? மண வாழ்க்கையைப் பற்றி அவள் கட்டிய மனக் கோட்டைகள் என்ன? இப்போது நடப்பது என்ன? மணமான இரண்டாவது வருஷ ஆரம்பத்திலேயே வாழ்க்கை சப்பிட்டுப் போய், கசக்கவும் ஆரம்பித்து விட்ட தென்றால் அதைவிட துர்பாக்ய நிலை வேறு என்ன இருக்க முடியும்? அவளுடைய கணவன் அன்பான உள்ளம் படைத்தவன்; அழகிய இளைஞன். ஆனால் கோமதி அவனிடம், கண்ட குறை...?

“இன்று மாலை ஒரு மணி நேரம் லீவு எடுத்துக் கொண்டு சீக்கிரம் வந்து விடுகிறீர்களா?” என்று கோமதி தன் கணவனை அன்று காலையில் ஆபீசுக்குப் புறப்படும் போது கேட்டாள். வாசுதேவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். பல நாட்களாகச் சகஜமாகப் பேசாத கோமதி அன்று அப்படிப் பேசியதால் அவன் முகம் மலர, ‘உம்’ என்று மெல்லிய குரலில் ஆமோதித்துவிட்டு வெளியே புறப்பட்டான். அவனுடைய மலர்ந்த முகம் கோமதியை எந்த விதத்திலும் உற்சாகப் படுத்தவில்லை. அவள் ஏமாற்றமே அடைந்தாள். சீக்கிரம் வர வேண்டும் என்றது எதற்காக என்று கூடக் கேட்காமல் புறப்பட்டு விட்டானே அவன்!

பல்லைக் கடித்துக் கொண்டு புன்னகையுடன், “எதற்காகத் தெரியுமா?” என்று கேட்டு விட்டு, பிறகு அவளே, “இன்று பௌர்ணமி, நம் வீட்டு மொட்டை மாடியில் நிலா விருந்து” என்றாள்.

ஊராருக்கென்ன! அவர்கள் சொல்லலாம், மனைவியின் உத்தரவுக்குக் காரணம் கேட்காமலே கணவன் கீழ்ப்படிகிறான் என்று. ஆனால் கோமதியின் மனம் அதையா விரும்பியது!

கோமதி தனிக் குடித்தனம் செய்ய வந்த அன்றே வாசுதேவன் தன் கொள்கைகளை அவளுக்கு விளக்கிச் சொன்னான். தான் மனைவியை அடிமையாக நினைக்கவில்லை என்றும், குடும்ப விஷயங்களில் அவளுக்குப் பூரண சுதந்திரமும் சம உரிமையும் உண்டு என்றும் அவன் சொல்லக் கேட்ட கோமதி, பெரு மகிழ்ச்சி அடைந்தாள்.

அவன் வாக்களித்தபடியே அவளைச் சுதந்திரமாக விட்டிருந்தான். ஆனால்......சம உரிமை! அவன் சம உரிமை வழங்கிய விந்தைதான் அவளுக்கு ஏமாற்ற மளித்தது. அந்த ஏமாற்றம் கசப்பாகி, வெறுப்பாக மாறி, கணவனை உதாசீனமாக நினைக்கச் செய்து வாழ்க்கையையே பாழ் பண்ணிவிடும் போல் தோன்றியது. எல்லாவித சௌகரியங்கள் இருந்தும் சந்தோஷமாக வாழ முடியவில்லையென்றால் தங்கள் இருவர் மேலும் தான் குற்றம் என்று நினைத்தாள் கோமதி. அவர்கள் என்ன. அந்நியர்களா? மனம் விட்டுப் பேசி மனஸ்தாபத்தைப் போக்கிக் கொள்ள முடியாதா? அதற்குத்தான் நிலா விருந்து ஏற்பாடு செய்தாள். இருவர் மனமும் குளிர்ந்திருக்கும் சமயம் விஷயத்தை எடுத்து விட்டால், அனாவசியமான படபடப்பும் ஆத்திரமும் உண்டாகாது. காரியம் அமைதியாகவும் சுலபமாகவும் முடிந்து விடும் என்று எண்ணினாள் கோமதி.

* * *

பழைய நினைவுகளில் லயித்திருந்த கோமதி, கடிகாரம் மணி நான்கு அடிக்கக் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்தாள். ஏழு மணிக்கு வந்து விடுவான் வாசுதேவன். அவள் இன்னும் ஒரு ஏற்பாடும் பண்ணவில்லை! பட்சணத் திட்டத்திலோ, வஞ்சனை இல்லாமல் பல வகைகளைச் சேர்த்திருந்தாள்.

ஆறு மணி சுமாருக்கு எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு அலங்காரம் செய்து கொள்ள ஆரம்பித்தாள் கோமதி. அன்றைய அலங்காரம் அலாதியாக அமைந்து விட்டது. தனக்கிருக்கும் சொற்ப ஆடை ஆபரணங்களைக் கொண்டே பல விதங்களில் தன்னை அலங்காரம் செய்து கொள்ளுவாள் அவள். கவர்ச்சிகரமாக அலங்கரித்துக் கொள்ளும் கலையில் அவளுக்கு நல்ல தேர்ச்சி. அன்றைய அலங்கார விஷயத்தில் அவளுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டிருந்தது. ஆனால் விருந்தும் அலங்காரமும் நன்றாக இருந்து விட்டால் மட்டும் போதுமா? அன்றையப் பேச்சிலும் நடத்தையிலும்தானே அவள் வாழ்க்கையின் எதிர்காலமே இருக்கிறது! ஒரு வேளை மற்ற விஷயங்களில் போல் இதிலும் வாசுதேவன் நடந்து கொண்டு விட்டால்? 'இன்று எதற்காக இந்த விசேஷ ஏற்பாடு' என்று கேட்காமல் மௌனமாகச் சாப்பிட்டு விட்டு அவன்பாட்டுக்குப் போய் விட்டால்—இவ்வாறு நினைத்ததும் கோமதியின் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது போல் தோன்றியது.

கடைசியில் அவள் கற்பனை பண்ணாத விதத்தில்தான் அவளை ஏமாற்றி விட்டான் வாசுதேவன். அவன் மணி எட்டாகியும் வீட்டுக்கு வரவில்லை. கருத்துடன் பண்ணி வைத்த பட்சணங்கள் ஆறிப்போக ஆரம்பித்ததும் கோமதிக்கு எரிச்சலாக வந்தது. பெருமூச்சு விட்டபடி கணவன் வரும் வழிமேல் விழி வைத்து உட்கார்ந்து விட்டாள் கோமதி.

*　　　　*　　　　*

காலையில் ஆபீசுக்குப் போகும்பொழுது வாசுதேவன் மனம் ஒரு நிலையில் நிற்காமல் பல வித உணர்ச்சிகளில் தாவிக் கொண்டிருந்தது.

அவன் பெண்ணைத் தெய்வமென்று போற்றுபவன். வீட்டு வேலைகளைச் செய்யும் வேலைக்காரியாகவும் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயந்திரமாகவும் ஆண் பெண்ணைக் கருதக் கூடாதென்பது அவன் கொள்கை. மனைவிக்கு எல்லா விஷயங்களிலும் பூரண சுதந்திரம் கொடுத்து விட வேண்டும்; அவளுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தன் நண்பர்களிடம் இந்தக் கொள்கைகளைப் பற்றிச் சொல்வான். அப்பொழுதெல்லாம் அவன் நண்பர்கள், "எல்லாம் உனக்கு விவாகமாய் நீ உன் மனைவியை நடத்தும்போது தெரிந்து விடுகிறது. அப்பொழுது ஆளே மாறி விடுவாய். தன் விஷயம் என்றால் தனிதான் எல்லோருக்கும்" என்பார்கள். அவர்களுடைய அந்தக் கடைசி வாக்கியமே அவன் தன்னுடைய கொள்கையை நடைமுறையில் அனுஷ்டிக்க ஊக்கம் அளித்தது.

ஆனால், தான் என்னதான் சுதந்திரமும் உரிமையும் கொடுத்தும் கோமதியிடம் சந்தோஷத்தையே காண முடியவில்லையே! ஆரம்பத்தில் சில நாட்கள் உற்சாகமாகக் காணப்பட்ட அவள் இப்போதெல்லாம் ஏதோ ஏக்கம் பிடித்தவள் போல் காணப்படுகிறாள். சில சமயங்களில் தான் கேட்ட கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளிப்பதுகூட இல்லை. சில சமயங்களில் எரிந்துகூட விழுகிறாள்! நாளாக ஆக இவள் இப்படி மாறுவானேன்? தான் கொடுக்கும் சுதந்திரம் தான் இதற்குக் காரணமோ? சே, சே. பெண் சுதந்திரத்தைப் பலமாக ஆதரிக்கும் தான்கூட இப்படி நினைப்பதா? பின் அவள் இப்படி அலட்சியமாக நடந்து கொள்வானேன்? அதற்கும் அவளுக்கு உரிமை உண்டு என்று நினைக்கிறாளோ?

நினைக்க நினைக்க அவனுக்குக் குழப்பம் தான் அதிகமாயிற்று.

அவனுடன் ஒரே பந்தலில் விவாகம் பண்ணிக் கொண்ட அவன் தம்பி எவ்வளவு சந்தோஷமாக இல்லறம் நடத்துகிறான்! பெண் சுதந்திரத்தில் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. "பெண்களுக்கு ஓரளவு தான் இடம் கொடுக்கலாம்" என்று அவன் சொல்வான். அப்படிப்பட்ட அதிகார எண்ணம் உள்ளவன் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். அவன் மனைவியும் அவனைத் தெய்வம்போல் மதிப்பதுடன் சகஜமாகவும் பழகுகிறாள். அவர்கள் இரண்டு பேரும் இரண்டு மாதங்களுக்கு முன் இங்கே வந்து தங்கியபோது அவர்களுடைய அந்நியோன்யத்தைக் கண்டு சிறிது பொறாமைகூடப் பட்டான் வாசுதேவன். தன்னை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் கணவனிடம் அவள் எவ்வளவு மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறாள்; அவன் சுதந்திரமும் சம உரிமையும் கொடுத்துக் கோமதி அவனை உதாசீனம்



மாஜிஸ்டிரேட் :—இதென்ன ஐயா நூதனமாக இருக்கிறது! உங்களை அடிக்க வந்தவனிடம் உங்கள் கைக்கழியையே கொடுத்து அடிக்கச் சொன்னீர்களாமே!

கூண்டிலிருப்பவர்:—ஆமாம். அவனுடைய கழி ரொம்ப கனமாக இருந்ததைப் பார்த்துத்தான் அப்படிச் செய்தேன்!

பண்ணுகிருள்! வேலை யெல்லாம் அவசரமாக முடித்து விட்டு அவன் வீட்டுக்குப் புறப்படும் சமயம் அவனுக்கு மேல் அதிகாரியிடமிருந்து அழைப்பு வந்தது. அவனுக்குத் திடுக்கிட்டது: அவர் என்ன வேலை வைத்திருக்கிருரோ!

அவன் எதிர்பார்த்தது போலவே அவர் அவனுக்குப் பெரிய வேலைதான் வைத்திருந்தார். பக்கத்து டவுன் ஒன்றிற்குப் போய் வரச் சொல்லி வேலை வைத்தார். 'எட்டு மணிக்கு முன்னல் திரும்ப முடியாதே!' என்று நினைத்தான் வாசுதேவன்.

* * *

வேலையை முடித்துக் கொண்டு சோர்ந்த மனத்துடன் அவன் வீட்டுக்குத் திரும்பிய போது மணி ஒன்பதாகி விட்டது. மெல்ல அருகில் வந்து நின்ற அவனை, சாய்வு நாற்காலியில் அரைத் தூக்கத்துடன் சாய்ந்திருந்த கோமதி நிமிர்ந்து பார்த்தாள்.

"ரொம்ப நாழி ஆகிவிட்டதோ?" என்று முணு முணுத்த கணவனை வெறுப்புடன் பார்த்தாள்.

"ஒரு அலுவலாக டவுனுக்கு" என்று அவன் முடிக்குமுன் குறுக்கிட்டு, "நான் உங்களைக் காரணம் கேட்கவில்லை" என்ருள். அவனும் புருஷன் தானே? அவனுக்கும் கோபம் வந்தது. வாய் திறந்தால் கடுமையான வார்த்தை வெளி வந்துவிடும் என்று பேசாமல் இருந்தான். சற்று நேரத்திற்குப் பின் "இனிமேல் தான் என்ன, சாப்பிட முடியாதா? நிலாதான் இருக்கிறதே?" என்ருன்.

கோமதி உதட்டைக் கடித்துக் கொண்டாள். முகத்தைச் சுளித்து, ஓரக் கண்களால் அவனை உதாசீனமாகப் பார்த்தாள். வாசுதேவனுல் இப்போது கோபத்தை அடக்க முடியவில்லை, அவனுள் அடங்கியிருந்த 'புருஷ குணம்' திடீரென்று வெளிப்பட்டது.

"கோமதி" என்ற இடிக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்த அவள், வாசுதேவனைப் புது மனிதனுகக் கண்டாள். அவன் கண்களில் அனல் பறந்தது.

"ஏதோ சொன்னபடி வர முடியவில்லை என்பதற்காக இந்த வெறுப்பா? அதுவும் முக்கியமான வேலை காரணமாகத் தாமதமாயிற்று என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே!" என்று இரைந்தான்.

அவன் கோபத்தைக் கண்டு சந்தோஷமடைந்தவள் போல், அவன் இரைச்சலைக் கேட்டு நிம்மதியடைந்தவள் போல் "அப்பாடா" என்ருள் கோமதி. ஒரு புருஷன் கோபித்துக் கொள்கிருனே என்ற கலக்கம் சிறிதும் இல்லாமல் அவள் சாவகாசமாக அப்படிச் சொன்னது அவன் கோபத் தீக்கு எண்ணெயாயிற்று. கோபத்தில் வார்த்தை தடுமாற, "நான்...நான் உனக்குக் கொடுத்த இடம்...உனக்குக் கொடுத்த இடம்...." என்று மேலே வாக்கியத்தை முடிக்க முடியாமல் தவித்தான் வாசுதேவன்.

அப்போதுதான் அவனுக்கு உண்மை நிலை தெரிய வந்தது! கோமதியின் புதிரான நடத்தைக்கு விடை கிடைத்தது!

"நீங்கள் எனக்கு இடம் கொடுக்கவே வேண்டாம்" என்று ஆரம்பித்த கோமதி அவனுடைய சம உரிமை—பெண் சுதந்திரக் கொள்கையைத் தாக்கு தாக்கு என்று தாக்கி விட்டாள்.

இனிய தாரத்தின் மோகத்தில் மூழ்கி 'மனைவியின் சொல்லே வேத வாக்கு' என்று நினைக்கும் கிழக் கணவனைப் போல் நடந்து கொண்டாலும் வாசுதேவன்! இளைஞனுக்கே உரித்தான அதிகார சுபாவம் அவனிடம் இல்லாததுதான் அவனுடைய குறையாம்! மனைவியின் விஷயத்தில் தலையிடாமலே—அவள் இருக்கிருளா, இறந்தாளா என்று கவனிக்காமலே—இருப்பது தானு அவள் எண்ணப்படி சுதந்திரம் கொடுக்கும் முறை? தன் விஷயங்கள் கூட மனைவியின் சொற்களால் தான் நிர்ணயமாக வேண்டும் என்று நினைப்பதுதானு அவன் சம உரிமை வழங்கும் அழகு?

"போகிறது, 'அதைச் செய், இதைச் செய்' என்று ஏவ வேண்டாம், 'நான் செய்கிறேன்' என்ருவது தைரியமாகச் சொல்லக் கூடாதா? எனக்கு எல்லா விதத்திலும் சுதந்திரம் அளித்த உங்களுடைய பேச்சு சுதந்திரத்தை நான் விழுங்கி விட்டேனு? என் சமையலை நீங்கள் புகழ வேண்டாம். 'இன்னும் கொண்டு வா' என்று உரிமையுடன் கேட்கா விட்டாலும், மீதி வைத்தால் கோபித்துக் கொள்வேனு என்று பயப்படுவது போல் அதிகமாகப் போட்டதையெல்லாம் கஷ்டப்பட்டு விழுங்க வேண்டுமா? நான் அப்படிப்பட்ட சர்வாதிகாரியாகவா உங்களுக்குத் தோன்றுகிறேன்? அப்படித் தோன்றினுலும் என்னை நீங்கள் அடக்க முயற்சி பண்ண வேண்டுமே தவிர, அடங்கியா போவது?"

கணவனை அடக்கி ஆள வேண்டும் என்ற ஆசை அவளுக்குக் கிடையாதாம், தனக்கு அடிமையாகும் கணவனை எந்தப் பெண்ணும் மதிக்கவும் மாட்டாளாம்; பெண்மைக்கே உரித்தான அன்பு கூட அப்படிப்பட்டவன் பால் அவளுக்குத் தோன்ருதாம். கடைசியில் அழுத்தமான ஒரு வாக்கியத்துடன் தன் சொல் மாரியை முடித்தாள் கோமதி.

"இருபதாவது நூற்றுண்டிலானுலும் சரி, முப்பதாவது நூற்றுண்டிலானுலும் சரி; கணவனின் ஆதரவான அதிகாரத்தின் கீழ், தான் எந்த இந்தியப் பெண்ணும் வாழ விரும்புவாள்!"

அன்று தங்கள் வீட்டு மொட்டை மாடியில் நடத்திய நிலா விருந்து வாசுதேவன் தம்பதிகளுக்குத் தேவலோகத்து அமுத உணவு போல் பிரமாதமாக இனித்தது.


நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன்
செய்தீர்களா?
மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உங்கள் பற்களை வெண்மையாகவும், ஈறுகளை ஆரோக்கியமாகவும், சுவாசத்தை இனியதாகவும் ஒரே சமயத்தில் விளங்கச் செய்கிறது.
மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையில் அடங்கியுள்ள பொருள்கள் வாயில் ஊறும் கெட்ட நீர்களையும் புளிப்புச் சத்தையும் கரைத்து பற்கள் பழுதடையாமல் காப்பாற்றி விகாரமான கறைகளையும் அகற்றி விடுகின்றன. இப்பொழுதே ஒரு டியூப் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை வாங்கி தினமும் இரண்டு தடவை உங்கள் பற்களைச் சுத்தம் செய்து வாருங்கள்.
வருஷங்களாக நான்
மக்ளீன்ஸ் உபயோகி-
த்து என் பற்கள்
அழகாகவும் வெ-
ண்மையாகவும்
இருக்கின்றன.”
இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!
MACLEANS
PEROXIDE TOOTH PASTE
MTY-3 TAM.
வியாபார விவரங்களுக்கு: ஜே. எல். மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

விளம்பரம்

சர்க்கார் கீழ்நாட்டுக் கலை
கையெழுத்துப் பிரதி நூல் நிலையம்
(Govt. Oriental Manuscript Library)
திருவல்லிக்கேணி : சென்னை-5

○●○

இந்நூல் நிலைய அதிகாரி (Curator) அவர்கள் மேற்படி நூல் நிலையத்திற்குப் பலதிறப்பட்ட மொழிகளிலுள்ள ஓலைச் சுவடிகள் போன்ற பழைய கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனது பற்றி :—

(1) அத்தகைய பிரதிகளைத் தங்கள் வசமே வைத்திருப்பவர்கள், அவற்றை மேற்படி நூல் நிலையத்திற்கு வெகுமதியாகவோ, விலைக்கோ, நகல் எடுத்துக் கொள்ளவோ கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) அல்லாத பொது ஜனங்கள், அவற்றை வைத்திருக்கும் நபர்களைப் பற்றிய தகவல்களை அறிவிக்கும்படி கோரப்படுகிறார்கள்.

(3) கையெழுத்துப் பிரதிகளைப் பெறுவதற்கு உதவி செய்பவர்கள் உசிதப்படி சன்மானம் அளிக்கப்படுவார்கள்.


(4) சகல விதமானக் கடிதப்போக்குவரத்துக்களும் மேற்படி நூல் நிலைய அதிகாரிகளுடனேயே செய்யப்பட வேண்டும்.



தாயே!
அவனை இடம்பெறச் செய்ய
உட்புற சுத்தம்
சுலபமான வழி.
EFFERVESCENT
ANDREWS
LIVER SALT
LAXATIVE
பத்திரமாயும் சுலபமாயும் உட்புற சுத்தம் பெறப் பழக இதுவே சமயம். ஜொலிப்பும் சலசலப்புமுள்ள ஒரு கிளாஸ் ஆண்ட்ரூஸ் ரம்மியமானதொரு பானம். அத்துடன் நில்லாமல் பிரதிதினமும் அது உங்கள் வாயை சுத்திகரித்து, வயிற்றை துப்புரவாக்கி, குடலுக்கும் வலு ஊட்டி முடிவில் மலசுத்தியுமளித்து ஆரோக்கியம் தரும். ஒரு தேக்கரண்டி ஆண்ட்ரூஸ் ஒரு கிளாஸ் குளிர்ந்த ஜலத்துடன் பருகுவது புத்துணர்ச்சி தரும் பானமாகவும் உட்புற சுத்தம் பெறும் மார்க்கமாயும் விளங்கும்.
ANDREWS LIVER SALT
ஆண்ட்ரூஸ் லிவர் ஸால்ட்
இணையற்ற மலமிளக்கி.
K.J.91/506

பைல் பீன்ஸ்

அவளுக்குச் சக்தியும் சந்தோஷமும் அளித்தது.





அவள் எப்போதும் நோயினால் சோர்வுற்றுக் கிடந்தாள். நண்பர்கள்கூட அவளைவிட்டுப் பிரியலாயினர். பின்னர், லக்ஷக்கணக்கான மக்கள் செய்வதுபோல, அவளும் பைல்பீன்ஸ் உட்கொள்ளத் தொடங்கினாள். இப்போது ஆனந்தமாயிருக்கிறாள். புத்துயிரும் புதிய சக்தியும் பெற்று விளங்கும் அவளைக் கண்டு அவள் நண்பர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். மருந்து போர்ட் சங்கத்தார் அங்கீகரித்துள்ள பைல் பீன்ஸ் உங்களைப் புதிய சக்தியோடும் யௌவனத்துடனும் திகழச் செய்கிறது. பைல் பீன்ஸ் மலச்சிக்கல், வயிற்று வலி, அசதி, அஜீர்ணம் முதலியவற்றை குணப்படுத்துகிறது. பைல் பீன்ஸ் உங்களுக்கு மெலிந்த, வசீகரமான தோற்றத்தை அளித்து முன்னை விட அதிக வனப்புடன் விளங்கச் செய்கிறது.

மருந்து போர்ட் அங்கீகாரம் பெற்ற இந்த அசல் பைல் பீன்ஸ்களையே பார்த்து வாங்குங்கள்

ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கோ., பி.டி. மதராஸ்

FLY: 1

பாக்கெட் பிரிண்டிங் செட்




(பிரிண்டிங் பிரஸ்) எல்லா ஆங்கில எழுத்துக்களும் கொண்ட சிறிய அச்சடிக்கும் இயந்திரம் இது. ஒன்றை வாங்கி ஐந்தே நிமிஷங்களில் உங்களது லெட்டர் பாடுகள், பில்கள், பெயர்கள் இவைகளை அச்சடித்துக் கொள்ளுங்கள். இங்க் பாடு முதலியவைகளுடன் ஒன்றின் விலை ரூ. 5-0-0 தபால் செலவு பாக்கிங் ரூ. 1-8-0.

அமெரிக்கன் ஸ்பிரிட் ஸ்டவ்



மலிவானது, உயர்ந்தது. ஓர் சிறிய அளவு ஸ்பிரிட் உங்களது தேவையைப் பூர்த்தி செய்யும். தேனீர், சிற்றுண்டி, வெந்நீர் முதலியவற்றை தயாரியுங்கள். வீட்டிலும், சுற்றுப்பிரயாணத்திற்கும் உங்களுக்கு மிக உகந்தது. ஸ்டாக்குகள் குறைவாகவே உள்ளன. விலை ஒன்று ரூ. 3-8-0 பாக்கிங் தபால் செலவு ரூ. 1-8-0 தனி.

இன்றே ஆர்டர் செய்யுங்கள்



அமெரிக்கன் மாடல் ரோல் பிலிம் பாக்ஸ்

காமிரா

உயர்ந்த லென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலையில் மலிவான மேன்மையான கேமிரா. எளிதாக உபயோகிக்கலாம். பிலிம் நெ. 120ல் நீண்ட காலம் திருப்தி அளிக்கும் $2\frac{1}{4}'' \times 3\frac{1}{4}''$ சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்திரவாதம். முழு விவரங்களடங்கிய குறிப்புகளுடன் விலை ரூ. 10-8-0 தபால் செலவு ரூ. 1-8-0 தனி. தோல் கேஸ் ரூ. 3-0-0.

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்

மின்சார சக்தியின்றியே ரூ. 15/-ல் ரேடியோ தயாரிக்கும் விதமும் மாதம் ரூ. 200/- வரை சுலபமாக சம்பாதிக்கும் அளவுக்கு மின்சாரத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். ஒன்றின் விலை ரூ. 2-8-0 தபால் செலவு அணா 12.

வீட்டில் சினிமா

இந்த சின்ன யந்திரம் மூலமாக, வீட்டில் பலவித கலர் சித்திரங்களைப் பார்த்து, பெரிய சினிமாவின் மூலம் கிடைக்கும் ஆனந்தத்தை அடையலாம். சினிமா சித்திரங்களுடன் விலை ரூ. 2-8-0 பாக்கிங் தபால் செலவு ரூ. 1/- தனி.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படல் வேண்டும்

BHARAT MACHINERY MART (S.D.K. 5) Hathras (Uttar Pradesh)


கோவிந்தன் கிப்ஸ் உபயோகிக்கிறான்—
அவன் பற்கள் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன.
கோவிந்தன் கிப்ஸ் டென்டி பிரிஸை விரும்புகிறான். அவன் சிறு வயதிலிருந்தே அதை உபயோகித்து வருகிறான்.
காலையிலும் மாலையிலும் எல்லா பற்களையும் கிப்ஸ் டென்டி பிரிஸினால் தேய்க்கிறான். மேலும்கீழுமாக—ஒரு பக்கமிருந்து மறுபக்கமாக அல்ல.
அவன் பற்கள் பிரகாசமாகவும் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன. அது கிப்ஸ் டென்டி பிரிஸினால்தான்!
நீங்களும் கிப்ஸ் உபயோகிக்கிறீர்களா?
சாம்பல், கரி, இவைபோன்ற இராசகரப்பான் பல்துலக்கும் வஸ்துக்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் ஹானி விளைவிக்கக்கூடும். நுரைபோல் மிருதுவான கிப்ஸ் டென்டிபிரிஸ் பற்களுக்கோ அல்லது ஈறுகளின் மிருதுவான பாகங்களுக்கோ ஒருபொழுதும் கெடுதல் செய்வதில்லை. கிப்ஸ் நீங்கள் எப்பொழுதும் ஒழுங்கான பற்களைப்பெற உதவுகிறது. வாய்க்கும் சுவாசத்திற்கும் புதுமணத்தை அளிக்கின்றது. மேலும் அதன் 3 கவர்ச்சிகரமான வர்ணங்களிலுள்ள டப்பிகளில் எதை தேர்ந்தெடுத்தாலும் உபயோகிக்க மிகவும் சௌகரியமாயிருக்கும்.
Gibbs
DENTIFRICE
கிப்ஸ்
டென்டிபிரிஸ்
ஒழுங்கான முறையில் பற்களை
வெண்மையாக சுத்தம் செய்கிறது
GD. 27-172 TM

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

மீண்டும் பாதி விலைக்கு குறைவான சலுகை!


15 நாட்களுக்கு மட்டும்

புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த கைக் கெடிகாரங்கள்.


ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம் கொண்டவை.




	ஒரிஜனல் விலை	தற்போது விலை
ஜெர்மன் பாக்கெட் வாட்ச்	24/-	11/-
,, உயர் ரகம்	28/-	13/-
இங்லீஷ் அலாரம் டைம்பீஸ்	40/-	19/-

No. 525  Size 6¾'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	96/-	45/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	100/-	48/-

No. 526  Size 10½'''

15 ஜுவல் ரோல்டு கோல்டு	98/-	48/-
15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ்	110/-	52/-

No. 527  Size 5¼'''

பிராசு ஷேப்

5 ஜுவல் க்ரோம் கேஸ்	45/-	22/-
5 ஜுவல் ரோல்டு கோல்டு	52/-	25/-

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபாற் செலவு இலவசம்.

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"



1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும்
பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43 - 12 - 0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் விருப்பமான கோரிக்கையை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். மீதி தொகை, வெள்ளி, விளம்பரம், தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரமாணத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டபருதூர்
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

மூல நோய் சம்ஹார
திந்திப்பு லேகியம்

மூல நோயே எல்லா நோய்களுக்கும் மூலகாரணம். எவ்வித மூல நோயாயினும் அவற்றை அறவே ஒழிக்கும் சக்தி மேற்கூறிய எமது திந்திப்பு லேகியத்திற்கு உண்டு. ராத்தல் ஒன்றுக்கு விலை ரூபாய் ஆறு மட்டும். வியாதி இரத்த மூலமா யிருப்பின் விவரம் தெரிவிக்கவும்.

N.B.—தீராத நோய் என்று தள்ளி யிருக்கும் அநேகம் நோய்களும் "அகஸ்தியர்" மருத்துவத்தின் பெருமையால் தீருமென அறியவும். எந்த நோயாயினும் எத்தனை பழக்க முடையதாயினும் தீர்க்கலாம். விவரங்களுக்கு விரிவாக எழுதவும்.

தபால் செலவு பிரத்தியேகம்

ஏஜண்டுகளும் தேவை

THE AGASTYA MANDIRAM
SIDDHA VYDYASALA
SAMADHI THOPPU, MANAKKAD
TRIVANDRUM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon